www.padippakam.com

1-15 செப்டம்பர் '93

ரூ. 3.00

# புதிய ஜனநாயகம்



# இந்துவெறி காங். மத அரசியலுக்கு தடை நாடகம்

படிப்பகம்

www.padippakam.com

*சி.பி.எம்.-ன் திருச்சி மாநாடு:*

# அம்பலமானது அரசியல் ஒட்டாண்டித்தனம்




'மார்க்சிஸ்டு'கள் தமது அரசியல் ஒட்டாண்டித்தனத்தை வெளிச்சம் போட்டு காட்டுவதற்காக திருச்சியில் ஆகஸ்டு 7,8 தேதிகளில் மாநில அரசியல் மாநாடு நடத்தி முடித்துள்ளனர்! குறிப்பாக தமது பார்ப்பன பாசத்தையும் ரௌடித்தனத்தையும் தோலுரித்துக் கொண்டார்கள்.

சி.பி.எம்.-ன் மாநாட்டு விளம்பரத்திற்கு இணையாக சி.பி.எம்.-ன் அரசியல், நடவடிக்கைகளை அம்பலப்படுத்திய மக்கள் கலை இலக்கியக் கழகத்தினரின் பிரச்சாரமும் தட்டி, சுவரொட்டி, பிரசுரம் வாயிலாக திருச்சி மக்களிடையேயும், சி.பி.எம். அணிகளிடையேயும் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியது.

● ஆர்.எஸ்.எஸ். - பாரதிய ஜனதாவை எதிர்ப்பதாக கூறும் போலிகளே, பாய்லர் ஆலையில் பி.எம்.எஸ். என்ற ஆர்.எஸ்.எஸ். பினாமி பார்ப்பனச் சங்கத்துடன் சி.ஐ.டி.யு. கூட்டு சேர்ந்து தொழிலாளர்களுக்கு எதிராக துரோகமிழைத்தது ஏன்?.

● சி.ஐ.டி.யு., தொழிலாளர்களின் தோழன் என்றால், பாய்லர் ஆலையில் போராடிய 5 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்யச் சொல்லி நிர்வாகத்துடன் கருக்காலி வேலை செய்தது என்ன தோழமை உறவு?

● 4 ஆட்டோ நின்றாலே சங்கம் கட்டி சந்தா வசூலிக்கும் 'மார்க்சிஸ்டு'கள் காவேரி என்ஜினியரிங் தொழிற்சாலையிலும், டி.வி.எஸ். தொழிற்சாலையிலும் தொழிற்சங்கம் வைக்காதது ஏன்? பார்ப்பன முதலாளிகள் எனும் பாசத்தால்தானே?

● ஊழலிலும் அதிகாரத் திமிரிலும் ஆளும் ஜெயலலிதாவை 5 ஆண்டுகள் முடிவதற்குள் ஆட்சியிலிருந்து அகற்றக்கூடாது என்று கூறியது பார்ப்பன பாசத்தால் தானே?

● ஆர்.எஸ்.எஸ். கும்பலின் "இந்து ஒற்றுமை"யை தோலுரித்த கருவறை நுழைவுப் போராட்டத்தை "சாதியப் போராட்டம், வர்க்கப் போராட்டம் அல்ல" என்று பூணூல் கம்யூனிஸ்டுகளே, மேற்கு வங்கத்தில் உங்கள் தலைவர் தினேஷ் மஜூம்தாரின் மகளுக்கு "மார்க்சிய சிந்தனை கொண்ட பிராமண அல்லது கயாஸ்தா சாதியைச் சேர்ந்த மணமகன் தேவை" என்று கட்சிப் பத்திரிக்கையிலே விளம்பரம் கொடுத்தது வர்க்க உறவை நாடியா? சாதி உறவை நாடியா?

இக்கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்ல முடியாத சி.பி.எம். தலைவர்களும், குண்டர்களும் ம.க.இ.க. மீது தாக்குதல் தொடுத்தனர். 7-ந் தேதி அதிகாலையில் சுவரொட்டி ஒட்டும்போதே தேவர்ஹால் அருகே ம.க.இ.க.-வினரை தடுத்து தாக்க முற்பட்ட சில காலிகள் பிறகு பின்வாங்கி கட்சித் தலைமையிடம் புகார் சொல்ல போய்விட்டனர். பிறகு 7 மணிக்குமேல் ஜீப்பில் கும்பலாக வந்து ம.க.இ.க. சுவரொட்டிகளை சுரண்டி கிழித்தனர். பேரணி வந்து கொண்டிருந்தபோது முதலில் பாலக்கரை - பிரபாத் திரையரங்கு அருகே "சி.பி.எம்.-ன் பார்ப்பன பாசம்" என்று தலைப்பிட்ட பிரசுரம் கொடுத்துக் கொண்டிருந்த ம.க.இ.க.-வைச் சேர்ந்தவர்கள் தாக்கப்பட்டனர். பிரசுரத்தை பிடுங்கி கிழித்து போட முயன்றபோது "ஜனநாயக உரிமையைப் பறிக்காதே! நேர்மையிருந்தால் பிரசுரத்திற்கு பதில் சொல்!" என்று முழக்கமிடவே, மக்களும், சி.பி.எம். அணிகளுமே "அவர்கள் கொடுத்துவிட்டுப் போகட்டுமே, பிடுங்கி கிழிப்பது அசிங்கமாக இல்லையா?" என்று கேட்டு தடுக்கவே விட்டு விட்டு போய்விட்டனர். இரண்டாவதாக தெப்பக்குளம் தபால் நிலையம் அருகே பிரசுரம் விநியோகித்துக் கொண்டிருந்த பு.மா.இ.மு.-வினர் திண்டுக்கல் ராணிமங்கம்மாள் போக்குவரத்து கழகத்தைச் சேர்ந்த சி.ஐ.டி.யு. காலிகளால் தாக்கப்பட்டனர். பிரசுரத்தைப் பிடுங்கி கிழித்துப் போட்டார்கள். சி.பி.எம். காலிகளிடம் இருந்து பு.மா.இ.மு.-வினரை மீட்டு உறையூர் போலீசார் ஒரு இடத்தில் உட்கார வைத்து பாதுகாப்பளித்தனர். இதற்குள் ஊர்வலத்திற்கு முன்னால் ஜீப்பில் சென்று கொண்டிருந்த தலைவர்களுக்கு செய்தி போய், அவர்களும் "விடாதே பிடி, அடி" என உசுப்பிவிடவே, முண்டா தட்டிக் கொண்டு வந்த சிலர் கூச்சல் போட்டு தொல்லை தந்தால் போலீசார் அவர்களை அப்புறப்படுத்தினர். பிறகு ஊர்வலத்தின் வழிநெடுக இருந்த ம.க.இ.க. தட்டிகளை கிழித்து நாசமாக்கி தமது ஆத்திரத்தை அற்பத்தனமாகப் போக்கிக் கொண்டார்கள். மாநாட்டில் பேசிய சங்கரைய்யா, "நக்சலைட்டுகள், ஆர்.எஸ்.எஸ்.-ஐ எதிர்க்கவில்லை. ஏகாதிபத்தியங்களை எதிர்க்கவில்லை நிலப்பிரபுத்துவ கொடுமைகளை எதிர்க்கவில்லை. ஆனால் நம்மை எதிர்க்கிறார்கள். ரோட்டில் கண்டபடி கிறுக்கி வைத்திருக்கிறார்கள்" என்று ஆத்திரத்தைக் கொட்டினாரே ஒழிய யாரும் ம.க.இ.க.வினரின் கேள்விகளுக்கு பதிலளிக்கவே இல்லை. பதில் இல்லாததனால்தான் கைநீட்டி விட்டார்களோ? ஆனால் மாநாட்டிற்கு வந்தவர்களில் பலர் கிழிந்த பிரசுரத்தை பொறுக்கியெடுத்து, இணைத்து படிக்க முற்பட்டதையும் இதை சிலர் தடுத்தாலும் மீறி பிறகு படிப்பதற்காக மறைமுகமாக பத்திரப்படுத்திக் கொண்டதையும் பார்க்க முடிந்தது.

மற்றபடி மாநாடு, அ.தி.மு.க., தி.மு.க., காங்கிரஸ் மாநாடுகளைப் போலவே ஊர்சுற்றிப் பார்க்க வந்த கூட்டத்தினரோடும், அவர்கள் திரையரங்குகள், மதுக்கடைகள், காவிரி ஆற்றுப் படுகைகள், சாலையோரக் கடைகளை ஆக்கிரமித்து அடித்த கும்மாளத்தோடும் திருச்சி நகரை உலுக்கி பின் முடிவடைந்தது. மாநாட்டிற்கான அடையாள அட்டைகளை அணிகளிடம் விற்றதில் ஆண்களுக்கு 3 ரூபாய், பெண்களுக்கு 2 ரூபாய் என்று கடைபிடித்தது, சி.பி.எம்.-ன் பெண்ணுரிமை - சம உரிமைக்கு எடுத்துக்காட்டு! "சுதந்திரம் சோறு போடுமாம், அதுசரி குழம்பு எது ஊத்துமாம்?", "டங்கலின் பெயர் தொங்கலே" என்பது போன்ற அர்த்தமுள்ள முழக்கங்கள் தாங்கிய அட்டைகளை ஏந்திவந்து தமது அரசியல் ஆய்வுகளை மக்களுக்கு காண்பித்தனர்! ஊர்வலத்தில் பலர் விசில் அடித்து பறை அடித்து அசிங்கமாக ஆடி வந்ததும் பல்டி அடித்து வந்ததும் மாநாட்டுப் பந்தலில் முன்னால் இடம் பிடிக்க வேண்டுமென பலர் ஊர்வல வரிசையை விட்டு விலகி முண்டியடித்துக் கொண்டு முன்னேறியதும் சி.பி.எம்.-ன் கட்டுப்பாடு - ஒழுங்குக்கு உதாரணங்கள்! மாநாட்டில் பேசிய தலைவர் எல்லாம், இந்துமத வெறி எதிர்ப்பு என்ற பெயரில் மதஒற்றுமையை வலியுறுத்தி அதற்கு சங்கரர், ராமன், இந்து மதத்தையும் உயர்த்திப் பிடித்து தமது பார்ப்பன சேவையைக் காட்டினார்கள். புதிய பொருளாதாரக் கொள்கை எதிர்ப்பு, ஊழல், அந்நியக்கடன், வேலையில்லாத் திண்டாட்டம் என எல்லா பிரச்சினைக்கும் வழக்கமாகப் பாடும் அதே ஒப்பாரிகள்! இம்மாநாடு எந்தவிதத்தில் அரசியல் திருப்பமாக உள்ளது என்று நமக்குப் புரியவில்லை. ஒருவேளை அவர்கள் கட்சிக்குள்ளிருக்கும் நெருக்கடிக்கு வேண்டுமானால் ஏதாவது அரசியல் திருப்பமாக இருந்திருக்கலாம். அதை அவர்கள்தான் விளக்க வேண்டும்.

## அறிவிப்பு

அன்பார்ந்த தோழர்களே!

ஆர்.எஸ்.எஸ்.-ன் 'தேசத்துரோக பார்ப்பன - பாசிச பாரம்பரியம்' என்ற தலைப்பிட்ட கட்டுரைத் தொடர் இடமின்மை காரணமாக இவ்விதழில் வெளியிட முடியவில்லை. அடுத்த இதழிலிருந்து தொடரும்.

— ஆசிரியர் குழு —

படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

எட்டாம் ஆண்டு

19-20

16-31 ஆக. - 1-15 செப். '93

உள்நாடு:
தனி இதழ்: ரூ.3.00
ஆண்டு சந்தா: ரூ.72.00

வெளிநாடுகள்
(வான அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
இரா.சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# இன-மொழி உரிமை பறிக்கும் மசோதாக்கள்

"அரசியலையும் மதத்தையும் பிரிப்பது". "வகுப்பு வாதத்திடம் இருந்து அரசியலைக் காப்பது". "அரசியல் நோக்கங்களுக்காக - ஆதாயங்களுக்காக மதத்தைக் கேடாகப் பயன்படுத்துவதைத் தடுப்பது" - என்கிற பெயரில் நாடாளுமன்றத்தின் முன்வைக்கப்பட்ட இரு மசோதாக்களை விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதற்குச் சற்று முன்பாக காலவரையறை இல்லாமல் ஒத்திவைத்திருக்கிறது நரசிம்மராவ் தலைமையிலான மத்திய அரசு. கடந்த சில ஆண்டுகளாக வகுப்புவாத சக்திகள், குறிப்பாக இந்து மத பாசிஸ்டுகள் நாடு முழுவதும் நடத்திவரும் மதவெறியாட்டங்களைத் தொடர்ந்து, அவற்றையே காரணமாகக் காட்டி இவ்விரு மசோதாக்கள் கொண்டு வரப்பட்டன. ஆனால் அவற்றைத் தனிமைப்படுத்தித் தாக்குவதற்கு பதில், அதற்கான முயற்சியே இந்து மதவெறி பாசிஸ்டுகளின் இன்னுமொரு அரசியல் வெற்றியாக முடிந்துவிட்டது. இதற்கும் பாசிச சகுனி நரசிம்மராவ் கும்பலின் முழு ஒத்துழைப்புதான் காரணமாக இருந்தது.

அரசியலையும் மதத்தையும் பிரிப்பதற்கான சட்டமியற்றப் போவதாக கடந்த சில மாதங்களாகவே காங்கிரசு அரசு பேசி வந்தது. குறிப்பாக அயோத்தி பாபரி மசூதி இடிப்பையும், அதனைத் தொடர்ந்து நாடு முழுவதும் நடந்த மதவெறிப் படுகொலைகளையும் ஆர்.எஸ்.எஸ் - சங்கப் பரிவாரங்களின் வளர்ச்சியையும் காரணங்களாகக் காட்டி இதற்கான அவசியத்தை அரசு வலியுறுத்தி வந்தது. ஆனால் கடந்த ஜூலை மாதம் பாரதீய ஜனதாவோடு தேசிய முன்னணி - இடது சாரி கட்சிகளும் இணைந்து நரசிம்மராவ் அரசை கவிழ்க்கும் முயற்சியில் மயிரிழையில் தப்பிப்பிழைத்தும் அக்கட்சிகளின் கூட்டைப் பிளப்பதற்காக அவசர அவசரமாக இரண்டு மசோதாக்களை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தது.

அரசியலையும் மதத்தையும் பிரிக்கும் நோக்கத்தை இந்துமதவெறி பாசிசக் கட்சிகள் மற்றும் அதன் சங்கப் பரிவாரங்கள் தவிர அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் நாட்டின் பெரும்பான்மையான மக்களின் ஆதரவு உண்டு என்பது தெரிந்ததே. ஆனால் பாசிச சகுனி நரசிம்மராவ் கும்பலின் நோக்கம் அதுவல்ல. தனது ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு எதிர்க்கட்சிகள் அனைத்தும் கைகோர்த்துக் கொள்வதைத் தடுத்து அவற்றுக்கிடையே அரசியல் ரீதியிலான பிளவை ஏற்படுத்துவது; மத்தியப் பிரதேசம், உத்திரப்பிரதேசம், இமாசலப் பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் முதலிய நான்கு மாநிலங்களிலும் வரவிருக்கும் தேர்தல்களில் ஆதாயம் அடையும் வகையில் தேர்தல் சட்டங்களை மாற்றிவிடுவது ஆகியவை காங்கிரசின் உடனடி நோக்கமாகும்.

இவற்றைவிட முக்கியமாக அரசியலையும் மதத்தையும் பிரிப்பது என்கிற பெயரில் அரசு இயந்திரத்தையும், அரசியல் சட்டத்தையும் மேலும் பாசிச மயமாக்குவது; நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறை என்ற சவப்பெட்டியில் இன்னொரு ஆணி அறைவது; வகுப்புவாதச் சக்திகளின் வளர்ச்சியைத் தடுப்பது என்கிற பெயரில் ஒடுக்கப்பட்ட சாதி, மொழி, இன அடிப்படையிலான ஜனநாயக சக்திகளை அடக்கி ஒடுக்குவது - ஆகியவை காங்கிரசின் நீண்டகால நோக்கமாகும்.

மதத்தையும் அரசியலையும் பிரிப்பதற்காகக் கொண்டுவரப்படும் சட்டத்தின் மூலம் இந்த நோக்கங்களை எப்படி சாதிக்க முடியும் என்று பலரும் எண்ணக்கூடும். ஆனால் அதுதான் பாசிச காங்கிரசின் கைவந்த கபடத்தனம். இதற்குக் காங்கிரசின் ஆட்சியில் பல சான்றுகள் உள்ளன. அதிகாரங்களைப் பரவலாக்குவது என்கிற பெயரில் கொண்டுவரப்பட்ட பஞ்சாயத்து ஆட்சிச்சட்டம் மாநிலங்களின் அதிகாரங்களைப் பறிக்கவில்லையா? அத்தியாவசியப் பணிகளைப் பாதுகாப்பது என்கிற பெயரில் கொண்டு வரப்பட்ட "எஸ்மா" சட்டத்தைக் கொண்டு தொழிற்சங்கங்களை ஒடுக்கவில்லையா? பஞ்சாப் பயங்கரவாதிகளைக் கட்டுப்படுத்துவதற்கென்று போடப்பட்ட "தடா" சட்டத்தைக் கொண்டு அப்பாவி சிறுவர் - சிறுமிகளையும் வயோதிகப் பெண்களையும் பத்திரிக்கையாளர்களையும் கொடுஞ்சிறைக்குள் தள்ளவில்லையா? தேசியப் பாதுகாப்புச் சட்டத்தால் ஜனநாயக சக்திகளை ஒடுக்கவில்லையா? அவதூறு தடுப்புச் சட்டம் போட்டு பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு போட முடியவில்லையா?

இதேமாதிரித்தான் மதத்தையும் அரசியலையும் பிரிப்பது என்கிற பெயரில் கொண்டு வந்த மசோதாக்கள் காங்கிரசுக்கே உரிய கபடத்தனங்கள் நிரம்பியுள்ளன. இந்து மத பாசிச சங்கப் பரிவாரங்களுடன் நிழல் சண்டை போட்டுக் கொண்டிருக்கும் பாசிச சகுனி நரசிம்மராவ் கும்பல் பாபரி மசூதி இடிப்பு, ஆர்.எஸ்.எஸ். விசுவ இந்து பரிசத் மற்றும் பஜ்ரங்தள் ஆகியவற்றைத் தடை செய்வது போன்ற விவகாரங்களில் செய்தது போலவே "அடிப்பதுபோல அடிக்கிறேன். அழுவதுபோல அழு!" என்கிற நாடகமாடுகிறது. இன்னொரு வகுப்புவாத பாசிசக் கட்சியான காங்கிரசின் இந்த அணுகுமுறைதான் அரசியலையும் மதத்தையும் பிரிப்பதற்கான முயற்சி இந்து மத பாசிச சக்திகளின் அரசியல் வெற்றியாக முடிந்ததற்குக் காரணமாக அமைந்தது.

காங்கிரசு அரசு கொண்டு வந்துள்ள மசோதாக்களில் ஒன்று அரசியல் நிர்ணய சட்டத்துக்கு எண்பதாவது திருத்தம் தருவது. இது இரண்டு அம்சங்களைக் கொண்டிருக்கிறது. முதலாவது அம்சம் அரசியல் நிர்ணயச் சட்டத்தின் முன்னுரையில் உள்ள மதச் சுதந்திரத்துக்கான உரிமை என்கிற பிரிவில் ஒரு உட்பிரிவைச் சேர்க்கிறது. அதன்படி அரசானது எல்லா மதங்கள் மற்றும் மதப்பிரிவுகளையும் சமமாக மதித்து நடத்தும்; பல்வேறு பிராந்திய, சமூக, மாறுபட்ட, வேறுபட்ட, தனித்துவமிக்க பங்களிப்புகளை உள்ளடக்கிய இந்தியாவின் கூட்டுக்

படிப்பகம்

www.padippakam.com

கலாச்சாரத்தை மதித்து உயர்த்திப் பிடித்து வளர்க்கும்; எந்தவொரு மதத்தையோ, மதப்பிரிவையோ, அரசு ஏற்பதாக ஆதரவு தந்து முன்னேற்றவோ, ஊக்கப்படுத்தவோ செய்யாது; எந்தவொரு மதத்தோடோ, மதப்பிரிவோடோ இந்தியக் கூட்டுக் கலாச்சாரத்தின் எந்தவொரு தனிப்பிரிவோடோ அரசு தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளாது.


காங்கிரசு அரசு கொண்டுவரும் சட்டத் திருத்தங்களில் ஓரளவு ஏற்கூடியதாகத் தோன்றும் மேற்கண்ட அம்சமும் மேலோட்டமானதுதான். எந்தவொரு மதவெறி அரசும்கூட எல்லா மதங்களையும் சமமாக மதிப்பதாக சட்டப்படி வாக்குறுதி அளிக்கலாம். ''மதச்சார்பின்மை'' என்பதை மேலும் துலமாக வரையறுக்க மறுப்பதன் மூலம் அரசின் மதச்சார்பு, மூடிமறைக்கப்படுகிறது. அதோடு மதத்தையும், கலாச்சாரத்துக்கும் இடையே வேறுபடுத்தி வரையறுக்க மறுத்து, இரண்டையும் இணைத்துக் குழப்புவதன் மூலம் கலாச்சாரம் என்கிற பெயரில் ஒளிந்து கொண்டு மதவெறி, மதச்சார்பு, நடவடிக்கைகளில் அரசு ஈடுபடுவதை சட்டப்படி ஏற்கிறது.

அரசியல் நிர்ணயச் சட்டத்துக்குத் தரப்படும் திருத்தத்தின் இன்னொரு அம்சம் முற்றிலும் பாசிசத்தன்மை வாய்ந்ததாகும். இதன்படி, ''மதம், இனம், பிறப்பிடம், வாழ்விடம், மொழி, சாதி அல்லது சமூக அடிப்படையில் இந்தியக் குடிமக்களிடையே இணக்கத்தை குலைப்பது, பகை - வெறுப்பு உணர்வைத் தூண்டுவது ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடும் எந்தவொரு அமைப்பையும் நாடாளுமன்றமும் சட்டமன்றங்களும் தடை செய்யலாம்; இவ்வாறு செய்வது அடிப்படை உரிமையைப் பாதிப்பதாகாது''

இது காங்கிரசின் கபடத்தனத்தை அம்பலப்படுத்திவிடவில்லையா? மதத்தையும், அரசியலையும் பிரிக்கும் நோக்கத்துடன் கொண்டு வரப்படுவதாகக் கூறப்படும் சட்டத்திருத்தத்தில் இனம், மொழி, வாழ்விடம், பிறப்பிடம் சாதி அல்லது சமூக அடிப்படையிலான சங்கம் வைத்துக் கொள்ளவும் இயக்கம் நடத்தவுமான ஜனநாய உரிமையைப் பறிப்பதற்கான அவசியம் ஏன் வந்தது? எலியைப் பிடிப்பதற்காக வீட்டைக் கொளுத்துவதை முட்டாள்தனம் என்போம். ஆனால் காங்கிரசின் கபடத்தனமே வீட்டைக் கொளுத்துவதற்காக எலியைப் பிடிப்பதாக நாடகமாடுவதுதான்.

ஏற்கனவே 1961-இல் கொண்டு வரப்பட்ட சட்டவிரோத நடவடிக்கைகள் (தடைச்) சட்டமும், 1972-இல் கொண்டு வரப்பட்ட அதற்கான திருத்தமும் பிரிவினை வாதத்தைத் தடுப்பது என்கிற பெயரில் இனம், மொழி, வகுப்பு, சாதி அல்லது சமூக அடிப்படையில் இணக்கமின்மையையும், பகைமையையும் தூண்டும் நபர்களைத் தண்டிக்கவும், அத்தகைய அமைப்புகளைத் தடைசெய்யவும் அதிகாரம் அளிக்கிறது. இப்போது ஜனநாயக அடிப்படையில் நியாயமான கோரிக்கைகளுக்கான சங்கம் வைக்கவும் இயக்கம் நடத்திடவுமான அடிப்படை உரிமையையும் பறிக்கிறது.

இதே அடிப்படையில் அரசியல் கட்சிகளைத் தடை செய்யவும், வேட்பாளர்கள் போட்டியிடுவதைத் தடுக்கவும், வெற்றி பெற்றவர்களின் பதவியைப் பறிக்கவும் 1951-ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்திற்கு திருத்தம் தருவதாகத்தான், பாசிச சகுனி நரசிம்மராவ் கும்பலின் இரண்டாவது மசோதா உள்ளது. ஏற்கனவே 1969-இல் கொண்டு வரப்பட்ட கிரிமினல் மற்றும் தேர்தல் சட்டங்கள், திருத்தச்சட்டம் மதம், இனம், மொழி, சாதி, அல்லது வகுப்பு அடிப்படையில் பகைமை - வெறுப்பைத் தூண்டும் வகையிலான நடவடிக்கைகளில் ஈடுபடுவது குற்றமாகும் என்றுள்ளது. இதன்படி மராட்டியத்தில் சில சிவசேனை, பாரதீய ஜனதா எம்.எல்.ஏ-க்களின் தேர்தல்கள் செல்லாது என உயர்நீதிமன்றங்க



**அதன் நிறுவன காலத்தில் இருந்தே காங்கிரசே ஒரு இந்துமத வகுப்புவாதக் கட்சிதான். இந்து மதவெறி சக்திகளுடன் ராவ் நிழல்சண்டை போடுகிறார்.**

ளும் தீர்ப்பளித்துள்ளன. இப்போது கொண்டு வரப்படும் திருத்தல்களின்படி தேர்தல் நடக்கும் முன்பே, தேர்தல் அதிகாரியே எந்தவொரு வேட்பாளரையும் தகுதி நீக்கம் செய்து போட்டியிலிருந்து விலக்கி விட முடியும்.

இப்படிப்பட்ட சட்டத்திருத்தங்களைக் கொண்டு வருவதில் காங்கிரசின் உள்நோக்கம் என்ன? அரசியலை மதத்தில் இருந்து பிரிப்பதும், மதவெறி சக்திகளை ஒடுக்குவதுமா? இல்லை. அதன் நிறுவன காலத்தில் இருந்தே காங்கிரசே ஒரு இந்துமத வகுப்புவாதக்கட்சி; மத அடிப்படையில் நாடு துண்டாடப்படவும் இறுதியாக ஆர்.எஸ்.எஸ். சங்கப் பரிவாரங்களுடன் கள்ளக் கூட்டுச் சேர்ந்து இந்துமத பாசிச சக்திகள் ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்கவும் உடந்தையாக உள்ள கட்சி என்பதும் சமீபகாலங்களில் தெளிவாக நிரூபிக்கப்பட்டுவிட்டது. ஆகவேதான் அரசியலையும் மதத்தையும் பிரிப்பது என்கிற பெயரில் இனம், மொழி, சாதி-சமூக நீதி, வாழ்விடம் பிறப்பிடம் அடிப்படையிலான உரிமைகளுக்காகப் போராடும் சக்திகளை ஒடுக்குவதற்கான பாசிச சட்டம் கொண்டு வருகிறது. இந்தச் சட்டத் திருத்தங்களினால் பாரதீய ஜனதாவும் அதன் துணை அமைப்புகளும் பாதிக்கப்படமாட்டாது. முஸ்லீம்லீக், அகாலிதள் உட்பட சிறுபான்மை மத, இன, மொழி, பிராந்தியக் கட்சியே பாதிக்கப்படும்.

பாசிச சகுனி நரசிம்மராவ் கும்பலின் இந்தச் சதியைப் போலிக் கம்யூனிஸ்டுகள் தலைமையிலான இடதுசாரி கூட்டணி கொஞ்சமும் வெட்கமின்றி ஒத்துழைப்புத் தருகிறது. மதவெறி வகுப்புவாதத்தை அரசியல் சித்தாந்த ரீதியில் எதிர்த்துப் போராடி மக்களிடம் பொதுக்கருத்தை ஏற்படுத்த வேண்டும். இத்தகைய சட்டத் திருத்தங்கள் மூலம் அதைச் செய்ய முடியாது என்று நம்பூதிரி எழுதுகிறார். ஆனால் அவரது கட்சியின் நாடாளுமன்றத் தலைவர் சோமநாத் சட்டர்ஜி தமது கட்சி மீண்டும் மீண்டும் வலியுறுத்தியதாலே இந்த மசோதாக்கள் கொண்டு வரப்பட்டன எனப் பீற்றிக்கொள்கிறார். இனம், மொழி, சாதி, சமூகம், பிறப்பிடம், வாழ்விடம் அடிப்படையில் இயங்கும் அமைப்புகளைத் தடைசெய்வது, அந்த நபர்களைத் தண்டிப்பதையும் மத நடவடிக்கைகளுக்கு எதிரான சட்டத்தோடு சேர்க்கக் கூடாது; மற்றபடி பிறகு கொண்டு வரலாம்; வேட்பாளர்களைத் தகுதி நீக்கம் செய்யும் அதிகாரம் தேர்தல் அதிகாரிகளிடம் தரக்கூடாது என்பதுதான் இந்த ''இடது'' சாரிகளின் நிலைப்பாடு. இதை மாற்றும் கோரிக்கையை ஏற்காவிடினும் மசோதாவை ஆதரிப்பது என்பது அவர்களின் முடிவு.

இனம், மொழி, சாதி - சமூக அரசியலைக் கொண்டுள்ள தேசிய முன்னணிக் கட்சிகள், இம்மசோதாக்களை எதிர்க்கின்றன. மசோதாக்களை ஆதரித்தால் குறிப்பாக தி.மு.க. மற்றும் தெலுங்கு தேசக் கட்சிகள் தேசிய முன்னணியில் இருந்து விலகி விடுவாதாக எச்சரித்ததாலும், தே.மு.வுடனான உறவு பாதிக்கும் என்பதால் ''இடது'' முன்னணி இறுதி நேரத்தில் ஆதரவை விலக்கிக் கொள்ள வேண்டி நேர்ந்தது. அதனால் மசோதாக்கள் நிறைவேறத் தேவையான மூன்றில் இரண்டுபங்கு ஓட்டுபெற முடியாத நிலையில் அவை ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

இது இந்துமத பாசிச சக்திகளுக்கு சாதகமானதாக இருப்பினும், விரைவில் சில திருத்தங்களுடன் மீண்டும் கொண்டு வரப்படும். அதற்குள்ளாக பாசிச சகுனி நரசிம்மராவ் கும்பலின் சதிகளையும், போலிக் கம்யூனிஸ்டுகள் அவற்றுக்கு உடந்தையாக இருப்பதையும் அம்பலப்படுத்தி இந்து மத பாசிச சக்திகளுக்கு எதிரான தாக்குதலை ஒரு முனைப்படுத்தித் தாக்குவது ஜனநாயக சக்திகளின் கடமையாகும். ●

படிப்பகம்

www.padippakam.com

காவிரி நீர்:

# ஆயுதமானது ஜெயாவுக்கு வேதனையானது மக்களுக்கு

**சரிந்துவிழும் அரசியல் செல்வாக்கைத் தக்கவைத்துக் கொள்ள ஜெயா ஆடிய நாடகமே உண்ணாவிரதம் என்பது நிரூபனமானது.**

'எங்களது நீர்த் தேக்கங்கள் நிறைந்த பின்தான் தமிழகத்துக்குத் தண்ணீர் திறந்து விடப்படும்' எனக் கர்நாடக முதல்வர் வீரப்ப மொய்லி, ஜெயா உண்ணாவிரதமிருந்த பொழுது அறிவித்தார். அவர் சொன்னபடிதான் கர்நாடக அரசு, காவிரி நீர் பிடிப்பு பகுதியில் சமீபத்தில் நல்ல மழை பெய்த பொழுது நடந்து கொண்டது. இப்படி கர்நாடகம் இழுத்த இழுப்புகளுக்கெல்லாம் தக்கபடிதான் காவிரி பிரச்னை சென்று கொண்டிருக்கிறது. ஆனால் இது தமிழகத்துக்கு காவிரியின் மீதான உரிமையை மறுத்துவிட்டு, அதனைக் காவிரியின் வடிகால் பகுதி என மறைமுகமாக ஏற்றுக் கொள்ள நிர்ப்பந்திக்கும் செயலாகும்.

ஜெயாவுக்கு இவை பற்றியெல்லாம் அக்கறை கிடையாது. தனது சரிந்து விழும் அரசியல் செல்வாக்கைத் தக்கவைத்துக் கொள்ள அவர் ஆடிய ஒரு நாடகம் என்பதனைத் தவிர இந்த உண்ணாவிரதத்திற்கு வேறு எந்த உள்ளார்ந்த நோக்கமும் கிடையாது. எதிர்த்தரப்பினரை - குறிப்பாக தமிழக காங்கிரசை ஊழல் அதிகாரமுறைகேடுகளைக் காரணம் காட்டி தன்னை மிரட்டுவதிலிருந்து, திசை திருப்புவதில் இருந்து அவர் தற்காலிகமாக ஓரளவு வெற்றி பெற்றுள்ளார் என்றே கூறலாம். அதனால்தான் உப்பு சப்பில்லாத இரண்டு கமிட்டிகளை அமைக்க மத்திய அரசு கொடுத்த வாக்குறுதியையே 'மாபெரும் வெற்றி'யாகச் சித்தரித்து உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டுள்ளார். இதனுடன் அந்த நான்கு நாட்களிலும் நடந்த வன்முறைச் செயல்களால் மக்களிடம் எழுந்த அதிருப்தி; இதனையே காரணமாக வைத்து வாழப்பாடி கோஷ்டி எதிர்த்தாக்குதல் தொடுத்தது; பிரதமர் ராவ் தனிப்பட்டரீதியில் ஜெயாவைக் கண்டு கொள்ளாமலிருந்து போன்றவையும் அவர் உண்ணாவிரதத்தை விரைந்து முடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருந்தன.

அரசியல் சாசனப் பிரிவு 256-ன் கீழ் தண்ணீர் திறந்து விடச் சொல்லி கர்நாடகாவுக்கு மத்திய அரசு உத்திரவிடாமல் உண்ணாவிரதத்தை முடிக்க மாட்டேன்' எனச் சபதமிட்டு உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். உடனே, 'எந்தக் கட்சியும் கடற்கரைச் சாலையில் உண்ணாவிரதமோ, ஆர்ப்பாட்டமோ நடத்தக் கூடாது' என அரசின் ஆணை மீறப்பட்டு போக்குவரத்து நிறுத்தப்பட்டது; காற்றுவீச இரு குளிர் காற்றுப் பெட்டிகள் மற்றும் மின் விசிறிகள்; படுத்து உறங்க நுரை மெத்தைக் கட்டில்; அதனைச் சுற்றி குண்டு துளைக்காத திரைச் சீலைகள்; குளிக்க மற்றும் பிற வசதிக்கு குளிர்சாதன வசதி பொருத்தப்பட்ட வேன்; தாகம் தீர்க்க சுத்திகரிக்கப்பட்ட நீர்; அரசாங்க செலவில் உணவுப் பொட்டலங்கள்; துப்பாக்கி ஏந்திய பாதுகாப்பு அதிகாரிகள்; தொலைபேசி மற்றும் ஃபேக்ஸ் (FAX) வசதிகள் என நான்கு நாட்களில் மக்களின் வரிப்பணம் சுமார் ரூ. 2 கோடி ஜெயாவின் சொந்த அரசியல் லாபத்துக்காக பாழடிக்கப் பட்டது.

இது தவிர எடுபிடிகளால் ஜெயாவின் 'தியாக'த்தைப் பற்றி பக்கம் பக்கமாக விளம்பரங்கள் செய்யப்பட்டன, 'அவாளின்' பத்திரிகைகளெல்லாம் ஜெயாவின் சோர்ந்த நிலையை பல கோணங்களில் படம்பிடித்து அநுதாபத்தை உருவாக்க முயற்சித்தன. தேர்தல் அறுவடைக்காக உண்ணாவிரத நாடகம் 'வீடியோ'வில் படமாக எடுக்கப்பட்டது. மேலும் கவர்ச்சி ஊட்ட திரையுலகின் முன்னணி நடிகர் - நடிகைகளுக்கெல்லாம் 'அம்மா'வைக் கண்டு செல்ல அழைப்பு விடப்பட்டது. தமிழகத்தின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் ஜனங்கள் திரண்டு வந்ததைப் போன்று எடுபிடி மந்திரிகளாய் கூட்டம் சேர்க்கப்பட்டது. இதற்காக சென்னையில் 'குடிநீர் பிரச்னைக்காக அம்மா உண்ணாவிரதமிருக்கிறார்' என அண்டப்புளுகு அவிழ்த்துவிடப் பட்டது. போக்குவரத்தை நிறுத்தியும், கலவரங்களின் மூலம் பயபீதியூட்டியும் மாமூல் வாழ்க்கையைப் பாதிக்கச் செய்து நான்கு நாட்களும் தமிழகமே ஜெயாவின் பின்னால் திரண்டிருந்ததைப் போன்ற பிரேமை உருவாக்கப்பட்டது.

மறுபுறம் மத்திய அரசோ இடைக்காலத் தீர்ப்பில் கூறியுள்ளபடி கர்நாடக அரசு ஏன் தண்ணீர் திறந்துவிடவில்லை என்பதிலெல்லாம் அக்கறை கொள்ளவில்லை. கர்நாடக அரசு ஒப்புக் கொள்ளாத பொழுதே அதை மறைத்துவிட்டு 'இரு கமிட்டிகள்' அமைக்க வாக்குறுதி மட்டும் தந்துவிட்டு தப்பித்துக் கொண்டது. கர்நாடக அரசின் மறுப்புகளை எந்தவித அக்கறையும் செலுத்தாது அலட்சியப்படுத்திய ஜெயா 'தண்ணீர் திறந்துவிட மத்திய அரசு வாக்குறுதி தந்திருக்கிறது' என பொறுப்பை ராவ் அரசின் மீது சுமத்திவிட்டு நழுவிக் கொண்டார். 'நாங்கள் அதுபோல் எந்த வாக்குறுதியும் அளிக்கவில்லை' என வி.சி. சுக்லா அம்பலப்படுத்திய பின்னும், உண்ணாவிரதம் முடித்த கையோடு ஜெயா கும்பல் வெட்கமின்றி மாநில மெங்கும் வெற்றிவிழாக் கூட்டங்களை நடத்திவருகிறது. ஜெயாவின் பாதந்தாங்கிகள் அவருக்கு 'காவிரி தந்த கலைச் செல்வி' எனும் பட்டமளித்துள்ளதோடு, உண்ணாவிரதம் இருந்த இடத்தில் 'நினைவு தூண்' ஒன்றை எழுப்பப் போகின்றார்களாம்.

மத்திய அரசு அமைக்க ஒப்புக் கொண்டுள்ள கமிட்டிகள் தண்ணீர் வரத்து பற்றிய புள்ளிவிவரங்களைத் தான் சேகரிக்கும்; அதற்கு மேல் அதற்கு எந்த அதிகாரமும் கிடையாது. மேலும் கர்நாடகம் ஒப்புக் கொள்ளாத நிலையில் இக்கமிட்டிகள்

**சொகுசு செயற்கை பங்களாவில் ஜெயா உண்ணாவிரதம்; மக்கள் வரிப்பணம் 2 கோடி ரூபாய் பாழ்.**



படிப்பகம்

www.padippakam.com

அமைப்பதே இயலாத ஒன்றாகும். கர்நாடக அரசு மறுத்தபின்புகூட மத்திய அரசு நதிநீர் பகிர்வு தாவா சட்டப்படி அதன்மேல் நடவடிக்கை எடுக்க மறுத்துவருவதே மத்திய அரசின் அக்கறைக்கு எடுத்துக்காட்டு. இதனுடன் சமீபத்தில் பாராளுமன்றத்தில் ராவ், 'காவிரி பிரச்னை தொடர்பாக கமிட்டிகள் அமைக்கும் உத்தேசம் தற்பொழுது இல்லை; இடைக்காலத் தீர்ப்பை அமுல்படுத்த இரு மாநிலங்களும் பேச்சுவார்த்தை தான் நடத்திக் கொள்ள வேண்டும்' என காங்கிரசின் குட்டை போட்டு உடைத்துவிட்டார். இவ்வளவு நடந்த பின்னும்கூட ஜெயா அரசு எந்தவித பயனுமற்ற அந்த இரு கமிட்டிகளை உடன் அமைக்கக் கோரி கடிதப் போர் நடத்தத் துவங்கியிருக்கிறது.

கர்நாடக மாநில காங்கிரஸ் அரசோ 'தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால்' என்ற நிலையிலேயே இன்றும் இருந்து வருகிறது. தனது எதிர்ப்பாளர்களைச் சமாளிக்க ஜெயா உண்ணா விரதத்தை நன்கு பயன்படுத்திக் கொண்ட மொய்லி. 'இடைக்காலத் தீர்ப்பையே நாங்கள் ஏற்றுக் கொள்ளாத பொழுது. அத்தீர்ப்பின்படி அமைக்கப்படும் இக்கமிட்டிகளை எப்படி ஒப்புக் கொள்ள முடியும்' என அறிக்கைவிடுத்தார். அதனுடன் 'வறட்சியின் காரணமாகத்தான் தமிழ்நாட்டுக்குத் தரவேண்டிய நீரை கொடுக்க வில்லை' என்பதனையும் நடுவர் மன்றத்தில் முறையீடு செய்துள்ளதாக அறிவித்தார். மேலும் 'தமிழ்நாட்டு சாகுபடி பரப்பை அதிகப்படுத்தி உள்ளதால்தான் குறுவைக்கு நீர் போதவில்லை' என முன்னுக்குப் பின் முரணான குற்றச்சாட்டையும் வைத்தார். ஜெயா அரசோ தனது தரப்பில் இப்பிரச்னையை நடுவர் மன்றத்தில் எழுப்பவே இல்லை. மேலும் கடந்த இரண்டு ஆண்டுகளாக கர்நாடகம் மாதா மாதம் எவ்வளவு நீர் திறந்துவிட்டுள்ளது என்ற குறிப்புகளையும் நடுவர் மன்றத்திற்கு அனுப்பவில்லை. இதனைக் கர்நாடகா தற்பொழுது தனக்குச் சாதகமாக்கிக் கொண்டுவிட்டது.

காங்கிரசு தலைமையைப் பொருத்தவரை நடுவர் மன்றத் தீர்ப்பிற்கு அப்பாற்பட்டு மீண்டும் பேச்சுவார்த்தையைத் தொடங்கி நடத்துவது எனப் பிரச்னையை அதன் ஆரம்ப நிலைக்கே பின்னிழுத்துச் செல்வதில்தான் குறியாக உள்ளது. தமிழ்நாட்டின் ஆளும் அ.தி.மு.க. மட்டுமல்லாது பிற ஓட்டுக் கட்சிகளும் தங்களது சுய அரசியல் லாபம் கருதி சந்தர்ப்பவாதமாகத் தான் இப் பிரச்னையைக் கையாண்டு வருகின்றன; மாறியுள்ள அரசியல் சூழ்நிலையில் இனி இதனை இவர்கள் உடனடியாக கண்டு கொள்ளப் போவதுமில்லை. இந்த இரு கமிட்டிகளை காவிரி பிரச்னைக்காக இயங்கிவரும் குழுக்களும் பயனற்றது என்றே கருத்து தெரிவித்துள்ளன. எனவே காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் இப்பிரச்னையை பரந்துபட்ட அளவில் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய விதத்தில் தொடர்ச்சியாக, மேலும் ஆழமான மக்கள்திரள் போராட்டங்களின் வாயிலாக தாங்களாகவே எடுத்துச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை.

*—ரஹீம்.*

# நரசிம்மராவ் அரசு மயிரிழையில் தப்பிய மர்மம்

## கட்சி மாறிகளுக்கும், அரசியல் கொள்ளையர்களுக்கும் கிடைத்த வெற்றி

நரசிம்மராவின் ஒரு கோடி (?) ஊழலைத் தொடர்ந்து அவரது ஆட்சிக்கு எதிராக மூன்றாவது முறையாக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியடைந்துள்ளது. பதினான்கே ஓட்டுக்கள் வித்தியாசத்தில் அதுவும் விலை பேசப்பட்ட - சலுகை காட்டப்பட்ட, என்றைக்கும் விலை போகிற குதிரைகளின் தயவில் உயிர் பிழைத்திருக்கும் ராவ் ஆட்சி, தொங்கு நிலை நாடாளுமன்றத்தின் இழிந்த நிலைக்கு சிறந்த உதாரணம். ''இந்த தீர்மானம் அரசுக்கு வெற்றி என்றும் எதிர்க்கட்சிகளுக்கு தோல்வி என்றும் கூற முடியாது. கட்சி மாறிகளுக்கும், அரசியல் கொள்ளையர்களுக்கும் கிடைத்த வெற்றிதான் இது'' என்கிறார் ஜனதாதளத்தைச் சேர்ந்த மது தண்டவதே. ''இந்த அரசு எண்ணிக்கையளவில் வெற்றி பெற்றுள்ளது. ஆனால் வெற்றியடைந்த வழிமுறை மூலம் நாம் சுமத்திய ஊழல் குற்றச்சாட்டை உண்மையென நிரூபித்துவிட்டார்கள்'' என்கிறார் அஜித்சிங். இப்படி எதிர்க்கட்சியினரே பகிரங்கமாக குற்றம் சாட்டுமளவுக்கு இம்முறை ''நாடாளுமன்ற குதிரை வியாபாரம்'' கொடிகட்டிப் பறந்தது.

நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத்தொடரில் ராவ்விற்கு எதிராக நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டு வருவதாக தேசிய முன்னணி - இடதுசாரி கட்சிகள் அறிவித்ததும் பா.ஜ.க., அ.தி.மு.க., ஜனதா தளம் (அஜித்சிங் பிரிவு), முஸ்லீம் லீக் ஆகியவையும் ராவ்விற்கு எதிராக ஓட்டுப்போடுவதாக அடுத்தடுத்து அறிவித்தன. எல்லோரும் எதிரணியில் திரண்டு நாற்காலிக்கு ஆபத்து வரவே ஆடிப்போன ராவ் கும்பல் ஆட்சியைக் காப்பாற்றுவதற்காக கீழ்த்தரமான வேலைகளில் தீவிரமாக குதித்தது. ஜார்கண்ட் கட்சிக்கு கூடுதல் அதிகாரம் பற்றி பாராளுமன்றத்தில் தீர்மானம் போடுவதாக வாக்குறுதியளித்து ஜார்க்கண்ட் கட்சியில் சிபுசோரன் பிரிவை வளைத்துப் போட்டது. ஜெயாவிற்கு ஆதரவு கோரி தூது அனுப்பியும் எவ்வித பயனும் இல்லை. அ.தி.மு.க. எம்.பி-க்களையும் விலை பேச முடியாதபடி ஜெயா முன்னெச்சரிக்கையாக அரசு விடுதியில் போட்டு அடைத்து பலத்த போலீசு பாதுகாப்பு ஏற்பாடு செய்திருந்தார். எனவே அடுத்து இருப்பது அஜித்சிங் கோஷ்டி மட்டும்தான்; இதைப் பிளந்தால் தான் காங்கிரசு ஆட்சியின் வாழ்வே என்றாகி விட்டதால் ஒரு பெரிய பட்டாளமே ஜனதாதள் (அ)-வைப் பிளக்க களத்தில் குதித்தது. ஜார்க்கண்ட் கட்சியை வளைத்துப்போட காங்கிரசின் ராஜேஷ் பைலட், பூட்டாசிங், சந்திரசேகர் கட்சியைச் சேர்ந்த தரகன் சுபோத்காந் சகாய் போன்றார் முக்கிய பங்காற்றினார்கள். அ.தி.மு.க. எம்.பி.க்களை விலை பேச ஜனதா கட்சியின் சுப்ரமணியசாமி முயன்று தோற்றுப்போனார். அஜித் சிங் கட்சியைப் பிளக்க சுப்ரமணியசாமி, பஜன்லால், வி.சி. சுக்லா, ஜிதேந்திர பிரசாத், ராஜேஷ் பைலட், சதீஷ் சர்மா, கருணாகரன் முதலியோர் முக்கிய பங்காற்றி வெற்றியும் பெற்றனர்.

அஜித்சிங் கட்சியிலுள்ள ராம்லக்கண் சிங் யாதவ் என்ற பீகாரைச் சேர்ந்த எம்.பி. ஒரு அப்பட்டமான காங்கிரசு விசுவாசி. இவர் மூலம் அஜித்சிங் பிரிவிலுள்ள பணம்-பதவி வெறிபிடித்த யாதவ் சாதியைச் சேர்ந்த சிலரும், பழங்குடி பகுதியைச் சேர்ந்த சில எம்.பி.க்களுமாக 7 பேர் விலை பேசப்பட்டனர். ஓட்டுப் போடுவதற்கு முதல்நாள் ராம்லக்கன் யாதவ் வீட்டிற்கு மேற்படி காங்கிரசு பட்டாளம் படையெடுத்து பேரம் நடத்தியது படங்களுடன் பத்திரிகைகளில் அம்பலமாகியது. பிறகு யாரும் விலைபேசி விடாதபடி பாதுகாக்கப்பட்டு பாராளுமன்ற வளாகத்திலுள்ள வி.சி. சுக்லா அறைக்கு கடத்தப்பட்டு சபாநாயகரிடம் 7 பேரும், தனிக்கட்சியாக காங்கிரசில் இணையப்போவதாக எழுதிக் கொடுக்கும்படி செய்தது. காங்கிரசு. இதில் ஓட்டெடுப்பின் போது குடிபோதையுடன் வந்த ஒரிசா பழங்குடி மக்களின் எம்.பி. கோவிந்த சந்திரா முண்டா எல்லோருக்கும் அநாவசியமாக கும்பிடுபோட்டு, கை குலுக்கி ரகளை செய்தார். ஓட்டெடுப்பிலும் தலைகால் புரியாமல் தவறான பட்டனை அழுத்திவிட, பிறகு காங்கிரசுக்காரர்கள் இவர் தீர்மானத்திற்கு எதிராகத்தான் ஓட்டுப் போட்டார் என எழுதி வாங்கி சபாநாயகரிடம் கொடுத்தனர். இவருடைய ஒரு ஓட்டுப் போனாலும் 'கட்சித் தாவல் சட்டப்படி' அஜித்சிங் கட்சி பிளவும், காங்கிரசு இணைவும் செல்லாதாகிவிடும் என்பதால் காங்கிரசுக்காரர்கள் இப்படி அதிரடி - அடாவடி நடவடிக்கை மூலம் எழுதி வாங்கி ஓட்டு எண்ணிக்கையைக் காட்டியது மிகுந்த சர்ச்சைக்குள்ளானது.

வெளியில் மட்டுமல்ல, காங்கிரசு கட்சிக்குள்ளிருந்த நெருக்கடியையும் இதே வழிமுறை மூலம்தான் தற்காலிகமாக சமாளித்து இந்த வெற்றியை சாதித்துள்ளது ராவ் கும்பல். அர்ஜுன்சிங், சரத்பவார், விஜய் பாஸ்கர ரெட்டி, வீரப்ப மொய்லி முதலியோர் தலைமையிலான கோஷ்டிகள் காங்கிரசில் ராவ்வின் தலைமைக்கு தலைவலியாக உள்ளது அறிந்ததே. ராவ் அல்லாமல்

படிப்பகம்

www.padippakam.com

வேறு ஒருவர் தலைமையிலான காங்கிரசு ஆட்சியை இடதுசாரி - தேசிய முன்னணி கட்சிகள் ஆதரிக்கும் என்பதை அறிந்ததும் தலைமையை கைப்பற்றுவதற்கான கோஷ்டி பூசல் வலுவடைந்தது. ஆனால் ராவ், ஆசை காட்டல், ஆள் கடத்தல், மிரட்டல் மூலமாக தனது கோஷ்டியை பலப்படுத்தி வருவதாலும், எதிர்க்கோஷ்டிகளின் வலுவின்மை, ஒற்றுமையின்மை காரணமாகவும், தனது ஆட்சி கவிழாது என்பதை எதிர்க்கட்சிகளை பிளந்து நிரூபித்துக் காட்டியதாலும் ராவ்வின் பதவிக்கு ஆபத்தில்லாமல் போனது.

ராவ் தனது பதவியை பாதுகாத்துக் கொண்டதற்கு பக்கபலமாக - பணபலமாக சர்வதேச கிரிமினல் பேர்வழி சந்திரசாமி, ஆதனான் கஷோகி மற்றும் அம்பானி, இந்துஜா முதலான தரகு முதலாளித்துவ கும்பல் செயல்பட்டதும் முக்கிய காரணமாகும். ஒரு எம்.பி.க்கு 2 கோடி ரூபாய் வரை விலையாக பணம் கைமாறியுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் காட்டுகின்றன. சர்வதேச கடத்தல் பேர்வழிகளுக்கும் அந்நிய - தரகு முதலாளித்துவ கும்பலின் கொள்ளைக்கும் வசதியாக ராவ் கும்பல் புதிய பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தி வருவது மற்றும் போபார்ஸ் ஊழல் வழக்கை மூடி மறைத்து வருவது காரணமாக மேற்படி கும்பல் 'குதிரை வியாபாரத்திற்கு ஏராளமான கோடிகளை வாரி வழங்கி ராவ் ஆட்சியை காப்பாற்றியுள்ளது.

அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் - பணக்காரர்களிடம் நிதி வாங்குவது, பணத்திற்காக கட்சி மாறுவது, அநாகரிகமாக - ஒழுங்கீனமாக நடந்து கொள்வது என்ன பெரிய தவறா. தேனெடுப்பவன் புறங்கையை நக்குவது போல் சாதாரணம் தான் என்று அவர்களே நியாயப்படுத்துமளவிற்கு பொறுக்கி அரசியல் கலாச்சாரம் இன்று முன்னேறிவிட்டது. ''நரசிம்மராவ் அர்ஷத்திடம் 1 கோடி வாங்கியது என்ன பெரிய குற்றமா? தேர்தலுக்காக முதலாளிகளிடம் காசு வாங்காத அரசியல்வாதி இருக்கிறார்களா சொல்லுங்கள்?'' என்று கேட்கிறார்கள் காங்கிரசுக்காரர்கள். ''முண்டா பாராளுமன்றத்திற்கு குடித்துவிட்டு வந்ததை எல்லோரும் பெரிதாக்குகிறீர்களே, சொல்லுங்கள் எந்த அரசியல்வாதி இப்பொழுது குடிக்காமல் இருக்கிறார்? நாலின் மூன்று பங்கு எம்.பி.க்கள் குடிக்கிறார்கள். மகாத்மா காந்தியின் காலம் எல்லாம் முடிந்துவிட்டது'' என்று வக்காலத்து வாங்குபவர் ராம்லக்கன் சிங் யாதவ். 'ராம்லக்கன் வீட்டில் சந்தித்த காங்கிரசுக்காரர்கள், எனக்கு பணம் தருவதாக சொல்லவில்லை; ஆனால் எனக்கு உதவி செய்வதாகவும் என்னுடைய தேவைகளில் அக்கறை செலுத்துவதாகவும் வாக்குறுதியளித்தார்கள்.... என்னுடைய பெயரில் காங்கிரசிடமிருந்து 40 லட்சம் ரூபாய் வாங்கியுள்ளதாக இப்பொழுதுதான் எனக்குத் தெரியவந்தது. நான் வீடு கட்டிவருவதால் எனக்கு பணம் தேவைப்படுகிற இந்த நேரத்தில் கூட நான் ஒரு பைசா கூட அதிலிருந்து எடுக்கவில்லை. இதுவரை எனக்கு எந்த எதிர்க் கட்சி தலைவர்களும் உதவி செய்யவில்லை. நானோ ஒரு ஏழை. எனக்கு காங்கிரசுக்காரர்கள் உதவுவதாக சொல்லும் பொழுது நான் ஏன் காங்கிரசில் சேரக்கூடாது?'' என்று கேட்கிறார் முண்டா.

இதுபோன்ற பகிரங்க அரசியல் விபச்சாரம் நடக்கவில்லையே தவிர எதிர்கட்சியின் முகங்கள் இவர்களின் முகங்களிலிருந்து எவ்விதத்திலும் வேறுபட்டவையல்ல. ராவ் தலைமையில்லாத காங்கிரசு ஆட்சியை ஆதிரிப்பதாக அலித்தனமாக முடிவெடுத்தன, தேசிய முன்னணி - இடதுசாரி கட்சிகள். காங்கிரசில் ஒரு கோஷ்டியைப் பிளந்து ஆட்சியமைக்கலாம் என்று கணக்கு போட்டது பா.ஜ.க. தன்னை மிரட்டிக் கொண்டிருக்கும் காங். ஆட்சியை ஒழிக்க விரும்புவதோடு அடுத்து பா.ஜ.க. ஆட்சியமைக்கும் என்ற நம்பிக்கையில் பாதுகாப்பு கருதியும் ஜெயலலிதா ராவ்வை 'தீவிரமாக' எதிர்த்து ஓட்டுப்போட்டார். தன்னை கட்சியில் சேர்த்துக் கொண்டு மந்திரி பதவி தராமல் ஏமாற்றிய காங்கிரசுக்கு எதிராக ஓட்டுப்போட்ட அஜித்சிங்கிற்கு எதிர்க்கட்சிகளால் ஏதாவது வாழ்வு கிடைக்காதா என்ற நப்பாசை! ஆக, ராவ் ஆட்சியை கவிழ்க்கவோ, அதன் தில்லுமுல்லு, அடாவடித்தனம், ஊழல், ஓட்



டாண்டிக் கொள்ளைகளை எதிர்க்கவோ எந்த கட்சிக்கும் அருகதையில்லை என்பது தெளிவு.

இதுமட்டுமல்ல காங்கிரசு, பா.ஜ.க. உட்பட எந்த கட்சிக்கும் தேர்தலை சந்தித்து அறுதி பெரும்பான்மை பெறுவோம் என்ற நம்பிக்கை இல்லை. மத்தியில் இதுவரை ஆளவில்லை என்பதையும் இந்து மதவெறியையும் நம்பி தேர்தல் நடத்தக் கோரி சவடாலடித்தாலும் பா.ஜ.க.விற்கும் இந்த நம்பிக்கையின்மை உண்டு. எப்படி ஆட்சியைப் பிடிப்பது என்ற கேள்விதான் எல்லோர் குடுமியையும் பிடித்து உலுக்குகிறது. ஒன்று தேர்தலில் தில்லுமுல்லு, கிரிமினல், அராஜக நடவடிக்கைகள் மூலம் வெற்றியை சாதிக்க வேண்டும்; முடியாவிட்டால் தேர்தலுக்குப் பின் எதிர்க்கட்சியைப் பிளப்பது, குதிரை வியாபாரம் மூலம் மயிரிழைப் பெரும்பான்மையைக் காட்டி ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பது இந்த கேடுகெட்ட ஜனநாயகத்தின் தலைவிதியாகிவிட்டது. பாசிச ராஜீவ் மற்றும் ராவ் கும்பல் தொடக்கம் முதலே எதிர்க்கட்சிகளைப் பிளந்துதான் தனது பலத்தை திரட்டிவைத்துக் கொண்டு ஆட்சி செய்தன. இக்கும்பல் பிளக்காத கட்சியே இல்லை எனலாம். ஜனதா தளத்திலிருந்து ஒரு மாநிலப் பகுதியின் கட்சியான ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா வரை தனது கைவரிசையை காட்டியுள்ளது. எதிர்கட்சிகள் சிதறுண்டு - பிளவுண்டு இருப்பதில்தான் தனது வாழ்வை தக்கவைத்துக் கொள்கிற கேவலமான நிலை காங்கிரசுக்கு!



விலைபோன குதிரை: ராம் லக்கன் சிங் யாதவ் (கீழே); இவர் வீட்டிற்கு பேரம் நடத்தச் செல்லும் காங். தலைவர், கருணாகரன் (இடது); சதீஸ் சர்மா, பஜன்லால்

இந்திய நாளாளுமன்றம் பல ஆண்டுகளாக சந்தித்துவரும் மயிரிழைப் பெரும்பான்மை கூட தொடர்ந்து நீடிக்குமா என்பது இன்று கேள்விக் குறியாகியுள்ளது. இதன் விளைவு என்னவாக இருக்கும்? தனது ஆட்சிக்கும் ஆபத்து வரும், எதிர்க்கட்சிகளும் ஆட்சியமைக்க முடியாத குழப்பமான நிலையிருக்கும் சமயத்தில் இதற்கு மாற்று என்ற பெயரில் காங்கிரசின் பாசிச ஆட்சி நிறுவப்படலாம். இல்லையெனில் இந்நிலையை சாதகமாக்கிக் கொண்டு தாம் தான் மாற்று என்று கூறி இந்து வெறி தூண்டி ஆதாயமடைந்து முன்னேறி, பா.ஜ.க. ஆட்சியைப் பிடித்து 'இந்துராஷ்டிரம்' இந்து வெறி பாசிசம் அரங்கேறும். இந்தியாவின் பொருளாதார நெருக்கடிகளும், ஆதிக்கம் செலுத்தும் உள்நாட்டு வெளிநாட்டு பிற்போக்கு சக்திகளும் இதையே முன்தள்ளுகின்றன. இதை முறியடிக்க நாம் இப்போதே தயாராக வேண்டும்.

★ ராசு

www.padippakam.com

# யாருக்கு அதிகாரம்? சேஷனின் கொட்டம்

தமிழகத்தில் ஓட்டுக் கட்சிகள் நம்பிக்கையுடன் தேர்தல் பிரச்சாரம் செய்த நேரத்தில் மீண்டும் பழனி, இராணிப்பேட்டை தொகுதிகளின் இடைத்தேர்தல்கள் உட்பட அனைத்து தேர்தல்களும் சேஷனின் திடீர் உத்திரவால் ரத்து செய்யப்பட்டது. மகாராஷ்டிராவிலோ, முதலமைச்சர் சரத்பவார் செப்டம்பர் 5-ந் தேதிக்குள் எம்.எல்.ஏவாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதேபோல, மத்திய அமைச்சர் பதவியிலிருந்து விலக நேர்ந்த பிரணாப் முகர்ஜி. நாடாளுமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். சேஷனின் திடீர் உத்திரவினால் அவர்களுடைய பதவியும் அரசியல் வாழ்வும் திரிசங்கு நிலையில் தொங்கியது. பாரதீய ஜனதா அரசுகள் டிஸ்மிஸ் செய்யப்பட்ட 4 மாநிலங்களில் அக்டோபர், நவம்பர் மாதங்களில் தேர்தல்களை எதிர்ப்பார்த்திருந்த இந்து வெறியர்களோ சேஷனின் அறிவிப்பைக் கண்டு எரிச்சலடைந்தனர். தோல்வி பயத்தில் தேர்தல் கமிஷனுடன் சேர்ந்து மத்திய அரசு சதி செய்கிறது என்று அறிக்கை வெளியிட்டுச் சாடினார் ஜெயலலிதா.

### சேஷன் - மத்திய, மாநில அரசுகள் லடாய்

தனது வானளாவிய அதிகாரத்தை ஏந்திச் சுழற்றி, அனைத்து தேர்தல்களையும் ரத்து செய்வதாக சேஷன் உத்திரவிடக் காரணம் என்ன? தேர்தல் பணிகளை கவனிக்க நியமிக்கப்படும் அதிகாரிகளும் ஊழியர்களும் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும்; அவர்கள் தவறிழைத்தால் நடவடிக்கை எடுக்க தனக்கு அதிகாரம் உண்டு என்கிறார் சேஷன். இந்த அதிகாரம் தேர்தல் கமிஷனுக்குக் கிடையாது என்று மத்திய, மாநில அரசுகள் வாதிடுகின்றன. இதுதவிர, தேர்தல் நேரத்தில் தில்லுமுல்லு, மோசடிகளைத் தடுக்க தான் குறிப்பிடும் தொகுதிகளில் மத்திய போலீசுப் படைகள் அனுப்பப்பட வேண்டும் என்பது தேர்தல் கமிஷனரின் வாதம். மாநில அரசு கோரினால் மட்டுமே படைகளை அனுப்ப முடியும் என்பது மத்திய அரசின் வாதம்.

அதிகாரம் யாருக்கு? மத்திய, மாநில அரசுகளுக்கா அல்லது தலைமை தேர்தல் கமிஷனருக்கா? என்ற இருதரப்புக்கும் இடையிலான லடாய் கடந்த ஓராண்டு காலமாகவே நீடித்து வருகிறது.

மே. வங்கத்தில் இடைத்தேர்தல் நடந்த போது, தான் முன்நிறுத்துபவரை மாநிலத் தேர்தல் அதிகாரியாக நியமிக்க வேண்டும் என்று சேஷன் கோரினார். ஆனால் மே. வங்க அரசோ தமது அதிகாரிகளின் பட்டியலைக் கொடுத்து, அதில் ஒருவரை தேர்தல் அதிகாரியாக நியமிக்கக் கோரியது. மாநில அரசு கொடுக்கும் பட்டியலில் உள்ளவர்கள் தேர்தல் மோசடிகளுக்கு உடந்தையாக இருப்பார்கள் என்று கூறி சேஷன் இதை ஏற்க மறுத்தார். இப்போது இந்த விவகாரம் கோர்ட்டில் உள்ளது.

இதேபோல திரிபுரா மாநிலத் தேர்தலின்போது, காங்கிரசுக்கு ஆதரவாக சில தேர்தல் அதிகாரிகளும் ஊழியர்களும் மோசடி, தில்லுமுல்லுகளுக்கு உடந்தையாக இருந்தார்கள் என்று குற்றம் சாட்டி சேஷன் நடவடிக்கை எடுக்க முற்பட்ட போது, ''இது மாநில அரசின் விவகாரம்; தேர்தல் கமிஷனுக்கு நடவடிக்கை எடுக்க அதிகாரமில்லை'' என்று அப்போதைய காபினட் செயலாளர் ராஜகோபாலன் மறுத்தார். அதைத் தொடர்ந்து சேஷனுக்கும் ராஜகோபாலனுக்குமிடையே யாருக்கு அதிகாரம் என்று நீண்ட கடிதப் போராட்டம் நடந்தது.

அண்மையில் பழனி, ராணிப்பேட்டை தொகுதிகளுக்கு தேர்தல் பணிகளுக்காக மத்திய போலீசுப் படையை அனுப்புவதில் மத்திய அரசுடன் மீண்டும் தகராறு எழுந்ததும் அனைத்து தேர்தல்களையும் ரத்து செய்வதாக திடீரென ஓர் அதிரடி உத்திரவை வெளியிட்டார்.

''இவ்விரு தொகுதிகளிலும் நிலைமை சரியில்லை; மத்தியப் போலீசுப் படை சென்றால்தான் ஒழுங்காக தேர்தலை நடத்த முடியும்'' என்று ஜூலை 27-ந் தேதியன்று சேஷன் மத்திய அரசுக்கு உத்திரவிட்டார். அதன்படி 12 கம்பெனிகள் கொண்ட மத்திய ரிசர்வ் போலீசுப் படையும் அனுப்பப்பட்டது. ஆனால் ஆகஸ்ட் முதல் நாளன்று மத்திய உள்துறை அமைச்சகம், ''படை அனுப்பப்பட்டுவிட்டது. இருப்பினும் இப்படி தேர்தல் கமிஷன் ஆணையிட எத்தகைய அதிகாரமும் கிடையாது'' என்று சேஷனுக்குக் கடிதம் அனுப்பியது.



''அரசியல் சட்டப்படி எனக்குத்தான் முழு அதிகாரம் என்று நான் வாதிட்டுக் கொண்டிருக்கும்போது, மத்திய அரசு எப்படி இத்தகைய முடிவை எடுக்க முடியும்?'' என்று எகிறிக் குதித்த சேஷன், மறுநாளே அனைத்து தேர்தல்களையும் ரத்து செய்வதாக அதிரடி உத்திரவைப் பிறப்பித்தார். ''நான் எழுப்பியுள்ள சர்ச்சைகளை சுமுகமாகத் தீர்த்து வைக்காதவரை தேர்தல் வேலைகளை இக்கமிஷன் நடத்தாது'' என்றும் எச்சரித்தார். பின்னர் ஆகஸ்ட் 2-ம் தேதியன்று இரவு, ''சட்டப்படி காலவரையறையின்றி தேர்தல்களை ஒத்தி வைக்க முடியாது என்பதால், டிசம்பர் 13-ந் தேதிக்குள் இத்தேர்தல்கள் நடக்கும்'' என்றும் அறிவித்தார்.

இப்படி நாட்டையே ''பிளாக் மெயில்'' செய்யும் சேஷனைக் கண்டித்து உடனே பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று அடுத்தநாளே எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் கூச்சலிட்டன. ஆனால் அரசியல் சட்டப்படி தலைமைத் தேர்தல் கமிஷனரை அவ்வளவு சுலபமாக பதவியிலிருந்து தூக்கியெறிந்துவிட முடியாது. வேண்டுமானால் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் கண்டனத் தீர்மானம் கொண்டு வரலாம். அதையேற்று அவர் தனது பதவியை ராஜினாமா செய்தால் தான் உண்டு. ஆனால் சேஷனோ, ''சட்டத்துக்குப் புறம்பாக நான் எதையும் செய்யவில்லை; நான் எதற்காகப் பதவி விலக வேண்டும்'' என்று கொக்கரிக்கிறார். எனவே எதிர்க்கட்சிகள் கண்டனத் தீர்மானம் கொண்டுவரும் முயற்சியைக் கைவிட்டு, சேஷனின் உத்திரவுக்கு எதிராக தனிப்பட்ட முறையிலும், மாநில அரசு சார்பிலும் உயர்நீதிமன்றங்களில் ''ரிட்'' மனுக்களைத் தாக்கல் செய்தன. மாநில அரசுகளின் கைப்பாவையாகிவிட்ட உயர்நீதி மன்றங்கள் தேர்தல் தள்ளிவைப்புக்கு இடைக்காலத் தடைவிதித்து, விரைவில் தேர்தல் நடத்துமாறு கோரின.

### சட்டம் என்ன சொல்கிறது?

இது ஒருபுறமிருக்கட்டும். இந்த விவகாரத்தில் யாருக்கு அதிகாரம் உள்ளது? இது பற்றி சட்டம் என்ன சொல்கிறது? இந்திய அரசியல் சட்டம் 324(6) வது பிரிவின் படி, சுதந்திரமான, நியாயமான தேர்தல்களை நடத்த தேர்தல் கமிஷனே முழுப்பொறுப்பாகும். இந்தக் கடமையை நிறைவேற்ற, தேர்தல் கமிஷன் கோரும்போது, தேவையான அதிகாரிகள் ஊழியர்களையும், படைகளையும், மத்திய, மாநில அரசுகள் அனுப்ப வேண்டும். தேர்தல் பணிகள் முடியும்வரை அவர்கள் தேர்தல் கமிஷனரின் ஆணைக்கும், கட்டுப்பாட்டுக்கும், ஒழுங்கு நடவடிக்கைக்கும் உட்பட்டு இருப்

படிப்பகம்

www.padippakam.com

பார்கள் என்று மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் கூறுகிறது.

ஆனால் அரசியல் சட்டம் தேர்தல் கமிஷனுக்கு அளித்துள்ள அதிகாரங்கள் நடைமுறையில் மறுக்கப்பட்டே வந்துள்ளது. இப்போதெல்லாம் தேர்தல் என்றாலே தில்லுமுல்லு, மோசடி, கள்ள ஓட்டு, வாக்குச்சாவடியைச் சூறையாடுவது வாடிக்கையாகிவிட்டது. அதிகார வர்க்கமோ ஓட்டுக் கட்சிகளுக்கு உடந்தையாக மோசடி செய்கிறது. அதிலும் இடைத்தேர்தல்கள் என்றாலே ஆளுங்கட்சி வெற்றிபெற அரசு எந்திரம் முழுவதுமே மோசடிகளுக்கு உடந்தையாக நிற்பதாகிவிட்டது. இந்நிலையில் சுதந்திரமான, பாரபட்சமற்ற தேர்தல் நடத்த மத்திய போலீசுப் படையை அனுப்புமாறு தேர்தல் கமிஷன் கோரும்போது, மாநில அரசு அதை ஏற்காவிட்டால் என்ன செய்வது என்பது பிரச்சனையாகிறது. ஏனெனில் மாநில அரசு கோராமல் மத்திய அரசு அவ்வாறு படைகளை அனுப்பக் கூடாது என்கிறது சட்டம். அயோத்தியில் பாபர் மசூதியைப் பாதுகாக்க மத்திய அரசு படைகளை அனுப்பிய போது, அன்றைய உ.பி. பாரதீய ஜனதா அரசு, மத்தியப்படைகள் தேவையில்லை என்று திருப்பியனுப்பியது. மாநில அரசு கோராமல் படைகளை அனுப்ப வேறுவழியில்லை என்று அப்போது மத்திய அரசு சட்ட விளக்கமும் அளித்தது. இப்படியொரு சிக்கல் ஏற்பட்டால் என்ன செய்வது? இன்னொருபுறம் தேர்தல் அதிகாரிகளும் போலீசும் மோசடிகளில் ஈடுபட்டால் அவர்கள்மீது தேர்தல் கமிஷனர் நடவடிக்கை எடுப்பதாக இருந்தால் எல்லோருமே தண்டிக்கப்பட நேரிடுமே! அதற்கு என்ன செய்வது?

### யாருக்கு அதிகாரம்?

நாடாளுமன்ற-சட்டமன்றங்கள், அதிகாரவர்க்கம், நீதித்துறை - ஆகிய அதிகார அமைப்புகள் யாவும் சமமானவை, இவை ஒன்றையொன்று சோதித்தறிந்துகொண்டு தவறுகளைக் களைந்து ஜனநாயகத்தைக் கட்டிக்காக்க வேண்டும் என்பதை நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மாண்பாக முதலாளித்துவவாதிகள் குறிப்பிடுகின்றனர். இந்த அமைப்புகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று இசைவாக நடந்து கொள்ளும்போது பிரச்சினைகள் வெளியே தெரிவதில்லை. யாருக்கு அதிகாரம் என்கிற லடாய் வந்துவிட்டால், நாடாளுமன்ற ஜனநாயகமே விபரீதமாகி சட்டவாத நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டு விடுகிறது.

முன்பு பாசிச எம்.ஜி.ஆர். ஆட்சியில் சபாநாயகராக இருந்த பி.எச்.பாண்டியன் இதே போல தனக்குத்தான் வானளாவிய அதிகாரம் உள்ளது என்று வரலாறு காணாத கொட்டமடித்தார். நீதி மன்றத்தால் குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்டவர்களை தனது சட்டமன்ற அதிகாரத்தின் மூலம் விடுதலை செய்து நாடாளுமன்ற ஜனநாயகமே கேலிக்கூத்தானது என்று நிரூபித்துக் காட்டினார். அப்போதும் நீதிமன்றமா? சட்டமன்றமா? யாருக்கு அதிகாரம் என்கிற பிரச்சினை எழுந்தது.

இந்த அமைப்புகள் யாவும் சம அளவில் அதிகாரம் கொண்டவை என்று கூறப்பட்டாலும், உண்மையில் நடைமுறையில் அதிகாரத்தை ஏந்திச் சுழற்றுவது அதிகார வர்க்க - போலீசு - ராணுவ அமைப்புகள் தான். போடப்படும் சட்டங்களை அமுலாக்குவதும் அல்லது கிடப்பில் போடுவதும் நீதிமன்றத் தீர்ப்புகளை நிறைவேற்றுவதும் அல்லது குப்பையில் வீசுவதும் அதிகார வர்க்கத்தின் கையில்தான் உள்ளது. நாடாளுமன்ற ஜனநாயக மரபுப்படியும், இந்திய அரசியல் சட்டப்படியும் தற்போதைய விவகாரத்தில் தலைமைத் தேர்தல் கமிஷனர் சேஷனுக்குத்தான் அதிகாரமுள்ளது என்பது உண்மைதான். உச்சநீதிமன்றமும் ஆகஸ்ட் 10-ந் தேதியன்று அளித்த தீர்ப்பில், பம்பாய், கல்கத்தா, சென்னை உயர்நீதிமன்றங்களின் இடைக்கால உத்திரவுகள்



**தன் வரம்பற்ற அதிகாரத்தை சேஷன் எந்த நோக்கத்திற்கு பயன்படுத்துகிறார் என்பது தான் கேள்வி**

அனைத்தையும் ரத்து செய்தது. தேர்தல் கமிஷனரின் உத்திரவுக்கு எதிரான ஏற்கனவே உள்ள ரிட் மனுக்களை விசாரிக்கவும் தடைவிதித்தது. இதன் மூலம் தேர்தல் கமிஷனுக்கு அதிகாரமிருப்பதையே ஒப்புக்கொண்டது. அதன்பிறகு சேஷன், செப்.10-ந் தேதிக்குள் இடைத்தேர்தல்களை நடத்தி முடிப்பதாக அறிவித்தார். பிரச்சினை தற்காலிகமாக இப்போது ஓய்ந்துள்ளது. ஆனால், சேஷன் இந்த வரம்பற்ற அதிகாரத்தை எந்த நோக்கத்திற்குப் பயன்படுத்துகிறார் என்பதுதான் கேள்வி.

### தேர்தல் கமிஷன் நடுநிலையானதா?

''சேஷன் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் வளைந்து கொடுக்காத இரும்பு மனிதர்; பாரபட்சமுறையில் சுதந்திரமாக தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்திலேயே தேர்தல் கமிஷனரின் அதிகாரங்களைப் பற்றி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். இதற்கு பிரதமர், காபினட் செயலர் உட்பட யாரும் பொறுப்பாக பதிலளிக்காததால், இந்த நிலை தொடர்ந்தால் எல்லா தேர்தல்களையும் ஒத்தி வைப்பதைத் தவிர எனக்கு வேறு வழி கிடையாது என்று அரசை எச்சரித்தும் வந்தார். அதன் இறுதிக் கட்டமாகவே இப்போது அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளார். பாரபட்சமற்ற தேர்தல்களை நடத்த, தேர்தல் கமிஷனின் அதிகாரங்களை உறுதிப்படுத்த அவர் எடுத்த நடவடிக்கை நியாயமானதுதான்'' என்று துக்ளக் ''சோ'' வும் சில சட்ட வல்லுனர்களும் வாதிடுகின்றனர்.

ஆனால், தேர்தல் முறைகேடு - மோசடிகளை ஒழிக்க இவ்வளவு தூரம் வாதிடம் சேஷனே நேர்மையான - சிரமமான முறையில் பதவிக்கு வந்தவர் அல்ல. திட்டக்கமிஷன் தலைவர் என்ற அதிகாரமில்லாத பதவியில் இருந்தவரை, தனது நீண்டகால விசுவாசி என்பதால் சுப்பிரமணியசாமியின் ஏற்பாட்டின்படி, அன்றைய பினாமி பிரதமர் சந்திரசேகர் ஆட்சியில் சேஷனை தலைமை தேர்தல் கமிஷனராக ராஜீவ் கும்பல் நியமித்தது. 1991 மே மாதத்தில் நடந்த பொதுத் தேர்தலின் போதும், முறைகேடுகள் நடந்தால் தேர்தலையே நிறுத்திவிடுவேன் என்று கணக்கற்ற விதிமுறைகளை சேஷன் அவிழ்த்துவிட்டார். சாதி, மதத்தின் பெயரால் பிரச்சாரம் செய்தால் அக்கட்சியே தேர்தலில் போட்டியிட முடியாமல் செய்வேன் என்ற சேஷனின் உத்திரவு அமுல்படுத்துவதற்கானதென்றால், பாரதீய ஜனதாவும் அதன் தாமரைச் சின்னமும் முடக்கப்பட்டிருக்க வேண்டும். அதே போல தேர்தலுக்கு முன்பு மாநில அரசுகள் அதிகாரிகளை மாற்றம் செய்யக்கூடாது என்ற உத்திரவும் கேலிக்குரியதாகி, எல்லா மாநிலங்களிலும் காங்கிரசின் வெற்றிக்காக அதிகாரிகள் மாற்றப்பட்டனர். எல்லாவற்றையும்விட, பழனியில் வறட்சி என்று கயிறு திரித்து இருமுறை தேர்தலை தள்ளி வைத்த சேஷன் நடுநிலையானவரா? நிச்சயமாக இல்லை என்பதையே அவரது கடந்த கால வரலாறு காட்டுகிறது.

யாருக்கு அதிகாரம் என்கிற லடாய்-சண்டையில், நாட்டு மக்களின் சாதாரண வாக்குரிமையைக் கூட தட்டிப் பறித்துக் கொண்டு தேர்தல் கமிஷனர் சர்வாதிகார சதிராட்டம் போட முடியும் என்பதுதான் இன்றைய நாடாளுமன்ற ஜனநாயகத்தின் யோக்கியதை. ''மக்களால், மக்களுக்காக'' என்பதெல்லாம் வெறும் ஏமாற்று என்பதை சேஷன் விவகாரம் மீண்டும் நிரூபித்துக் காட்டிவிட்டது. ஏற்கனவே மரணவாயிலில் நிற்கும் தேர்தல் ஜனநாயகத்தின் நோயை சேஷன் விவகாரம் மேலும் புரையோடச் செய்துவிட்டது. இக்கேடு கெட்ட நாடாளுமன்ற ஜனநாயக அரசியலமைப்பு முறைக்கு சவக்குழி வெட்டி புதைக்க வேண்டியதுதான் இனி பாக்கியிருக்கிறது.

● நாதன்

படிப்பகம்

www.padippakam.com

## சிங்கள அரசின் பொருளாதார முற்றுகை:

# ஈழமக்களின் அவலநிலை

**விலையேற்றம், பட்டினிச்சாவு, தொற்றுநோய், பற்றாக்குறை, அடக்குமுறை, படுகொலைகள் என ஈழ மக்களும், ஈழ அகதிகளும் படும் துயர் கற்பனைக்கு எட்டாதது.**

பதின்மூன்று வருடகாலமாக தொடரும் தமிழீழப் போராட்டம் தற்போது ஒரு புதிய நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது. 1990 ஜூன் மாதத்தில் இலங்கை பாசிச அரசால் போடப்பட்ட 'பொருளாதாரத்தடை' யின் தாக்குதல் மேலும் மேலும் தீவிரப்படுத்தப்பட்டு போராடும் மக்களின் கழுத்தை நெறித்து வருகிறது. பொருளாதார தடையால் மெல்ல மெல்ல நிலைகுலைந்து வந்த தமிழீழ மக்களின் வாழ்க்கை, இன்று நிரந்தர பட்டினி, வறட்சி, இல்லாமை மற்றும் கொடிய நோய்களுக்கு இலக்காகி ஒரு சோமாலியா, எத்தியோப்பியாவின் நிலையை எதிர்நோக்கியுள்ளது.

யுத்தம் காரணமாக வட மாகாணமே அநேகமாக பாலைவனமாகிவிட்டது. கட்டிடங்கள், வீடுகள், வீட்டுத் தோட்டங்கள், நீர்படுகைகள், தாவரக் காடுகள், வயல்கள் கண்மூடித்தனமான ஏவுகணை, குண்டு வீச்சுத் தாக்குதல்களால் அழிந்து இயற்கைச் சூழலின் சமநிலை வெகுவாக பாதித்துள்ளது. யாழ்ப்பாணத்தில் பலாலி, காங்கேசன் துறை பகுதியிலுள்ள ராணுவ முகாமைச் சேர்ந்தவர்களால் 40, 50 சதுர மைல் பிரதேசங்கள், கட்டடங்கள், வீட்டுத் தோட்டங்கள் நாசமாக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் சுண்டிக் குளத்திலிருந்து ஆனையிறவு வரை உவர் நீர்த் தாவரக் காடுகள், செறிந்த பறவைகள் சரணாலயப் பிரதேசங்களை இந்த யுத்தம் சின்னா பின்னப்படுத்தியுள்ளது. ஆனையிறவு, வவுனியா, திரிகோணமலை, மட்டக்களப்பு பகுதிகளிலும் ராணுவ முகாமிட்டிருக்கும் சுற்ற வட்டார பிரதேசங்களுக்கும் இதே கதிதான்.

ஈழ மக்கள் மீதான ராணுவ ரீதியான தாக்குதல்களை அன்றாடம் செய்திதாட்கள் மூலம் பெரும்பாலும் அறிய முடிகிறது. இதிலும் புலிகள் இறந்ததாக காட்டும் எண்ணிக்கையில் பெரும்பான்மை அப்பாவித் தமிழ் மக்கள்தான் என்பதும் யுத்தம் நடக்கும் பகுதிகளில் இருக்கும் சிறிதளவு தமிழ் மக்களின் வாழ்க்கையே பங்கருக்குள்தான் கழிகிறது என்பதும் தெரிந்ததே. ஆனால் யுத்தம் அழிக்கும் இயற்கைச் சூழலின் கோரத்தையும் இன்னொரு வகைத் தாக்குதலான பொருளாதார பண்பாட்டு ரீதியான தாக்குதல்களையும் இலங்கை அரசும் செய்திதாட்களும் இருட்டடிப்பு செய்து விடுகின்றன.

அரசியல் - ராணுவ ரீதியாக தமது ஆளுமையை நிலைநாட்ட முடியாது போகும்போது "பொருளாதார முற்றுகை" மூலம் நெருக்கடி கொடுப்பது போரில் எல்லா ஆதிக்க வெறியர்களும் கடைபிடிக்கும் மனிதவிரோத, நயவஞ்சக, கொடிய தாக்குதலே! பொருளாதாரத் தாக்குதல், நேரடி ஆயுத தாக்குதலைக் காட்டிலும் வலிமை மிக்கது; போராடும் மக்களை அணுஅணுவாக சித்திரவதை செய்து உளவியல் ரீதியாக - உணர்வு ரீதியாக முடமாக்கி அடிபணியச் செய்யும் ஆற்றல் பெற்றது. வடமாகாண மக்கள் மீதான இத்தகைய பொருளாதாரத்(தடை) தாக்குதல் விளைவித்திருக்கும் கோரம்; சிங்கள இனவெறி பாசிஸ்டுகளின் முகத்திரையை நன்கு திரை கிழிக்கிறது. இலங்கை பாசிச அரசின் மனிதாபிமான கூச்சல், நல்லெண்ண, சமாதானப் பேச்சு வார்த்தை, சேவை - உதவி நடவடிக்கைகள் எல்லாம் எவ்வளவு போலியானது என்பதை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. இத்தகைய பொருளாதார முற்றுகை நோக்கில் அண்மையில் இலங்கை அரசு எடுத்த காட்டுமிராண்டி நடவடிக்கைகள் இரண்டு. ஒன்று, படுவான்கரை நெல்வயல்களை தீவைத்து நாசமாக்கியது. இன்னொன்று, கிளாலி கடலேரி பயணிகள் படுகொலை.

வட-கிழக்கு மாகாணங்களில் வயல்கள் சாகுபடி செய்ய வேண்டுமானால் ராணுவத்தினரின் அனுமதி பெற வேண்டும். இது வடகிழக்கில் ராணுவக்கட்டுப்பாடு உள்ள பகுதிகளில் வலுக்கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த வகையில் இரண்டு மாதங்களுக்கு முன்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரை பகுதியில் அறுவடைக்கு தயாராக இருந்த நூற்றுக்கணக்கான ஏக்கர் நெய்வயல்கள் அரசு அனுமதி பெறாமல் சாகுபடி செய்யப்பட்டது என்றும் புலிகளுடைய சாகுபடி இது என்றும் காரணம் கூறி புலி எதிர்ப்பு தமிழ் குழு ஒன்றின் உதவியோடு தீ வைத்து கொளுத்தி நாசமாக்கியது ராணுவம். வட-கிழக்கு மாகாணத்தில் அரிசி யானை விலை விற்கிற இந்நிலையில், ஏன், மட்டக்களப்பு மாவட்டத்திலேயே 18 வருடம் காணாத கடுமையான வறட்சியும் குடிநீர்த் தட்டுப்பாடும் நிலவுகிற இந்நிலையில் இக்காட்டுமிராண்டி, கண்மூடிச் செயலை இலங்கை அரசு செய்ததற்கு காரணம் இனவெறிதான்! வியட்நாம் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க அமெரிக்க ராணுவம் வயல்களுக்கு தீ வைத்து அழித்த அதே நடவடிக்கை!

இதுவன்றி கிழக்கு மாகாணங்களில் முஸ்லீம்கள், புலிகளுக்கிடையிலான மோதல்களினால் எதிரெதிர் தரப்பினரது வயல்களையும் அழித்து பழிவாங்கிக் கொள்கிறதும் நடக்கிறது. கடந்த ஆண்டு ஆகஸ்டில் மட்டக்களப்பு - அம்பாறை எல்லைக் கிராமத்தில் 3 முஸ்லீம் விவசாயிகள் கொல்லப்பட்டதையடுத்து தமிழ் விவசாயிகளின் நெற்போர்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்திற்கான தரைவழி மார்க்கம் அனைத்தும் துண்டிக்கப்பட்டுவிட்டது. ஆனையிறவு, சங்குப்பிட்டி - பூநகரிப் பாதையருகே முகாம் அமைத்து புலிகள் மற்றும் யாழ் மக்கள் பயன்படுத்த முடியாவண்ணம் மூடியது இலங்கை அரசு. தரை மார்க்கம் தடைபட்டதால் யாழ் மக்கள் கடல்வழி மார்க்கத்தையே பயன்படுத்தி வருகின்றனர். கிளாலி கடல்வழி மார்க்கம் யாழ் மக்களுக்கு இருக்கும் ஒரு முக்கிய கடல்வழியாகும். இவ்வழி மூலமே சிறிதளவு அத்தியாவசியப் பொருட்கள் பெற்று வருகிறார்கள். இக்கடலேரி மார்க்கத்தையும் தடை செய்யப்பட்டதாக அறிவித்தது இலங்கை அரசு. பல படகுகளை தாக்கி அழித்து ஆட்டம்போட்டு வந்தது. கடந்த ஜனவரி 2-ந்தேதி இவ்வழியே பயணித்த தமிழ் மக்களின் படகுகளை தாக்கியதில் 60 பேர் படுகொலை செய்யப்பட்டனர். சிலரது பிணங்களே கரையொதுங்கின. எண்ணற்றோரை சுட்டு பிணமாக்கி படகோடு கொளுத்தி அழித்தது சிங்கள இனவெறிப் படை! இதற்கு முன்பு 85-ல் நெடுந்தீவுக் கடலிலும், 86-ல் மண்டைத்தீவுக் கடலிலும் நிகழ்த்திய கோரமான படுகொலைக்கு ஒப்பானதாக இக்கிளாலி படுகொலை நடந்துள்ளது.

யாழ்ப்பாணத்தின் அனைத்து தொடர்புகளும் - மார்க்கமும் துண்டிக்கப்பட்ட நிலையில் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் மூலமாக கிடைக்கும் மிகச் சிறிய அளவிலான உணவுப் பொருட்கள் - அத்தியாவசியப் பொருட்கள்தான் யாழ் மக்களுக்கு இருக்கும் பொருளாதார உறவே. யாழ்ப்பாணத்தில் மட்டும் சுமார் 8 லட்சம் பேர் வசிக்கிறார்கள். இவர்களுக்குத் தேவையான 13.5 மெட்ரிக் டன் எடையுள்ள உணவில்

| பொருட்கள் | அளவு | கொழும்பில் விலை | யாழ்ப்பாணத்தில் விலை |
|---|---|---|---|
| மண்ணெண்ணை | 1 போத்தல் | 33 ரூபாய் | 250 ரூபாய் |
| பெட்ரோல் | 1 போத்தல் | 33 ரூபாய் | 3000 ரூபாய் |
| அரிசி | 1 கிலோ | 22 ரூபாய் | 50 ரூபாய் |
| சீனி | 1 கிலோ | 26 ரூபாய் | 70 ரூபாய் |
| சன்லைட் சோப்பு | 1 கட்டி | 7 ரூபாய் | 22 ரூபாய் |
| தீப்பெட்டி | 1 | 1 ரூபாய் | 14 ரூபாய் |
| 40 பக்க கொப்பி | 1 | 5 ரூபாய் | 20 ரூபாய் |
| பஸ் கட்டணம் | 4 கி.மீ. | 3 ரூபாய் | 20 ரூபாய் |

படிப்பகம்

www.padippakam.com

ஆறில் ஒரு பங்கைதான் அதுவும் 3 அல்லது 6 மாதங்களுக்கு ஒரு முறைதான் செஞ்சிலுவை சங்கம் கொடுத்துதவுகிறது. லயன்ஸ் கிளப், நார்வேயைச் சேர்ந்த போரூட் நிறுவனம் போன்ற 'சேவை' நிறுவனங்களால் வழங்கப்படும் உதவிகளும் - இலங்கை அரசால் தடுக்கப்படுகிறது. யாழ்ப்பாணத்திற்குரிய உணவுப் பொருட்கள் குறிப்பாக குழந்தைகளுக்கான பால் பவுடர் கொழும்பு துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கின்றன. அதே சமயம் குழந்தைகளுக்கான பால் பவுடர் தட்டுப்பாடு யாழ்ப்பாணத்தில் கடுமையாக உள்ளது. இலங்கை அரசு, இலங்கை முழுவதும் இலவசமாக விநியோகிக்கும் திரிபோசா மாவைக்கூட யாழ்பகுதி குழந்தைகளுக்கு கிடைக்க அனுமதிப்பதில்லை. யாழ் மக்களின் வாழ்க்கைக் கொடுமையை மேல்கண்ட விலைப்பட்டியலை ஒப்பிட்டுப் பார்த்தாலே நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

இன்னமும் வடக்குப்பகுதி தன்னுடைய நாட்டின் ஒரு பகுதி எனக் கூறிக் கொள்கிற இலங்கை அரசு அங்கு வாழும் மக்களின் நலனில் சிறிதும் அக்கறை எடுத்துக் கொள்வதில்லை. அரசு கட்டுப்பாட்டிலிருக்கும் பகுதியிலிருந்து புலிகள் கட்டுப்பாடு உள்ள பகுதிகளுக்குச் செல்லும் வவுனியா, திரிகோணமலை போன்ற பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு அளவான பொருட்களே எடுத்துச் செல்ல அனுமதியுண்டு. மண்ணெண்ணெய், பெட்ரோல், மருந்துகள் உட்பட 47 வகைப் பொருட்கள் எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளன. ஒருவர் ஒரு சிறிய பாட்டில் அளவே அடிப்படை மருந்தான 'பாராசிட்டமால்' மாத்திரையை எடுத்துச் செல்ல முடியும். வியாபாரிகள் கூட மண்ணெண்ணெய் போன்ற பொருட்களை குறிப்பிட்ட அளவே கொண்டு செல்ல முடிகிறது. எந்தப் பொருளானாலும் வெளித்தெரியும் வண்ணம் பாலீத்தீன் போன்ற உறைகளால் மூடப்பட்டிருக்க வேண்டும். ராணுவத்தினரின் கடுமையான சோதனைக்குப் பிறகே நகர முடியும். இக்கட்டுப்பாடு யாழ்ப்பாணம் செல்பவராக இருந்தால் பலமடங்கு அதிகரிக்கும்; தீவிரமாகும். இப்படி இரண்டு கட்டுப்பாட்டு பகுதிகளிடையே போக்கு வரத்தை தமிழ் மக்கள் மேற்கொண்டாலும் வெளியே போனவர் வீடு திரும்பு வாரா என்பதை உறுதி சொல்ல முடியாது. குண்டு தாக்குதலால் உயிர் போகிறது என்பதைவிட புலிகள் என்று அரச படைகளாலும், துரோகிகள் - அரசு கைக்கூலிகள் என்று புலிகளாலும் கைது செய்து அப்பாவி மக்கள் 'தண்டனை' பெறுவதும் ஏராளம்.

செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் தனிப்பட்ட நபர்கள், வியாபாரிகள் கொண்டு வரும் அத்தியாவசியப் பொருட்களை கணிசமான அளவு அரசு அதிகாரிகளும் புலிகளும் குறைந்த விலைக்குப் பிடுங்கிக் கொள்வதாலும் பொருள் தட்டுப்பாடு - விலையேற்றம் நீடிக்கிறது. அண்மையில் கொழும்பில் இருந்து 45 பேரல் மண்ணெண்ணெய் கொண்டு வந்த ஒரு வியாபாரியிடம் கொழும்பு கொள்விலையில் 30 பேரல்களை புலிகள் வலுக்கட்டாயமாக



வடமாகாணங்களில் புலிகள் கட்டுப்பாட்டு பகுதிக்குள் செல்லும் மக்கள், ராணுவத்தின் கடுமையான சோதனைக்குப் பிறகே நகர முடியும்.

பறித்துக் கொண்டு 15 பேரல்களையே விற்க அனுமதித்துள்ளனர். இதேபோல் அரசு, மாணவர்களுக்கு கொடுக்கின்ற 9 மாதப் பணத்தில் 6 மாதப் பணத்தை புலிகள் தமக்கென அபகரித்துக் கொள்கின்றனர். இதனாலும் வறுமை காரணமாகவும் மாணவர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட இலவச சீருடையை 40 ரூபாய்க்கு விற்றது, கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் நடந்துள்ளது.

இவ்வளவு நெருக்கடிக்கு மத்தியிலும் தமிழீழ மக்கள் துவண்டு விடாமல் இல்லாமையோடு போராடி வாழ்ந்து வருகிறார்கள். அத்தியாவசியப் பொருட்கள் தேவைக்கு இயற்கை விளை பொருட்களை தேடியெடுத்தும், சுய சார்பு பொருளுற்பத்தியில் கவனம் செலுத்தியும் வருகிறார்கள். இத்தகைய முயற்சி, செஞ்சிலுவை சங்க உதவி எல்லாம் ஒட்டுமொத்தமாக சேர்ந்தாலும் வடமாகாண மக்களின் தேவையில் 3-ல் ஒரு பங்குதான் நிறைவாகிறது. இதன் விளைவு, மக்கள் பட்டினியிலும், வறுமையிலும் சிக்கி நோய் வாய்ப்படுகிறார்கள். குழந்தைகளோ ஊட்டச்சத்தின்றி நோஞ்சான்களாக காட்சியளிக்கின்றன. மருத்துவமனைகளில் மருந்து இல்லாத காரணத்தினால் நோய் வாய்ப்பட்டவர்கள் சிகிச்சையின்றி இறப்பதும் சாதாரணமாகிவிட்டது. சிறியவர் முதல் முதியவர் வரை ஒவ்வொரு நாளும் வடமாகாண மருத்துவமனைகளில் சுமார் 15 பேர் உயிரிழக்கின்றனர். ஊட்டச்சத்தின்மை காரணமாக மலேரியா, டயோரியா நோய்க்கு ஆளாகி கடந்த 7 மாதங்களில் புலிகள் கட்டுப்பாட்டிலுள்ள - யாழ், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா பகுதியிலுள்ள - மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 14,416 குழந்தைகளில் 905 பேர் மரணமடைந்துள்ளனர். போதிய உணவின்மை, வறட்சி, சுற்றுப்புற சீர்கேடு காரணமாக காலரா, வடமாகாணம் முழுவதும் பரவி பலரை பலி கொண்டு வருகிறது. கடுமையான வறட்சியால் ஆடு, மாடுகளும் மடிகின்றன. நாய்கள், வெறிப்பிடித்தலைவதால் நாய்க்கடிக்கும் பலர் பாதிக்கப்பட்டு மரணமடைகின்றனர்.

நார்வேயைச் சேர்ந்த போரூட் நிறுவனத்தில் வேலை செய்யும் மனோதத்துவ மருத்துவர் ஹெரால்டு ரெப்பஸ்கார்டு, பல மருத்துவ மனைகளில் நடத்திய ஆய்வுக்குப் பின் ''யாழ்ப்பாணத்தில் பெரும்பான்மை நோயாளிகள் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாகவே, சமூக நம்பிக்கையற்றவர்களாவே உள்ளனர்'' என்று கூறுகிறார். போரினால் - குண்டு சத்தத்தினால் நிம்மதியான உறக்கமின்மை, அடிக்கடி பங்கருக்குள் பதுங்கும் வாழ்க்கை, குண்டு தாக்குதலால் தமது தோட்டங்களும் வீடுகளும் நாசமாவது, உறவினர்கள் போரில் மடிவது, கை-கால் ஊனமாவது, போதிய உணவின்றி குழந்தை உட்பட பசியால் பரிதவிப்பது, படிப்பு - வேலை இல்லாமல் கேள்விக்குறியாகியிருக்கும் பிள்ளைகளின் வாழ்வு, குடும்பத்தினர் பலர் அகதி முகாமிலும் வெளிநாடுகளிலும் பிரிந்து இருப்பது - எளிதாக தகவல் தொடர்பும் கொள்ள முடியாத அடக்குமுறை அரசின் கொடிய சித்திரவதைகள் - அவமானங்கள், பாலியல் பலாத்காரங்கள் ஆகிய காரணங்களால் மக்கள் மனநிலை பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இக்காரணங்களால் சமூகப் பிரச்சினைகளும் அதிகரிக்கின்றன. ஈடுகொடுக்க முடியாதவர்கள், தற்கொலை செய்து கொள்வதும் நடக்கிறது. உலகநாடுகள் வரிசையில் தற்கொலையில் இலங்கை இரண்டாவது இடத்தை வகிக்கிறது. வட மாகாணத்தில் அதுவும் மாவட்ட ரீதியில் வவுனியாவிலேயே அதிக தற்கொலைகள் இடம் பெற்றுள்ளன.

எதை சாதிக்க நினைக்கிறதோ அதை படிப்படியாக சாதித்து வருகிறது, இலங்கை அரசு. தொடர் யுத்தம், பொருளாதார முற்றுகையினால் மக்களின் போராட்ட உணர்வை மழுங்கடித்து, அவர்களது சமூக - பண்பாட்டு - கலாச்சாரத்தை சீரழித்து உளரீதியாக தாக்கி முடமாக்குவதை செய்து வெற்றிப்படியிலிருக்கிறது இலங்கை இனவெறி அரசு. இதற்கு தகுந்த பதிலடி கொடுப்பதிலும் மக்களின் சமூக பண்பாட்டு - கலாச்சார வாழ்வை மேம்படுத்தி நம்பிக்கையூட்டி வளர்த்தெடுப்பதிலும் புலிகள் பின்னடைந்தே உள்ளனர். சுயசார்பு பொருளுற்பத்தி முறையிலும் சமூக - கலாச்சார உறவுகளை மேம்படுத்துவதிலும் புலிகள் அண்மைக்காலமாக தவிர்க்க முடியாத தேவையை ஒட்டி அதிக கவனம் செலுத்தி வந்தாலும் அவர்களது மக்கள் விரோத ராணுவ - அடாவடி நடவடிக்கைகள், பாசிச அணுகுமுறைகள் காரணமாக மக்களை சிங்கள இனவெறி அரசின் தாக்குதலிலிருந்து மீட்டெடுக்க முடியவில்லை. மக்களை துப்பாக்கி முனையில் வென்றெடுக்க முடியாது என்பதை புலிகள் உணராதவரை இவர்களால் இலங்கை அரசுக்கு மாற்றாக

www.padippakam.com

மக்களுக்கு எதையும் தந்துவிட முடியாது வடக்கு மாகாணத்திலிருந்து, ஏன் யாழ்ப்பாணத்திலிருந்தே ஏராளமானோர் இன்னமும் அகதிகளாக வெளியேறிக் கொண்டுள்ளனர் என்பதை அவர்களே ஒத்துக்கொள்கிறார்கள். இந்நிலை தொடரவே செய்யும்.

சிங்கள இனவெறி அரசின் தாக்குதலால் தமிழீழம் பாலவனமாகிவருவதையும், தமிழ் மக்கள் பட்டினிச் சாவுக்குத் தள்ளப்படுவதையும் மனிதாபிமானமுள்ள ஜனநாயக சக்திகள் யாரும் அனுமதிக்க முடியாது; சகித்துக் கொள்ளவே முடியாது. சிங்கள இனவெறி அரசின் பொருளாதாரத் தடையை அகற்ற, அப்பாவி தமிழ் மக்கள் மீதான ராணுவ - பொருளாதார தாக்குதலுக்கு எதிராக அனைவரும் குரல கொடுக்க வேண்டும்.

ஈழ அகதிகள் மீதான சிங்கள அரசின் ஒடுக்குமுறையும் கொடியதே. இவர்களின் வாழ்வும் யாழ் தமிழ் மக்கள் வாழ்வைக் காட்டிலும் எவ்விதத்திலும் மேம்பட்டுவிடவில்லை. கொழும்பு, வவுனியா, திரிகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் 6 லட்சத்திற்கும் மேற்பட்ட அகதிகள், முகாம்களில் உள்ளனர். இங்குள்ள அகதிகளுக்கு ஒரு நாளைக்கு 380 ரூபாய் பெறுமான பொருட்கள் வழங்கப்படுகின்றது. இது பற்றாக்குறையாக இருந்த போதும் ஏனைய பொருட்கள் வாங்குவதற்கு இதனை விற்றே வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளனர். இருண்டுக் கிடக்கும், காற்றோட்ட வசதியில்லாத, பொருள் சேமிக்கப்படும் பண்டக சாலை எல்லாம் அகதி முகாம் ஆக்கப்பட்டுள்ளது. திரிகோணமலை துறைமுக பண்டகசாலையில் 1000 பேர் மூட்டைகளைப் போல் அடைக்கப்பட்டுள்ளனர். ''கொழும்பில் இரு முகாம்களை பார்வையிட்டேன். சரசுவதி மண்டபத்திலும் பம்பலப்பிட்டி கோயிலிலும் 800 பேர் அகதிகளாக உள்ளனர். இங்கு குடும்பங்கள் சிறுசிறு குடிசைகள் அமைத்து வாழ்கின்றனர். இவர்கள் காட்போர்டு அட்டைகளிலும், நிலத்திலும் படுத்துறங்குகின்றனர்'' என்று சுவிட்சர்லாந்திலிருந்து இலங்கை சென்று திரும்பிய சமூக சேவகர் ஹீகோ லாகர் என்பவர் குறிப்பிடுகிறார்.

யாழ்ப்பாணத்திலிருந்தும் யுத்தம் நடக்கும் வடக்கு மாகாணத்திலிருந்தும் வெளியேறி அகதி முகாம்களிலும் வெளி நாடுகளிலும் தஞ்சமடைவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டுள்ளது. போதாததற்கு தமிழகத்திலுள்ள அகதி முகாம்களிலிருந்தும் தவணை முறையில் ஆயிரக்கணக்கானோர் திருப்பி அனுப்படுகிறார்கள். 3 தவணைகளில் 30,000 பேர் அனுப்பப்பட்டுள்ளனர். இதுவன்றி முஸ்லிம் - தமிழர்கள் மோதலினால் கிராமங்களிலிருந்து வெளியேறி பலர் அகதிகளாக வந்து சேர்கிறார்கள். சுவிட்சர்லாந்து போன்ற மேலை நாடுகளும் தமிழ் அகதிகளை வெளியேற்றப் போவதாக அறிவித்துள்ளன.

அகதிகள் பிரச்சினைக்கு மாற்று தீர்வாக இலங்கை அரசு முன்வைப்பது மறுவாழவுத் திட்டம்; அதாவது தமிழர்கள் பகுதிகளில் அவர்களை மீண்டும் குடியமர்த்துவது என்பதே. வடக்கில் அநேகப் பகுதிகள் கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமாகி பாலைவனமாக காட்சியளிக்கின்றன. இது போன்ற பகுதியில் 50 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 15000 மக்களை குடியமர்த்த வேண்டுமானால் புணர் நிர்மாணம் செய்யும் பணிக்கு 30 கோடி ரூபாய் வரை தேவைப்படுகிறது. புலிகளுடனான யுத்தத்தில் ஏற்படும் இழப்புகளையே ஈடுகட்டுவதற்கு முடியாத வண்ணம் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் இலங்கை அரசு, தமிழர் புணர்வாழ்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் என்பது வெறும் கனவே. யதார்த்தத்தில் புணர்வாழ்வு திட்டத்தின் மூலம் தமிழர் பகுதியில் சிங்களர், முஸ்லீம்களின் குடியேற்றம்தான் நடக்கிறது. சீனன்குடா, தம்பலகாமம், மூதூர், கட்டைபறிச்சான் மற்றும் கடற்கரை கிராமங்களை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். சிங்கள இனவெறி அரசின் இந்த அயோக்கியத்தனம் ஆக்கிரமிப்பு இனப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கவே செய்யும்.



ஈழத்தில் குழந்தைகளோ ஊட்டச்சத்தின்றி நோஞ்சான்களாக காட்சியளிக்கின்றன. வடமாகாண மருத்துவமனைகளில் மருந்து இல்லாத காரணத்தால் தினம் 15 பேர் உயிரிழக்கின்றனர்.

கிராமங்களில் மீண்டும் குடியமர்த்துகிறோம் என அழைத்துச் செல்லப்படும் ஒரு சில தமிழ் குடும்பங்களின் நிலையோ கொடுமையானது. பொட்டல் காடாகியிருக்கும், மனித நடமாற்றமற்ற இடங்களில் அநாதரவாக இறக்கிவிடப்படுகிறார்கள். சொந்த மண்-கிராமமாக இருந்தாலும் வீடு, வேலையற்ற நிலையில் அவர்களால் அங்கு என்ன செய்ய முடியும்? திண்டுக்கல் அகதி முகாமிலிருந்து திருப்பியனுப்பப்பட்ட குடும்பங்களில் ஒருவரான ஞானபாக்கியம் என்பவர் தமது சொந்த கிராமமான வவுனியா - சமயபுரத்திற்கு வந்தடைந்ததும் ''இன்றைக்குத்தான் எங்கள் கிராமத்திற்கு திரும்பினோம். இங்கு வீடுகளே இல்லை. நாங்கள் எல்லாவற்றையும் இழந்துள்ளோம். வீடுகட்டுவதற்கும் எங்களிடம் பணம் இல்லை. என்னுடைய கணவர் லாரி டிரைவராக இருந்தவர். அவருக்கு வேலை கிடைக்கும் என்று எங்களுக்கு நம்பிக்கையில்லை'' என்கிறார். யாழ்ப்பாணத்திற்கு திரும்பி வந்த சுசீலா என்பவரின் குடும்பம் ஒரு மாதம் கொழும்பில் தங்கி சம்பாரித்த பணத்தையெல்லாம் வழியில் போக்குவரத்துக்கே செலவழித்துவிட்டு அநாதரவாக செய்வதறியாமல் நிற்கிறார்கள். கொழும்பிலிருந்து கிளிநொச்சி வருவதற்கு வேன் டிரைவருக்கு தலா நானூறு ரூபாய் வரை கொடுத்திருக்கின்றனர். கிளிநொச்சியிலிருந்து பிரச்சினைக்குரிய கிளாலி கடல் வழியாக யாழ்ப்பாணம் வருவதற்காக தலா 1500 ரூபாய் கொடுத்துள்ளனர். இதுபோன்று ஒருவர் 'குடியேறினால்' அம்மாவட்டப் பகுதியிலிருந்து வெளியேறுவோரோ பலராக உள்ளனர்.

அகதிகளாக நகர் புறத்திற்கும் சிங்களப் பகுதிகளுக்கும் குடிபெயர்பவர்கள் மற்றும் அரசு அகதி முகாம்களில் உள்ளவர்களும் எந்நேரமும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுதான் இருக்க முடிகிறது. ஏனெனில் இலங்கை அரசின் அவசர காலச் சட்டம் இப்பகுதிகளில் நடைமுறையாகுவதும், போலீஸ் - ராணுவத்தினரின் கைது, சித்திரவதை, கொலை கொடுமைகள் நிகழ்வதும் அளவிடற்கரியது. யாரையும் விசாரிக்க, சோதிக்க மட்டுமல்ல இவை எதுவுமில்லாமல் கைது செய்யவும் தண்டனையளிக்கவும் போலீசிற்கு சிறப்பு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. காரணம் கூறப்படாமல் கைதாகி, நீதிமன்றத்திலும் ஆஜர் செய்யப்படாது, தடுப்புக்காவல் உத்தரவு அல்லது அவசரகால விதிகளின் கீழ் கொழும்பு மகசீன் சிறையிலும், களுத்துறைச் சிறைச்சாலையிலும் சுமார் 600 தமிழர்கள் காவல் வைக்கப்பட்டுள்ளனர். ஏறக்குறைய 2000 தமிழர்கள் பல்வேறு தடுப்பு முகாம்களில் எவ்வித விசாரணையின்றி 3 வருடகாலமாக சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

கடுமையான சித்திரைவதையால் இறந்தவர்கள் பலர்; விடுதலை செய்யப்பட்ட பின்னரும் சித்திரவதையால் பாதிப்புகளால் இறந்தவர்களும் பலர். அதிசயமாக நீதிமன்ற விசாரணைக்கு கொண்டு வரப்பட்டவர்கள் விடுதலையளிக்க தீர்ப்பளிக்கப்பட்டாலும் அவர்கள் திரும்பவும் தடுப்பு முகாமகளுக்கு கொண்டு போய் அடைத்து வைக்கப்படுகிறார்கள். இத்தகைய கொடுமைக்கு தமிழர்கள் மட்டுமல்ல சுமார் 5500 சிங்களவர்களும் ஆளாகியுள்ளார்கள். கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் கூட அவர்களைப்பற்றி அறிந்து கொள்ள முடியாதவண்ணம் அடக்குமுறைகள் தீவிரமாகவுள்ளது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மட்டுமே எல்லா இடங்களிலும் பிரவேசிக்க அனுமதியுண்டு. ஆனால் இவர்கள் அரசு தரப்பு சிறைச்சாலைகளின் மனித உரிமை மீறல்களை கண்டிக்காது ஓர வஞ்சகமாக நடந்து கொள்கின்றனர். காணாமல் போனவர்கள் சிறைகளில் இருக்கிறார்களா என தகவல் தெரிந்து கொள்ள உறவினர்கள் கெஞ்சினாலும் செஞ்சிலுவை சங்கத்தினர் உதவுவதில்லை.

www.padippakam.com



தமிழர்கள் மீதான சிங்கள போலீசு - ராணுவத்தின் இனவெறிப் படுகொலை நாளும் பெருகுகிறது.

ஏதோ கொஞ்ச நஞ்ச இருப்போடு வாழ்வுக்காகப் போராடிக் கொண்டிருந்த தமிழீழ மக்களும் தமிழ் அகதிகளும் இன்று இல்லாமையால் சாவோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கை அரசு சர்வதேச அகதிகள் தொடர்பான சட்டத்தையெல்லாம் குப்பையில் வீசிவிட்டு தமது புறக்கணிப்பையும், ஒடுக்குமுறையையும் தடையில்லாமல் நடைமுறைப்படுத்துகிறது. இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள், இனவெறிப் படுகொலைகள் தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுகளும், ஆய்வுகளும், அறிக்கைகளும் வெளிவந்துவிட்டன. ஏன், தமிழகப் பகுதிகளின் பாதையை திறந்துவிட்டு அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்க வழிவகை செய்யும்படி ஐ.நா. சபையின் உத்தரவும் மதிக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டும் இலங்கை அரசு மீது எவ்வித நடவடிக்கை இல்லை. ஐ.நா. சபைக்கு இதற்கு எங்கே நேரமிருக்கிறது? சீனாவையும், ஈராக்கையும், கியூபாவையும், லிபியாவையும் அமெரிக்க கட்டளைப்படி மிரட்டுவதற்கும் கண்டித்து எச்சரிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதற்குமே அதற்கு நேரம் போதவில்லையே! பிரச்சினையை வளரவிட்டு பின்னர் அதில் குளிர்காய்வதுதானே ஐ.நா சபை மற்றும் அமெரிக்காவின் வாடிக்கை. சோமாலியாவில் இதைத்தானே நடைமுறைப்படுத்துகிறார்கள்? அதுபோலவே இலங்கையிலும் சமாதானம் - பாதுகாப்பு - உதவி என்ற பெயரில் மூக்கை நுழைப்பதற்கு காலத்தையும், காரணத்தையும் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறது. அமெரிக்கா - ஐ.நா படை. ஐ.நா. சபை மட்டுமல்ல உலக நாடுகள் எதுவும் தமிழ் அகதிகள் மீதான மனித உரிமை மீறல்கள், இனவெறிப் படுகொலைகளை கண்டிக்கவில்லை. இது எல்லா நாடுகளின் மனிதாபிமானம், மனித உரிமை, ஜனநாயகம் பற்றிய போலியான முகத்தை திரைகிழித்துக் காட்டுகிறது.

● சுப்பு

# பொன்னூரில் மீண்டும் உரிமைப் போர்!

**வ**ந்தவாசி - பொன்னூர் கிராமத்தின் தாழ்த்தப்பட்டவர்கள் மீதான மேல் சாதி ஆதிக்க சக்திகள் மற்றும் போலீசின் கூட்டுத் தாக்குதல்கள் தொடர்கின்றன. கோவில் திடலை தாழ்த்தப்பட்டவர்கள் பயன்படுத்துவதற்கு எதிராக, பஞ்சாயத்து தலைவராக இருந்த மண்ணுசாமி முதலியார் (தி.மு.க. பிரமுகர்) நீதிமன்றம் சென்று தடையுத்தரவு வாங்கினார். நீதிமன்றத்தின் அநியாயத் தீர்ப்பிற்கு எதிராக கொந்தளித்த தாழ்த்தப்பட்ட மக்கள் முதலியார் சாதியினரும் அத்திடலைப் பயன்படுத்துவதை தடுத்தனர். இது தொடர்பாக எழுந்த மோதலைத் தொடர்ந்து 8-11-92 அன்று போலீசு பொன்னூரையே முற்றுகையிட்டு தாழ்த்தப்பட்ட மக்களைத் தாக்கி சின்னா பின்னப்படுத்தியதை அறிவோம். இச்சம்பவத்திற்குப்பின் தமிழகமெங்கும் ஜனநாயக அமைப்பினரின் கண்டனமும் வந்தவாசியில் தாழ்த்தப்பட்ட மக்கள் 15000-க்கும் மேற்பட்டோர் திரண்ட பேரணியும் கண்டு பீதியுற்ற அரசு கண்துடைப்பிற்காக விசாரணை கமிஷன் அமைத்தது.

இவ்வருடத் திருவிழாவிற்கும் கோவில் திடலில் நிகழ்ச்சி நடத்துவதற்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தடைவிதிக்கப்பட்டது. ஆதிதிராவிடர் பாட்டை புறம்போக்கு இடத்தில்கூட விழா நடத்த அனுமதி மறுக்கப்படவே கொதிப்படைந்த மக்கள், மீறி 27-7-93 அன்று அம்மனுக்கு "கூழ் ஊற்றுவதை" கொண்டாடினர். செய்தியறிந்ததும் அடுத்தநாளே ஓடிவந்த அதிகாரிகள் பொன்னூரில் தடை உத்தரவு போடப்பட்டுள்ளதாக அறிவித்து விழாவை முறியடிக்க முனைந்தனர். ஆனால் கிளர்ந்தெழுந்த மக்கள் 500-க்கும் மேற்பட்டோர் திரண்டு அன்று இரவே வந்தவாசி அலுவலகத்தை முற்றுகையிட்டு "விழாவிற்கு அனுமதி தந்தாலே ஊர்த்திரும்புவோம்" என உறுதியாகப் போராடினர். வேறு வழியில்லாமல் வந்தவாசி கோட்ட வருவாய்த்துறை அதிகாரி, ஊருக்கு வந்து நிலைமையைப் பார்த்தப்பின் அனுமதி தருவதாக போலி சமாதானம் செய்து மக்களை அழைத்துவந்தார். பொன்னூரில் வந்து கருத்துகேட்டு நாடகமாடிவிட்டு மேல்சாதி வெறியர்களுக்கு சாதகமாகவே தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர்களை மிரட்டினார். பாட்டை புறம்போக்கிலும் விழா நடத்த மண்ணுசாமி முதலியார் தடை வாங்கியிருப்பதாக அதிகாரிகள் அறிவித்தனர்.

எனினும் 1-8-93 அன்று விழாவை நடத்தியே தீருவது என்ற உறுதியோடு திரண்ட தாழ்த்தப்பட்ட மக்கள் போலீசாரால் தாக்கப்பட்டனர். வெடிகுண்டு சோதனை கருவிகள் - தடுப்பு கருவிகள், இயந்திர துப்பாக்கிகள் சகிதம் 300-க்கும் மேற்பட்ட போலீசு பொன்னூரை முற்றுகையிட்டு போக்குவரத்தை அறவே நிறுத்தி பயணிகளையும் வீடுகளையும் சோதனையிட்டு பலரை கைது செய்தனர். விழா நடத்த திரண்டவர்களில் பெண்களை மிக மோசமாக தாக்கி கைது செய்தனர். இறுதியில் ஜோஸ், ஏசுமரியான், பா.கல்யாணி, தமிழ்முகிலன், சுந்தரராஜன், சுப்பையா உட்பட 10 முன்னணியாளர்களைப் பொருக்கி எடுத்து வழக்குப் போட்டு வேலூர் சிறையிலடைத்துள்ளனர்.

இரண்டாவது முறையாக பொன்னூர் மக்கள் மீது நடத்தப்பட்ட இக்காட்டுமிராண்டித் தாக்குதலை மூடிமறைக்க, வெளியூரிலிருந்து வந்த தீவிரவாதிகள் கிணற்றில் விஷம் கலக்கவும், குண்டு போடவும் சாதி மோதலை தூண்டவும் முயன்றதால் கைது செய்யப்பட்டதாக பொய்ப் பிரச்சாரத்தை அதிகார வர்க்கமும் போலீசும் கட்டவிழ்த்து விட்டன. இதை பார்ப்பனீயப் பத்திரிக்கைகள் அனைத்தும் அப்படியே வாந்தியெடுத்தன. தாழ்த்தப்பட்டவர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்கிற அதேசமயம் முன்பு போல் தாழ்த்தப்பட்டவர்கள் அடங்கி ஒடுங்கி அஞ்சிக் கிடப்பதை தவிர்த்து உரிமைகேட்டு வீதிக்கு வந்து போராடுகிற சம்பவங்கள் அண்மைக்காலமாக பலவற்றை பார்க்க முடிகிறது. ஆனால் தாழ்த்தப்பட்டவர்கள் சுயநலவாத - பிழைப்புவாத தலைவர்கள், பெயர்ப்பலகை அமைப்புகள், தன்னார்வ குழுக்கள், குட்டி முதலாளித்துவ தலைவர்கள் பின்னால் சிதறுண்டு கிடக்கிறார்கள். தவறான துரோகத் தலைமைகளைத் தூக்கியெறிந்து சரியான - புரட்சிகர தலைமையின்கீழ் ஒன்றாக திரளும்போதே குறைந்தபட்ச உரிமையைக்கூட சாதித்து நிலைநிறுத்த முடியும்.

www.padippakam.com

# சென்னையில் வெடித்தது ஆர்.எஸ்.எஸ். ஆயுதக் கிடங்கு

**தம்மை சாதுவாக காட்டிக் கொள்ள ஆர்.எஸ்.எஸ். குடை அமைப்புகள் என்னதான் முயன்றாலும் அவற்றின் இந்துமதவெறி பாசிசம் ஊரறிந்த ரகசியமே.**

கடந்த ஆகஸ்டு 8-ல் சென்னையிலுள்ள ஆர்.எஸ்.எஸ். தலைமை அலுவலகத்தில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தை, ''ராஜீவ் கொலை செய்யப்பட்டதற்குப் பின் தமிழ்நாட்டில் நடந்துள்ள கொடூர சம்பவம்'' எனப் பெரும்பாலான பத்திரிகைகள் பரபரப்பூட்டி எழுதின. மறுபுறம் பா.ஜ.க. கும்பலோ இறந்து போனவர்களை மிகப்பெரிய 'தேச' பக்தர்களாகச் சித்தரித்தது. வன்முறைக்கு எதிராக நீலிக் கண்ணீர் வடித்து மக்களிடம் அனுதாபம் தேட முயலுகிறது; அதனுடன் முஸ்லீம்களுக்கு எதிராக இந்து மதவெறியைத் தூண்டிவிடும் நோக்கில் இறந்தவர்களைச் சுடுகாட்டுக்கு அனுப்பிய பின்னும் பந்த், கடையடைப்பு, ஊர்வலம் என அறிவித்து ஊதிப் பெருக்க முயலுகிறது.

''சென்னை ஆர்.எஸ்.எஸ். அலுவலத்தினுள்ளே பொது நூலகமும் இலவச மருந்தகமும் இயங்கி வருகிறது. எனவே யார் வேண்டுமானாலும் எளிதாக உள்ளே நுழையலாம். குருபூஜை நடந்த அன்றே குண்டு வெடித்துள்ளதால் இது தலைவர்களை அழிப்பதற்கான திட்டமிட்ட சதி'' - இவையெல்லாம் குண்டு வெளி நபர் மூலம் தான் உள்ளே கொண்டு வைக்கப்பட்டது; தென்னகத்தில் அமைப்பின் வளர்ச்சியை விரும்பாத சக்திகளின் சதிச்செயல் என்பதற்கு நிருபணமாக ஆர்.எஸ்.எஸ். சொல்லும் காரணங்கள். அதனுடன் ''பம்பாய், கல்கத்தா குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்ச்சியாக இக்கொடூரம் நடந்துள்ளது. மேலும் சென்னையில் ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கி - ஆர்.எஸ். எஸ். - தாக்குதல் முனை திருப்பப்பட்டுள்ளது. மத்திய ரசு அறிக்கை தர வேண்டும்; சி.பி.ஐ. விசாரணை தேவை'' என்றெல்லாம் கூப்பாடு போட்டு இச்சம்பவம் ''பாகிஸ்தானின் மற்றும் முஸ்லீம் தீவிர வாதிகளின் சதிச் செயல்'' என நிருபிக்க பகீரத பிரயத்தனம் செய்கிறது.

குண்டு வெடிப்பு நடந்த 15-வது நிமிடத்திலேயே நிருபர்களும் புகைப்படக்காரர்களும் வந்த பின்னும், அவர்கள் ஒரு மணி நேரம் கழித்தே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். தடயங்கள் அழிந்துவிடக் கூடாது எனப் போலீஸ் காரணம் கூறினாலும், காவல்துறையைச் சேராத வெளி ஆட்கள் பலர் அப்பொழுது இடிபாடுகளை அகற்றிக் கொண்டிருந்ததாக அனைத்துப் பத்திரிகைகளுமே எழுதியுள்ளன. மேலும் குண்டு வெடித்த பின்னும் அதனின் தொடர்ச்சியாகவும் போலீஸ் கண்துடைப்புக்காகத்தான் காவல் நின்றது. கட்டிடத்தினுள்ளே யாரை அனுமதிப்பது எனத் தீர்மானித்ததுடன் சடலங்களையும் இடிபாடுகளையும் அகற்றுவது என கட்டிடத்தின் முழுக்கட்டுபாட்டையும் ஆர்.எஸ்.எஸ். தன் கையிலேயே வைத்திருந்தது. முழுமையாகத் தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டு முன்பே 'புல்டோசர்' பயன்படுத்தப்பட்டு இடிபாடுகள் அகற்றப்பட்டுள்ளன. இதனால் கட்டிடத்தின் எப்பகுதியில் குண்டு வெடித்தது என்பதைக் கண்டுபிடிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. 25 அறைகளைக் கொண்ட இக்கட்டிடத்தின் மேல் தளப்பகுதியில் இரண்டு அறைகள் தவிர்த்து பெரும்பாலானவை தொண்டர்களால் பயன்படுத்தப் படுவதில்லை. காவல்துறைக்குக்கூடச் சில அறைகள் திறந்து காட்டப்படவில்லை எனத் தகவல் வெளிவருகின்றன.

ஆர்.எஸ்.எஸ். அமைப்புரீதியாக பயிற்றுவிக்கப்பட்ட இயக்கமாதலால் தலைமை அலுவலகத்தில் புதிய ஆட்கள் நுழைவது பணியாளர்களின் கவனிப்பில் இருந்து தப்பிவிட முடியாது. மேலும், இக் கட்டிடத்தினுள் நுழைவதற்கு ஒரே ஒரு வழி தான் உண்டு. எனவே இக்குண்டு வெடிப்பில் பயன்படுத்தியுள்ளதாகக் கூறப்படும் 20 கிலோ எடையுள்ள ஜெலட்டின் குச்சிகளைப் பார்சல் செய்து கொண்டு உள்ளே வருவதை எளிதாக கண்டு உணர்ந்திருக்க முடியும். இச்சம்பவத்தில் இறந்தவர்களில் ஒருவர் தவிர பிறர் அனைவரும் கட்டிடம் இடிந்ததன் காரணமாகவே உயிரிழந்துள்ளனர். பிரேதப் பரிசோதனையின்பொழுது யாருடைய உடம்பிலிருந்தும் வெடிச் சிதறல்கள் கண்டு எடுக்கப்படவில்லை. இவையெல்லாம் தலைமை அலுவலகத்திலேயே அவர்கள் பதுக்கிவைத்திருந்த வெடிபொருட்கள் திடீரென எதிர்பாரதவிதாக வெடித்ததன் விளைவுதான் இச்சம்பவம் என்பதை நிருபிக்கின்றன.

தங்களைப் பரம சாதுவாக காட்டிக் கொள்ள ஆர்.எஸ்.எஸ். குடை அமைப்புகள் என்னதான் முயற்சியெடுத்தாலும் அவை இந்துமதவெறி பாசிச - வன்முறை அமைப்புகள் என்பது ஊரறிந்த ரகசியம். அடுத்த தேர்தலில் எப்படியும் மைய ஆட்சியைப் பிடித்துவிட வேண்டும் என அலையும் இக்கும்பல், அதற்காகத் தென்னாட்டிலும் காலை ஊன்றிக் கொள்ள வேண்டிய அவசியத்தினை உணர்ந்துள்ளது. ஜெயா அதன் புதுக்கூட்டாளியாக மாறியிருப்பதால், சென்னையை மையமாகக் கொண்டு தான் இத்திட்டத்தை செயலாற்றி வருகிறது. இந்து மதவெறியைத் தூண்டி முஸ்லீம் மக்களின் மீது வன்முறையைக் கட்டவிழ்த்துவிடுவதுதான் இக்கும்பலின் பிரதான நடைமுறையாக இருப்பதால், வரப்போகின்ற மிலாடிநபி மற்றும் விநாயகர் சதுர்த்தி பண்டிகைகளின் போது வன்முறையைக் கட்டவிழ்த்துவிடுவது எனும் நோக்கத்தில்தான் இந்த வெடி பொருட்களைப் பதுக்கி வைத்துள்ளது. முன்பெல்லாம் இதற்காக மார்வாடி சேட்டுகளின் கிடங்குகளைப் (Go-down) பயன்படுத்தி வந்த இவர்கள், அதிகாரத்தில் பங்கு போடுமளவு வளர்ந்த பிறகு தங்களது அலுவலகங்களையும், முக்கியமான பொறுப்பாளர்களின் வீடுகளையுமே பயன்படுத்தத் துவங்கியுள்ளனர். மத்திய பிரதேசத்தில் பா.ஜ.க. ஆடாச மேடைப் பேச்சாளர் உமா பாரதியின் வீட்டில் வெடித்த குண்டு. அவர்களே பதுக்கி வைத்திருந்ததுதான் என ரகசிய போலீசா

புல்டோசரால் தடயங்கள் அழிப்பு, போலீசுக்கு அனுமதி மறுப்பு எதைக் காட்டுகிறது?



படிப்பகம்

www.padippakam.com

ரின் அறிக்கை பகிரங்கமாக அம்பலப்படுத்திவிட்டது. அதோடு தகர்ந்த கட்டிடப் பகுதிகளின் இடிபாடுகளை அகற்றும் பொழுது தராளமாகப் பிச்சுவா கத்திகளும் வாள்களும் கண்டு எடுக்கப்பட்டுள்ளன.

திருப்பூரில் சர்வகட்சியினரும் 'பந்த்' நடத்த அழைப்புவிடுமளவிற்கு, இச்சம்பவத்தைக் காரணமாகக் கொண்டு அப்பாவி முஸ்லீம் ஒருவரைக் குத்தி கொன்று ஆர்.எஸ்.எஸ். வெறியாட்டம் போட்டுள்ளது. கோவை மற்றும் குமரி மாவட்டப் பகுதிகளில் பேருந்துகளின் மீது கற்களை வீசியெறிந்து பொதுச் சொத்துக்களை நாசப்படுத்தியது. மாநிலங்களின் பல பகுதிகளில் கடைகளை அடைக்கச் சொல்லி வியாபாரிகளை மிரட்டியுள்ளது. சென்னை சேத்துப்பட்டு பகுதியில் தெருவில் சென்ற கார்களை உயர் போலீஸ் அதிகாரிகளின் முன்னாலேயே அடித்து நொறுக்கியிருக்கிறது. முஸ்லீம் மக்கள் அதிகமாக வாழும் பெரியமேடு பகுதியில் கும்பலாகச் சென்று பயபீதியூட்டியுள்ளது. வாணியம்பாடியில் முஸ்லீம் ஒருவரின் வீட்டின் மீது குண்டு வீசியுள்ளது. தற்பொழுது அந்நகர வி.இ.ப. செயலாளர் மீது இக்குண்டு வீச்சு சம்பந்தமாக கிரிமினல் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவையாவும் ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் துணை அமைப்புகள் எல்லாம் 'கை தேர்ந்த வன்முறைக்கு கும்பல்' என்பதனையே நிரூபிக்கின்றன.

இக்குண்டு வெடிப்புச் சம்பவம் அரசியல்ரீதியாக பா.ஜ.க.வும் அ.தி.மு.க. எவ்வளவு தூரம் நெருங்கி வந்துள்ளன என்பதையும் அம்பலப்படுத்திவிட்டது. இறந்தவர்களுக்கான உதவித் தொகையை ஐம்பதாயிரத்திலிருந்து ஒரு லட்சமாக உயர்த்தித் தனது பார்ப்பன பாசத்தைக் காட்டிக் கொண்டார் ஜெயா. பா.ஜ.க. -வின் மாநில அரசாங்கம் போலவே செயல்பட்டு பழனி பாபாவைத் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையிலடைத்தார். பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க.வும் சேர்ந்து கொண்டு பாராளுமன்றத்தில் சி.பி.ஐ. விசாரணை தேவை எனக் கூப்பாடு போட்டது. மறுபுறம் ஜெயா மீது எதிர்க்கட்சிகள் செய்த விமர்சனங்களுக்கு பா.ஜ.க. அவரின் மீது முழு நம்பிக்கைத் தெரிவித்து பதிலடி கொடுத்தது. இன்னும் ஒரு படி மேலே சென்று 'இடிந்த கட்டிடத்தை அரசே கட்டித்தர வேண்டும்' என உரிமையோடு கேட்டுக் கொண்டது.

பிற எதிர்க்கட்சிகள் எல்லாம் வழக்கம் போலவே அரசியல் காரணங்களுக்காக ஆர்.எஸ்.எஸ்.-ஐ அம்பலப்படுத்தத் தயங்கின. இக்கூட்டத்தில் புதுவரவாக ஜெயாவின் புதுப்பங்காளி 'தளபதி' வீரமணியும் சேர்ந்து கொண்டுள்ளார். முன்பு ஆர்.எஸ்.எஸ்-ஐ நச்சுப் பாம்பு என விமர்சித்த இவர், தற்பொழுது 'வன்முறை' என ஒப்பாரி வைக்கிறார். கோவையில் தி.மு.க. மாநாட்டு பந்தலை எரித்தது பா.ஜ.க.தான் எனத் தெரிந்ததும் விசயத்தை அமுக்கி விட்ட பார்ப்பன பத்திரிகைகள், பக்கம் பக்கமாக செய்திகளையும், புகைப்படங்களையும் வெளியிட்டு ஆர்.எஸ்.எஸ்.க்கு ஒத்துஊதின.



பா.ஜ.க.-வின் மாநில அரசாங்கம் போலவே செயல்பட்டு தனது பார்ப்பன பாசத்தைக் காட்டிக் கொண்டார் ஜெயா.

தடை நீக்கப்பட்ட அமைப்பினைத் தொடர்ச்சியாகக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பினை உணர்ந்திருந்தும் மைய, மாநில அரசுகள் அதில் அக்கறை காட்டியதாகவே தெரியவில்லை. தடை நீக்கப்பட்டவுடனேயே தனது சென்னை அலுவலகத்தில் போடப்பட்டிருந்த காவல்துறை கண்காணிப்பை நீக்கச் செய்து தன்வசம் எடுத்துக் கொண்டுவிட்டது ஆர்.எஸ்.எஸ். குண்டு வெடித்த உடனேயே 'இது ஆர்.டி.எக்ஸ் - பம்பாயில் பயன்படுத்தப்பட்டது - வகையைச் சார்ந்தது அல்ல' என்பதனை மத்திய மந்திரி பைலட் உள்ளிட்டு பலர் தெரிவித்திருந்தனர். இப்பொழுது பத்து நாட்கள் கழித்து இது ஆர்.டி.எக்ஸ் வகையைச் சேர்ந்ததுதான் என ஆர்.எஸ்.எஸ் கும்பலுடன் சேர்ந்து கொண்டு பார்ப்பன ஜெயா அரசும் தாளம் போடுகிறது. இதன் மூலம் 'சர்வதேச முஸ்லீம் பயங்கரவாதத் தாக்குதல்' எனத் தான் விடுத்த புனை சுருட்டுக் கதையை நிரூபிக்க முயலுகிறது. இதன் பின்பு கூட சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் 'ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் பதுக்கி வைக்கப்பட்ட குண்டுதான் வெடித்துள்ளது' என்ற தனது அறிக்கையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார். ஆனால் காங்கிரசு எம்.பி. அன்பரசோ ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்திற்கே சென்று இதற்காக மன்னிப்புக் கேட்டுள்ளார்.

இந்நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் ஆர்.எஸ்.எஸ் மற்றும் துணை அமைப்புகள் யாவும் முஸ்லீம் மக்களுக்கு எதிரானது; பிற ஓட்டுக் கட்சிகளை தனக்குப் பணிந்து போகச் செய்யக்கூடியது என்பதுடன் அரசின் உள்கட்டுமானங்களிலும் செல்வாக்குடன் வளர்ந்திருப்பதையே எடுத்துக் காட்டுகின்றன. இந்நிலையில் புரட்சிகர - ஜனநாயக சக்திகளின் ஒன்றிணைந்த பாராளுமன்ற முறைக்கு அப்பாற்பட்ட போராட்டங்களின் மூலம் மட்டுமே இந்த இந்து மத வெறி பாசிசக் கும்பலை வேரோடு வெட்டி வீழ்த்த முடியும்!

● செல்வம்.

## தீண்டாமைக்கு எதிராக பட்டிதொட்டியிலும் போராட்டம்

உத்தமபாளையம் தாலுகா பண்ணைபுரம், மல்லிங்காபுரம் கிராமங்களில் உள்ள டீக்கடைகளில் தீண்டாமைக் கொடுமை இருந்தது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு தனி கண்ணாடி டம்ளரிலும், பிற சாதிக்காரர்களுக்கு சில்வர் டம்ளரிலும் டீ கொடுக்கும் பழக்கம் இருந்து வந்தது. இதையறிந்ததும் விவசாயிகள் விடுதலை முன்னணி தே.மீனாட்சிபுரம் கிளையைச் சேர்ந்தவர்கள் இப்பகுதிகளில் இத்தீண்டாமை பழக்கத்தைக் கண்டித்து தட்டி எழுதி வைத்தனர். இதன்பிறகு தேவாரம் இன்ஸ்பெக்டர் அருமைதுரை, டீக்கடைக்காரர்களை கூப்பிட்டு மாற்றச் சொல்லி மிரட்டியுள்ளார். அடுத்த நாளிலிருந்து மல்லிங்காபுரத்தில் எல்லா கடைகளிலும் பண்ணைபுரத்தில் இரண்டு கடைகளில் மட்டும் இம்முறை கைவிடப்பட்டது. பண்ணைபுரத்தில் ஏனைய கடைக்காரர்கள் மாற்றாததற்கு காரணம், அவர்கள் பின்னால் இருந்து பண்ணைபுரம் திலப்பிரபு பிரசாத் மற்றும் கோம்பை போலீசும் ஊக்குவிக்கின்றனர். இத்தீண்டாமை முறைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கோரி சம்பந்தப்பட்ட போலீசு நிலையத்திற்கும் உயர் அதிகாரிகளுக்கும் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. எவ்வித நடவடிக்கையும் இல்லையெனில் வி.வி.மு.வே. மக்களை திரட்டி நடவடிக்கையில் ஈடுபட தயாராக உள்ளது.

www.padippakam.com

*● கோயில் கருவறை நுழைவுப் போராட்டத்தை நடத்தி அதில் வெற்றியும் கண்ட நீங்கள் மக்கள் மத்தியில் (அதிக சதவீதத்தில்) நிகழும் குறைபாடுகளை வைத்துப் போராட்டத்தை நடத்த முடியவில்லையே ஏன்? அதேநிலையில் மீண்டும் அறிக்கப்படாமல் கோயில் கருவறைக்குள் நுழைந்தது சரியா?*

*- வி.சந்திரன், கடினவயல்*




★ மக்களை அதிக அளவில் பாதிக்கும் பிரச்சினை என்று வாசகர் குறிப்பிடுபவை எவை? குடிதண்ணீர், விலையேற்றம், சாலை - போக்குவரத்து, தொழில் ரீதியிலான சுரண்டல் - ஒடுக்குமுறை போன்ற அன்றாட, பகுதி, உடனடிப் பொருளாதாரப் பிரச்சினைகளையா? கருவறை நுழைவுப் போராட்ட அளவுக்கு பெரும் வீச்சை ஏற்படுத்த முடியாவிட்டாலும் தொடர்ந்து நமது புரட்சிகர அமைப்புகள் போராடி வருகின்றன. 'புதிய ஜனநாயகம்' இதழ்களில் வரும் அமைப்புச் செய்திகளை அதற்குச் சான்று கூறும்.

ஆனால் இப்படிப்பட்ட 'தொழில் ரீதியான பகுதிப் பிரச்சினைகள் மீது கட்டங் கட்டமாகப் போராட்டங்களைத் துவங்கி வளர்த்தெடுப்பது, அந்தப் போராட்டங்களுக்கே அரசியல் தன்மை தருவது; அவற்றுக்குத்தான் அதிக அளவில் மக்களைத் திரட்ட முடியும்; அப்பிரச்சனைகள் மீது தொட்டறியத்தக்க கண்கூடான பலன்களைப் பெற்றுத்தரும் வகையில் போராட்டங்களை நடத்துவது. அப்பிரச்சினைகள் மீதான போராட்டங்களை நிகழ்ச்சிப் போக்கு அடிப்படையில் படிப்படியாக வளர்த்தெடுப்பது தான் சரி' என்று போலிக் கம்யூனிஸ்டுகளும், போலிப் புரட்சியாளர்களும் கூறி வருகிறார்கள். அவர்களின் அந்த அணுகுமுறை மார்க்சிய - லெனினியத்துக்குப் புறம்பானது; திரிபுவாதம், பொருளாதாரவாதம் ஆகும். அந்த அணுகுமுறையின் மூலம் மக்களுக்குப் புரட்சிகர உணர்வூட்ட முடியாது; பிழைப்புவாத சிந்தனையைத்தான் வளர்க்க முடியும். அதற்கு மாறாக, பரந்துபட்ட மக்களைப் பாதிக்கும் சகலவிதமான அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுப் பிரச்சினைகள் மீதும் ஒரே சமயத்தில், அக்கம்பக்கமாகப் போராட்டங்களை நடத்தும் பொழுதுதான் மக்களுக்குப் புரட்சிகர உணர்வூட்டிப் பயிற்றுவிக்கவும் முடியும்.

ஒருமுறை தி.மு.க. தலைவர் அண்ணாதுரை சொன்னாராம், ''நமக்கு மானப்பிரச்சனைதான் முக்கியம், இந்தக் கம்யூனிஸ்டுகளுக்கு வயிற்றுப் பிரச்சினைதான் முக்கியம். வேட்டியையும் சோறையும் முன்னால் வைத்தால் நாம் மானத்தை காப்பதற்கு வேட்டியைப் பெறவே துடிப்போம். அவர்கள் பசிக்கிறதே என்று சோற்றுக்குப் பறப்பார்கள்''. இதற்குப் ப்தில் சொன்ன துரோகக் கம்யூனிஸ்டு தலைவர் பி. ராமமூர்த்தி, ''பத்துநாட்கள் பட்டினி போட்டு வேட்டியையும் சோற்றையும் முன்னால் வைத்தால் தெரியும், சோறுதான் அடிப்படைத் தேவை என்பது'' என்றாராம். உண்மை என்ன? மனிதனுக்கு இரண்டும்தான் வேண்டும்; இரண்டையும் எதிரெதிராகப் பார்க்கக் கூடாது. சோறு மட்டுமே பிரதானம் என்றால் மனிதனின் சமூகப் பண்பாட்டு வளர்ச்சி - தேவைகளை மறுத்து மிருக நிலையில் அவனை நிறுத்துவதாகும்.

நமது கருவறை நுழைவுப் போராட்டத்திற்குப் பிறகு அந்தத் துரோகி பி.ஆரின் வாரிசுகள் திருச்சியில் ஒரு ''கலை.- இலக்கிய இரவு'' நிகழ்ச்சி நடந்தினர்; திருச்சி - திருவரங்கம் அக்கிரகாரங்களே அங்கு திரண்டிருக்க, தமக்கும், ம.க.இ.க.வுக்கும் சம்பந்தம் இல்லை என்று அவர்கள் பிரகடனப்படுத்திவிட்டு கருவறை நுழைவைக் கண்டித்தனர். அப்போது அவர்கள் ''நாம் சிவகாசி பட்டாசு - தீப்பெட்டி தொழிற்சாலைகளின் தீயில் கருகும் சிறுமிகளுக்காக அக்கறைப்படுகிறோம்.

ஆனால் ஆர்.எஸ்.எஸ்.காரன் அயோத்தியில் பாபர் மசூதியை இடிக்கிறான்; ம.க.இ.க. காரன் சிறீரங்கம் கோயில் கருவறைக்குள் நுழைகிறான்'' என்று அந்தப் போலிக் கம்யூனிஸ்டுகள் பேசியுள்ளனர். இந்து மத பாசிஸ்டுகளையும் புரட்சியாளர்களையும் சமமாக வைத்துப் பேசியதோடு அவர்களது மதவெறி பாசிசச் செயலையும் நமது சமூக - அரசியல் விடுதலைப் போராட்டத்தையும் ஒப்பிட்டு இதையும் இழிவுபடுத்தினார்கள். நமது போராட்டத்தை சிவகாசி கொடுமைக்கு எதிராக நிறுத்த தமது பார்ப்பன ஆதரவு நிலைப்பாட்டை நியாயப்படுத்தினார்கள். மக்களது வேறுபிற பிரச்சினைகளுக்கு எதிராகவும் ஒப்பாகவும் கருவறை நுழைவுப் போராட்டத்தை நிறுத்துவதும் அத்தகையதுதான். மேலும் இப்போராட்டம் சமூக - சமத்துவ உரிமை கோரும் பொதுவான ஜனநாயக போராட்டம் மட்டுமன்று; இந்து மதவெறி பார்ப்பன - பாசிசத்துக்கு எதிரான அரசியல் போராட்டமுமாகும். மற்றெல்லாப் பிரச்சினைகளையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு இந்து மதவெறி பாசிச அபாயம் முன்னணிக்கு வந்துள்ளது; இதை முறியடிப்பதன் மூலம்தான் மக்களது அடிப்படைத் தேவைகளுக்கான போராட்டத்தையே வெற்றிகரமாக நடத்த முடியும். ஆகவே இதுதான் நமது மக்களை அதிக அளவில் பாதிக்கும் இன்றைய பிரச்சினையுமாகும் என்பதை மறந்துவிடக்கூடாது.

மே ஒன்றில் அறிவித்தும், மே 24-இல் அறிவிக்கப்படாமலும் புரட்சிகர அமைப்புகள் அடுத்தடுத்து நடத்திய கருவறை நுழைவுப் போராட்டங்கள் சரியானவை என்றே மக்கள் மத்தியில் பரவலான ஆதரவைப் பெற்றுள்ளன (பார்க்க: கருவறை நுழைவு - கருத்துக்கணிப்பு, புதிய கலாச்சாரம் '93 மே-ஜூலை இதழ்) இந்து மத பாசிச ஆதரவு பார்ப்பனர்கள், அ.தி.மு.க மந்திரிகள், சி.பி.எம். பிரிவு போலிக் கம்யூனிஸ்டுகள் மற்றும் தி.க. தலைவர் கி. வீரமணி ஆகியோர் மட்டுமே கருவறை நுழைவைக் கண்டித்தும், எதிர்த்தும் உள்ளனர். போலிப் புரட்சியாளர்கள் சில நொண்டிச் சாக்குகளைக் கூறி அதிருப்தியும் முணுமுணுப்பும் காட்டுகின்றனர். பார்ப்பனரல்லாத மேல்சாதியினர் கூட எதிர்ப்புக் காட்ட முடியாமல் முடக்கப்பட்டனர்; மற்ற அனைத்துப் பிரிவினரும் ஆதரித்தனர். இது நமது முடிவுகளை மட்டுமல்ல; அவற்றை அமுலாக்கிய முறைகளுக்கும் கிடைத்த வெற்றியாகும். நமது அணுகுமுறைகள் மீது குற்றங்குறை கூறி வந்தர்களுக்குக் கிடைத்த பதிலடியாகும். அறிவிக்கப்பட்ட போராட்டத்தை நடத்தியதோடு நின்றிருந்தால் அது அரைகுறையாகவே இருந்திருக்கும்; இவ்வளவு பெரும் வீச்சையும் ஏற்படுத்தி இருக்க முடியாது.

*● இன்றைய தமிழக இளைஞர்களை அதிகம் சீரழிப்பவர்கள் சினிமாக்காரர்களா அல்லது அரசியல்வாதிகளா?*

*- செல்வ. புலியரசன், கரம்பய*

★ நிச்சயம் சினிமாக்காரர்கள் தாம். மக்கள் திரள் தொடர்ப சாதனங்கள் மூலமான சீரழிவு என்கிற முறையில் வானொ மற்றும் பத்திரிக்கைக்காரர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவர்கள்தான் அறியாப் பருவத்தில் இருந்தும், மிகப்பரந்

படிப்பகம்

www.padippakam.com

அளவிலும் இளைஞர்களிடையே சீரழிவுப் பணியைத்
தொடங்கி விடுபவர்கள். ஆனால் இவர்களை நெருக்கமான
முறையில் பின் தொடர்ந்து இளைஞர்களைச் சீரழிப்பவர்கள்
அரசியல்வாதிகள். மேலும் சினிமா, வானொலி, பத்திரிக்கைகள்
போன்றவை அளவுக்கு அரசியல் கவர்ச்சியானதும் கிடையாது;
ீரழிந்த இளைஞர்களை மேலும் சீரழித்துப் பயன்படுத்திக்
கொண்டாலும் அப்படிச் சினிமா போன்றவற்றால் சீரழிந்த அத்
னை பேரையும் அரசியல்வாதிகள் ஈர்த்துவிடுவதில்லை; முடி
பதும் இல்லை. அரசியலற்ற, சீரழிவு, சுயநல வாழ்வில் கணிச
ான இளைஞர்களை முன்னவர்கள் தள்ளி விடுகிறார்கள் அல்
வா? ஆகவே, ஒப்பீடு ரீதியில் அரசியல்வாதிகளால் இளைஞர்
ள் சீரழிக்கப்படுவது குறைவே!

**கருவறை நுழைவுப் போராட்டம் சமூக - சமத்துவ உரிமை கோரும் பொதுவான ஜன நாயக போராட்டம் மட்டுமன்று; இந்து மத வெறி பார்ப்பன - பாசிசத்துக்கு எதிரான அரசியல் போராட்டமுமாகும். மற்றெல்லாப் பிரச்சினைகளையும் பின்னுக்குத் தள்ளி விட்டு இந்து மதவெறி பாசிச அபாயம் முன் னணிக்கு வந்துள்ளது; இதை முறியடிப்ப தன் மூலம்தான் மக்களது அடிப்படைத் தேவைகளுக்கான போராட்டத்தையே வெற்றிகரமாக நடத்த முடியும்.**

*டி.பி.ஐ திருமாவளவன், ஒட்டு மொத்தமாக அம்பேத்கார்*
*க்கள் இயக்கத்தினை வழி நடத்தும் தலைவர்களை சோரம்*
*ாகிறார்களென சாடும்போது - நீங்களும் உங்கள் பங்கிற்கு*
*தலித் இயக்கம் அமைப்புகளின் 'குறியீட்டுத் தலைவன்'*
*ளை, வார்த்தை அம்புகளால் துளைத்தெடுப்பது ஏனோ?*

*- எஸ். பாலாஜி, எழுகிணறு, சென்னை*

திருமாவளவன் சாடுவதிலும், நாங்கள் வார்த்தை 'அம்புக
ல் துளைத்தெடுப்பதும்' உண்மையா, இல்லையா என்று
ருங்கள். 'ஐயோ தலைவர்களைப் பற்றி இப்படி குறை கூறுகி
ர்களே' என்று உணர்ச்சி வசப்படாதீர்கள். அவர்களில் பலர்
ரியவாத, பிழைப்புவாதிகளாக அரசு அதிகாரத்திண்ணையில்
த்துக்கிடக்கிறார்கள்; ஓட்டுக் கட்சிகளுக்கு வால் பிடிக்கிறார்
 என்பது மட்டுமல்ல, சர்வதேச கிரிமினல் கும்பலின் பிரதிநிதி
ன சுப்பிரமணியசுவாமி, ஆர்.எஸ்.எஸ். இந்து முன்னணி
கிய பார்ப்பனக் கும்பலுடனும் கூட கைகோர்த்துக் கொண்டு
ழ்த்தப்பட்ட மக்களுக்குத் துரோகமிழைக்கின்றனர் என்பது
ண்மை இல்லையா? அதோடு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு
ழிப்புணர்வூட்டி அன்றாடம் இவர்களுக்கு இழைக்கப்படும்
ாடுமைகளுக்கெதிராக களத்தில் நின்று போராடுபவை புரட்சி
அமைப்புகள் தா்ம் என்பதும் உண்மை இல்லையா?

*ஜப்பான் நாட்டில் பாதுகாப்புக்காக இராணுவம் கிடையாது*
*ன்று கேள்விப்படுகிறேன். இது உண்மையா? அதற்காக அத*
*னப் பாராட்டலாமா?*

*- எம். சங்கர், பி.ஏ. நீலமங்களம்*

ஜெர்மனியின் நாஜிக்களோடும், இத்தாலியின் பாசிஸ்டுக
ம் சேர்ந்து ஆக்கிரமிப்பு வெறி கொண்டு இரண்டாம் உலகப்
ாரைத் துவக்கி பல கிரிமினல் குற்றங்கள் புரிந்தது ஜப்பான்.
ுபோரில் படுதோல்வி கண்டு சரணடைந்த போது, நேசநாடு
ளாடு சில ஒப்பந்தங்கள், தடைகளுக்கு உட்பட வேண்டியி
ந்தது. அவற்றின்படி ஜப்பான் இனிமேலும் ஆக்கிரமிப்பு, தாக்
ல் தன்மை உடைய ஆயுதத்தளவாடங்களை வாங்கவோ,
பத்தி செய்யவோ, சேமித்து வைக்கவோ கூடாது; தனது
லைகளைப் பாதுகாத்துக் கொள்ளும் அளவுக்குத்தான் தற்
புப் படைகளை வைத்துக் கொள்ள வேண்டும்; வெளிநாடுக

ளுக்கு இராணுவத்தை அனுப்பவோ, குறிப்பிட்ட தூரத்துக்கு மேல் கடற்படை கப்பல்களை நிறுத்தவோ கூடாது; ஏவுகணை, அணுகுண்டு தயாரிப்புகளில் ஈடுபடக்கூடாது; தற்காப்பு இராணுவச் செலவுகளுக்குக் கூட தனது தேசிய வருவாயில் ஒரு சதவீதத்துக்கு மேல் செலவிடக்கூடாது - ஆகியவை ஜப்பானுக்கு விதிக்கப்பட்டு அந்நாடும் ஏற்றுக் கொண்ட நிபந்தனைகள், தடைகள். பாராட்டும் வகையில் ஜப்பான் தானே மேற்கொண்ட கொள்கைகள் என்று எதுவும் இல்லை. இந்த நிபந்தனைகள், தடைகளைக் கூட குறுக்கு வழிகளைப் பின்பற்றி மீறியது ஜப்பான். அமெரிக்காவுடன் பல இராணுவக் கூட்டுகளைப் போட்டுக்கொண்டு அதன் இராணுவத்தை 'வாடகை'க்கு அமர்த்திக் கொண்டு வட வியத்நாம், வடகொரியா, சீனா ஆகிய நாடுகளை மிரட்டி வந்தது; உலகம் முழுவதும் தனது ஏகாதிபத்திய நலன்களை நிறைவேற்றி வந்தது.

ஆனால் கடந்த 15 ஆண்டுகளில் அதையும் மீறி இராணுவ, ஆக்கிரமிப்பு, மேல் ஆதிக்கத்துக்கான தயாரிப்புகளில் ஜப்பான் இறங்கிவிட்டது. ஜப்பானின் தேசிய வருவாயில் ஒரு சதவீதம் இராணுவச் செலவு என்பதே உலகிலேயே பல முதல் வரிசை நாடுகளுக்கு மேலாக அதை நிறுத்துகிறது. எனவே இராணுவத்தைப் பெருக்கவும், வெளிநாடுகளுக்கு அனுப்பவும் செய்தது. தனது பொருளாதார நலன்களைத் காப்பதற்காக என்று பெருங்கடல் வழித் தடங்களில் ரோந்து சுற்றும் கடற்படைகளை அனுப்பியது. நினைத்தபோது பெரும் ஆக்கிரமிப்புப் போர்ப் படையைத் திரட்டிக் கொள்வதற்கு வசதியாக பயிற்சி பெற்ற அதிகாரிகள் படைப்பிரிவுகளை ஏற்படுத்தியது. அமெரிக்கா ஆயுத தளவாட தொழிற்சாலைகளின் கூட்டு - கிளை நிறுவனங்களாக இயங்கிய பல கம்பெனிகளை வைத்து ஆக்கிரமிப்பு தாக்குதல் தன்மையுடைய கப்பல், விமான, ஏவுகணை, அணுகுண்டு தொழில் நுட்பங்களும், கட்டுமான அடிப்படை தேவைகளையும் பெற்றது. உலகப் போர் கிரிமினல் குற்றவாளிகளை தேசபக்கதர்கள், வீரதீர தியாகிகள் என்று வணங்கி வழிபடும் பண்பாட்டை வளர்த்தது. ''உலகில் தனக்குள்ள பொருளாதார வல்லமைக்குப் பொருத்தமாக அரசியல் அதிகாரத்தையும் பெறுவதற்கு ஜப்பானுக்கு உரிமை உண்டு'' என்று ஜப்பானின் ஆட்சியாளர்கள் பகிரங்கமாகப் பிரகடனம் செய்கிறார்கள்.

**'ஐயோ தலைவர்களைப் பற்றி இப்படி குறை கூறுகிறார்களே' என்று உணர்ச்சி வசப்படாதீர்கள். அவர்களில் பலர் காரியவாத, பிழைப்புவாதிகளாக அரசு அதிகாரத் திண்ணையில் காத்துக் கிடக்கிறார்கள். ஓட்டுக் கட்சிகளுக்கு வால் பிடிக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, சர்வதேச கிரிமினல் கும்பலின் பிரதிநிதியான சுப்பிரமணி யசுவாமி, ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணி ஆகிய பார்ப்பன கும்பலுடனும்கூட கைகோர்த்துக் கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் துரோகம் இழைக்கின்றனர் என்பது உண்மை யில்லையா?**

இராணுவ ரீதியில் மட்டுமல்ல அரசியல், சமூக, பொருளாதார ரீதியிலும் ஜப்பானின் 'முன்னேற்றம்' என்ற கூறப்படுபவை பாராட்டுக்குரியவை அல்ல. உலகிலேயே மிகப்பெரும் அரசியல் லஞ்ச ஊழல்கள் நடந்து அடிக்கடி ஆட்சி மாற்றங்கள், குழப்பங்கள் நடக்கின்றன. வியத்நாமிய, கொரிய, சீன, சிங்களப் பெண்கள் ஆசைகாட்டி கடத்திச் செல்லப்பட்டு கொடுமைப் படுத்தப்படுகிறார்கள்; விபச்சாரம் பொங்கி வழிகிறது. பெண்களின் சம உழைப்புக்கு சம ஊதியம் மறுக்கப்படுவதோடு, கடுமையான உழைப்புச் சுரண்டலினால் தொழிலாளர்கள் நோயுற்று மடிகிறார்கள். அதே சமயம் உலகின் மிகப்பெரிய கொள்ளை லாபம் அடிக்கும் 'கந்துவட்டி லேவாதேவிக்காரர்களாக' ஜப்பா

படிப்பகம்

www.padippakam.com



# லெபனான்மீது இஸ்ரேலின் காட்டுமிராண்டித்தனம்

மேற்காசியாவில் பேட்டை ரௌடியாகக் கொட்டமடித்துவரும் இஸ்ரேல், ஜூலை மாத இறுதியிலிருந்து அண்டை நாடான லெபனான் மீது தொடர்ச்சியாக குண்டு வீச்சு தாக்குதல் நடத்தி வருகிறது. வான், தரை, கடல் என அனைத்து வழிகளிலும் இஸ்ரேலிய இன வெறியர்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் இதுவரை 100-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். 500-க்கும் மேலானோர் படுகாயமடைந்துள்ளனர். தொடர்ச்சியாக இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலால் வீடு - வாசல் இழந்த ஆயிரக்கணக்கான லெபனான் மக்கள் உயிருக்கு அஞ்சி அப்பகுதியை விட்டே தப்பியோடிக் கொண்டிருக்கின்றனர். எஞ்சிய சிலர் பூமிக்கு அடியே "பங்கர்" களில் பதுங்கி வாழ்கின்றனர்.

லெபனானின் தென் பகுதியில் ஈரானின் ஆதரவு பெற்ற ஷியா பிரிவு முஸ்லிம்களின் ஹிஸ்புல்லா (கடவுளின் கட்சி) தீவிரவாத. இயக்கம் வலுவானதாக உள்ளது. பாலஸ்தீனிய விடுதலை இயக்கமும் இங்கு இயங்கி வருகிறது. இதன் காரணமாக ஹிஸ்புல்லா இயக்கத்தினருக்கும் இஸ்ரேலியப் படைகளுக்குமிடையே இப்பகுதியில் அடிக்கடி மோதல்கள் நடந்து வருகின்றன. இதனைக் கட்டுப்படுத்துவதாகக் கூறிக் கொண்டு, லெபனானின் தென்பகுதியில் ஹிஸ்புல்லா, பாலஸ்தீனிய விடுதலை இயக்கங்கள் செல்வாக்குள்ள பகுதியை இஸ்ரேல் ஆக்கிரமித்துக் கொண்டு அதனை "பாதுகாப்புப் பிராந்தியம்" என்று பெயரிட்டு தொடர்ந்து அடக்கு முறையை ஏவியது.

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு - அடக்கு முறைக்கு எதிராகப் போராடும் ஹிஸ்புல்லா இயக்கத்தினர் அண்மையில் 6 இஸ்ரேலியப் படைவீரர்களைக் கொன்றொழித்தனர். இதற்குப் பழிவாங்கும் நோக்கத்தோடு இஸ்ரேலியக் காட்டுமிராண்டிகள் தெற்கு லெபனான் பகுதியில் சிவிலியன்கள் மீதே குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இக்கோரமான தாக்குதலில் 30 கிராமங்களும் இரு பாலஸ்



இஸ்ரேலிய காட்டு மிராண்டிகளின் குண்டுவீச்சுத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட லெபனான் மக்கள்

தீனிய அகதி முகாம்களும் முற்றாக அழிந்து போயுள்ளன. கடந்த ஆண்டில் இதேபோல, ஹிஸ்புல்லா இயக்கத் தலைவர் ஷேக் அப்பாஸ் முசாவியையும் அவர் குடும்பத்தையும் ஹெலிகாப்டர் மூலம் குண்டு வீசி இஸ்ரேலிய இனவெறியர்கள் கொன்றொழித்தனர்.

தனது எல்லையை விரிவுபடுத்திக் கொள்ள ஆக்கிரப்புப் போரில் இறங்குவதே இஸ்ரேலின் நோக்கமாக உள்ளது என்று லெபனானும், சிரியாவும் இத்தாக்குதலை கடுமையாக எதிர்த்தபோதிலும், இக்காட்டு மிராண்டித் தனத்தை உடனடியாக நிறுத்தக்கோரி ஐ.நா. மன்றத்தில் முறையிட்ட போதிலும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இஸ்ரேலிய எதிர்ப்பு இயக்கங்கள் அனைத்தும் பயங்கரவாத அமைப்புகள் என்று குற்றம் சாட்டி மேற்காசிய அமைதிப் பேச்சுவார்த்தையை சிதைத்து, இப்பகுதியில் துணை வல்லரசாக ஆதிக்கம் செலுத்தும் நோக்கத்தோடு இஸ்ரேல் தொடர்ந்து அட்டூழியம் புரிந்துவருகிறது. ஜனநாயகம் - சமாதானம் பற்றி கூப்பாடு போடும் நாகரீக ஏகாதிபத்தியவாதிகளோ வாயே திறக்காமல் இக்காட்டுமிராண்டித்தனத்தை அங்கீகரித்து வருகிறார்கள்.

# ஊழல் புதைச்சேற்றில் ஜப்பான் அரசியல்

ஜப்பானை 38 வருடங்களாக ஆண்டு வந்த ஊழல் பெருச்சாளிகளான லிபரல் ஜனநாயகக் கட்சியின் ஆட்சி இப்போது முடிவுக்கு வந்துவிட்டது. கடந்த ஜூலை 18-ல் நடந்த பொதுத் தேர்தலில் இக்கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்காததால், இக்கட்சியின் தலைவரும் பிரதமருமான மியாஜாவா தோல்வியை ஒப்புக் கொண்டு ராஜினாமா செய்தார். இருப்பினும் நாடாளுமன்றத்தில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை இல்லாததால் 'தொங்குநிலை' காரணமாக அரசியல் நெருக்கடியும் குழப்பமும் நீடித்தது. பின்னர், பழைமை வாதிகளிலிருந்து போலி சோசலிஸ்டுகள் வரை எல்லா எதிர்த்தரப்பு அதிருப்தி கோஷ்டிகளுமாக 7 கட்சிகள் சந்தர்ப்பவாத கூட்டணி சேர்ந்து; புதிய பிரதமர் கொசோகவா தலைமையில் கூட்டணி ஆட்சியை நிறுவியுள்ளன.

ஜப்பானின் முதலாளித்துவ அரசியல்வாதிகளுக்கு தாய்ப்பாலாக இருப்பது லஞ்ச ஊழல்தான். பெருமுதலாளிகளிடம் கையூட்டு பெறாத கட்சிகளோ, அரசியல்வாதிகளோ இல்லை என்கிற அளவுக்கு ஜப்பானில் ஊழல் புழுத்துப் புரையோடிப் போயுள்ளது. ஜப்பானின் அரசியல் ஞானப் பிதா (God Father) என்றழைக்கப்படும் ஷின்கனே மாறு கடந்த மாதத்தில் லஞ்ச ஊழல் குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டார். ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சியின் தலைவராகச் செயல்பட இவரது வீட்டிலிருந்து 100 கிலோ தங்கமும், 50 கோடி டாலர் மதிப்புடைய பத்திரங்களும், பணமும் போலீசாரால் கைப்பற்றப்பட்டன.

சில ஆண்டுகளுக்கு முன்பு இக்கட்சியின் தலைவராகவும் பிரதமராகவும் இருந்த தனாகா, அமெரிக்காவின் "லாக்ஹீடு" நிறுவனத்திடம் லஞ்சம் பெற்றதற்காக கைது செய்யப்பட்டார். நீதிமன்றத்தால் சிறைத் தண்டனை வழங்கப்பட்டபோதிலும், மேல் முறையீடு செய்துவிட்டு ஒரு குற்றவாளியாகவே இருந்து நாட்டை ஆண்டார்.

கடைசியாக இக்கட்சியின் தலைவரும் பிரதமருமாக இருந்த மியாஜாவாவும் அவரது மந்திரிகளும் லஞ்ச ஊழல் கிரிமினல் குற்றங்களில் சிக்கி அம்பலப்பட்டுப் போனதாலேயே, தேர்தலில் இக்கட்சி பெரும் பான்மையைப் பெறமுடியாமல் தோல்வியடைந்தது. அதேசமயம் இப்போது கூட்டணி ஆட்சியை நிறுவியுள்ள எதிர்த்தரப்பினரும் புனிதமானவர்கள் அல்ல. கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஜப்பானிய புதிய கட்சியும், ஷின்ஷியோ கட்சியும் லிபரல் ஜனநாயகக் கட்சியிலிருந்து அண்மையில் பிரிந்தவைதாம். மேலும், வேறுபட்ட கொள்கைகள் - நலன்களைக் கொண்ட எதிர்க்கட்சிகளின் கூட்டணி ஆட்சி எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

லஞ்ச ஊழலும் முதலாளித்துவ ஜனநாயகமும் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள்; அழுகிவருகிவரும் முதலாளித்தவ ஜனநாயகத்தை சீர்திருத்தங்களால் ஒருக்காலும் காப்பாற்றிவிட முடியாது என்பதை ஜப்பானின் அரசியல் நெருக்கடி மீண்டுமொருமுறை நிரூபித்துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



## காஷ்மீரில் அதிகரிக்கும் அரசு பயங்கரவாதம்

கடந்த ஜூலை மாத இறுதியிலிருந்து காஷ்மீரில் கொலை வெறிபிடித்த இந்திய ராணுவம் நடத்திவரும் காட்டுமிராண்டித்தனத்தின் விளைவாக 20க்கும் மேற்பட்ட அப்பாவி சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

ஆகஸ்ட் முதல்நாளன்று தேடுதல் வேட்டை நடத்திய எல்லைப் பாதுகாப்புப் படையினர் ஸ்ரீநகர் அருகே பிலால் என்ற 10 வயது சிறுவனைச் சுட்டுக் கொன்றனர். தமது வீட்டின் அருகே துப்பாக்கிச் சத்தத்தைக் கேட்டதும் அலறியடித்துக் கொண்டு ஓடிவந்த அவனது பெற்றோரையும் சுட்டுக் கொன்றனர். போராளிகளை நோக்கிச் சுட்டபோது குறுக்கே வந்த அவர்களின் உடலில் குண்டு பாய்ந்து இறந்ததாக எல்லைப் பாதுகாப்புப் படை வழக்கம் போல் கதை கட்டியது.

இச்செய்தி பரவியதும், அரசு பயங்கரவாத அடக்குமுறையை எதிர்த்து தன்னெழுச்சியாக வேலை நிறுத்தம், கடையடைப்பு, ஆர்ப்பாட்டங்கள் பெருகத் தொடங்கின. தொடர்ச்சியாக ஒருவார காலத்துக்கும் மேலாக ஆர்ப்பாட்டம், மறியல், பேரணி என காஷ்மீர் பள்ளத்தாக்கே போராட்டங்களால் குலுங்கியது. குறிப்பாக ஊரடங்கு உத்திரவு போட்டும்கூட அதையும் மீறி ஆயிரக் கணக்கான பெண்கள் வீதிகளில் திரண்டு அடக்குமுறைக்கு எதிராக கிளர்ச்சி செய்தனர்.

இப்போராட்டங்களை அடக்குவதற்காக துணை ராணுவப் படைகள் பல இடங்களில் நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் 12 பேர் மாண்டனர். 50-க்கும் மேலானோர் படுகாயமடைந்தனர். இறந்தவர்களின் இறுதி ஊர்வலங்கள் ஆயிரக் கணக்கானோர் பங்கேற்ற அரசியல் ஆர்ப்பாட்டமாக மாறத் தொடங்கியதும், ஆத்திரமடைந்த துணை ராணுவப் படைகள் சவ ஊர்வலத்தின் மீதே துப்பாக்கிச் சூடு நடத்தி 7 பேரைக் கொன்றன. இதுதவிர பாகிஸ்தானில் பயிற்சிபெற்ற போராளிகள் எல்லையில் ஊடுருவ முயன்றார்கள் என்றுகூறி 150-க்கும் மேற்பட்ட அப்பாவி இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை மிரட்டியும் சித்திரவதை செய்தும் பொய்யான வாக்குமூலங்களைப் பெற்று, காஷ்மீர் மக்களின் போராட்டமே பாகிஸ்தானால் இயக்கப்படுவதாக அரசு பயங்கரவாதிகள் சித்தரித்து வருகின்றனர்.

இதனால் ஆத்திரமடைந்த சில போராளிக்குழுக்கள். ஆகஸ்ட் 14-ந் தேதியன்று கிஷ்வார் அருகே பேருந்தில் சென்ற இந்துக்கள் 16 பேரைச் சுட்டுக் கொன்றனர். இக்கொடுஞ்செயலை சுயநிர்ணய உரிமை கோரும் பல்வேறு போராளிகள் கண்டித்து கடையடைப்பு நடத்திய போதிலும், பாரதீய ஜனதாவினர் தனியே கடையடைப்பு நடத்தி இந்து வெறியைக் கிளறிவிட்டு வகுப்புவாத சாயம் பூசி ஆதாயமடையத் துடிக்கின்றனர். அப்பாவி இந்துக்கள் சுட்டுக் கொல்லப்பட்டதைக் காரணம் காட்டி, இந்திய அரசு முன்னிலும் கடுமையான அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இந்திய அரசு பயங்கரவாத அடக்குமுறைக்கு எதிராக, சுயநிர்ணய உரிமைக்காகப் போராடிவரும் காஷ்மீரின் போராளி இயக்கங்கள், இத்தகைய பாக். ஆதரவு அமைப்புகளின் திசைதிருப்பி சீர்குலைக்கும் நடவடிக்கைகளை விழிப்புடனிருந்து முறியடிக்க வேண்டியது இன்றைய அவசர அவசியக் கடமையாக உள்ளது.



ஸ்ரீநகரில் முஸ்லீம் குடும்பத்தினரை சுட்டுக்கொன்ற இராணுவ படைக்கு எதிராக இளைஞர்கள் எழுச்சி

## மசூதி இடிப்பு திட்டமிட்டதே ஆர்.எஸ்.எஸ். சதி நிருபணம்

டிசம்பர் 6, 1992. அயோத்தியிலுள்ள பாபர் மசூதி இந்துவெறி பாசிஸ்டுகளால் இடித்துத் தரைமட்டமாக்கப் பட்ட நாள்.

டிசம்பர் 6-ந் தேதி, மதியம் 2.30 மணி. உ.பி.யின் அன்றைய பாரதீய ஜனதா முதல்வர் கல்யாண்சிங், டெலிபோனில் அத்வானியுடன் அவசரமாகப் பேசினார். "நான் முதல்வர் பதவியை ராஜினாமா செய்துவிடலாமா?" எதிர்முனையில், "வேண்டாம்; அவசரப் படாதீர்கள். மசூதி முற்றாக இடிக்கப்பட்ட பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று அத்வானி பதிலளித்தார். இந்த உரையாடலை லக்னோவிலுள்ள தலைமை தொலைபேசி நிலைய ஆபரேட்டர்கள் மூலமாக "ஜன மோர்ச்சா" பத்திரிகையின் நிருபர்கள் கேட்டனர்.

மசூதியை கொரில்லா போர் முறையின்படி எவ்வாறு தாக்க வேண்டும் என்று விசுவ இந்து பரிஷத் குண்டர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. மசூதி இடிப்புக்கு ஒரு மாதத்துக்கு முன்னர் வி.இ.ப. குண்டர்களிடம் பேசிய அதன் தலைவர் அசோக் சிங்கால், "உ.பி. அரசு கவிழ்ந்தாலும் கூட நாம் மசூதியைத் தகர்க்காமல் விடக்கூடாது" என்று கட்டளையிட்டார்.

டிசம்பர் 6-ம் நாளன்று காலை 9 மணிக்கு மசூதியினுள் முன்பு இந்து வெறியர்களால் திருட்டுத்தனமாக வைக்கப் பட்ட, "ராமன் சிலைகளை வி.இ.ப.வினர் அவசரமாக வெளியேற்றி அருகிலுள்ள மனாஸ்பவன் எனும் சத்திரத்தில் பாதுகாப்பாக வைத்தனர். ஏதோ விபரீதம் நடக்கப் போவதை என்னால் உணர முடிந்தது" என்று கூறினார், ராமஜென்ம பூமி கோயில் பூசாரி பாபாலால் தாஸ்.

டிசம்பர் 6-ம் நாளன்று வி.இ.ப., பஜ்ரங்தள குண்டர்கள் ஆயுதங்களோடு இரு குழுவாகப் பிரிந்து தாக்கினர். ஒரு குழு மசூதியை இடித்து நொறுக்கியது. மற்றொரு குழு




பாபர் மசூதியை இடித்த இந்து வெறியர்கள் மீது விசாரணை நடத்தும் நீதிபதிகள்.

படிப்பகம்

www.padippakam.com



அயோத்தி - பைசாபாத் பகுதியிலுள்ள முஸ்லீம்களைத் தாக்கி, வீடுகளைச் சூறையாடியது. மொத்தம் 267 வீடுகள் வி.இ.ப. குண்டர்களால் இடிக்கப்பட்டதை உள்ளூர் மக்களே சாட்சியமளித்தனர்.

—இவையனைத்தும் பாபர் மசூதி இடிப்புச் சம்பவமானது திட்டமிட்டே நடந்த இந்துவெறி பாசிசத் தாக்குதல் என்பதை நிரூபித்துக் காட்டுகின்றன. இந்துக்களில் சிலர் உணர்ச்சிவசப்பட்டு நடத்திய தாக்குதல் என்று இந்துவெறியர்கள் பசப்புவதை அம்பலப்படுத்திக் காட்டுகின்றன. இந்த உண்மைகளை கணக்கற்ற ஆதாரங்களுடன் சுயேட்சையான விசாரணை மன்றம் அண்மையில் அம்பலப்படுத்திக் காட்டியுள்ளது. மக்கள் உரிமைக் கழகங்களின் முன்முயற்சியால் நிறுவப்பட்ட சுயேச்சையான இந்த விசாரணை மன்றம் கடந்த ஜூலை 6-ந் தேதி முதல் ஒரு வாரகாலத்திற்கு டெல்லியில் பொதுமக்கள் முன்னிலையில் பாபர் மசூதி இடிப்பு பற்றிய விசாரணையை நடத்தியது. ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள் நடுவர்களாக இருந்து விசாரணையை நடத்தினர். இவர்கள் மேற்பார்வையில் உண்மையறியும் ஆய்வுக்குழு நிறுவப்பட்டு, அக்குழு அயோத்தி, லக்னோ, பைசாபாத் பகுதியில் போலீசார், பத்திரிகையாளர்கள், அரசு அதிகாரிகள், பொதுமக்கள் என அனைவரிடமும் விசாரணையை நடத்தி தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. இதுதவிர, நவபாரத் டைம்ஸ், பிசினஸ் இந்தியா, சண்டே அப்சர்வர், பயனீர் ஆகிய பத்திரிகைகளின் நிருபர்களும், சமூகத்தில் கௌரவமாக மதிக்கப்படும் நூற்றுக்கும் மேற்பட்ட பிரமுகர்களும் சாட்சியமளித்துள்ளனர். இவையனைத்தும் இந்து வெறியர்களின் பாசிச கோர முகத்தை மேலும் திரைகிழித்துக் காட்டியுள்ளன. மக்கள் உரிமைக் கழகங்களின் சுயேட்சையான இத்தகைய விசாரணை மன்றங்களை நாங்கள் அங்கீகரிக்கவோ அதற்கு கட்டுப்படவோ முடியாது என்று இந்து வெறியர்கள் கொக்கரிக்கின்றனர்.

**புரட்சியாளர்கள் தலைமையிலான மக்கள் நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகள்**



அன்று ஜெர்மனியின் நாஜிகள் நியூரம்பர்க்கில் மக்கள் முன் விசாரணை செய்யப்பட்டு அவர்களது பாசிச கிரிமினல் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டனர். இன்று மக்கள் உரிமைக் கழகங்களின் சுயேட்சையான விசாரணையில் இந்து வெறியர்கள் பாசிசக் குற்றவாளிகளாக சாட்சியங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளார்கள். இனி அவர்களுக்கு உழைக்கும் மக்கள் தண்டனை அளிக்க வேண்டியதுதான் பாக்கியிருக்கிறது.

## பீகாரில் பரவும் புரட்சிப் பெருந்தீ

பீகாரில் மாவோயிச கம்யூனிச மையம் எனும் நக்சல்பாரி புரட்சிகரக் குழுவினர் நடத்திவரும் மக்கள் நீதிமன்றங்கள் கிராமப்புற மக்களிடையே பெருத்த செல்வாக்கைப் பெற்றுள்ளன. இப் புரட்சியாளர்களின் தலைமையில் விவசாயிகள் புரட்சிக் கமிட்டியும் (KKC) புரட்சிகர மக்கள் விடுதலைக் கழகமும் (JSSM) முன்னணி அமைப்புகளாக கிராமப்புறங்களில் இயங்கிவருகின்றன. விவசாயிகளின் விடுதலைக்காகப் புரட்சிகரப் போராட்டங்களை நடத்திவருவதோடு இந்த அமைப்புகள், விவசாயிகளின் புகார்கள் — வழக்குகளை மக்கள் முன்னிலையில் பஞ்சாயத்து செய்து நியாயமான தீர்ப்பையும் வழங்குகின்றன.

மறுமணம் செய்து கொள்வதற்காக கர்ப்பிணியான தனது மனைவியை விஷம் கொடுத்துக் கொன்று ரகசியமாக எரித்துவிட்டவனின் காதுகளையும் மூக்கையும் வெட்டுமாறு அண்மையில் மக்கள் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதேபோல் ஊரறிய தனது காதலியுடன் கூடிக்குலாவிவிட்டு, வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டவனது காதுகள் வெட்டப்பட்டன. வரதட்சணைக்காக தனது மனைவியைத் தள்ளிவைத்தவனுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. சாதிப் பாகுபாடு காட்டி இளங் காதலர்களைப் பிரித்த பெற்றோருக்கு எச்சரிக்கை விடப்பட்டு, அக்காதலர்களுக்கு மக்கள் நீதிமன்றமே திருமணத்தை நடத்தி வைத்தது.

சிறு குற்றங்களில் ஈடுபடுவோருக்கு அபராதத்துடன் எச்சரிக்கை; திருட்டு, கொள்ளைகளில் ஈடுபட்டால் கை கால்கள் உடைக்கப்படும்; கொலை - கற்பழிப்புகளில் ஈடுபட்டால் மரண தண்டனை என கடுமையான தீர்ப்புகளை அளிக்கும் மக்கள் நீதிமன்றம் விவசாயிகளது நிலத்தகராறு, கூலிப் பிரச்சினை முதலான வழக்குகளையும் பரிசீலித்து உரிய தீர்ப்பளிக்கிறது.

பீகாரின் 7 மாவட்டங்களில் இப்புரட்சிகர மக்கள் நீதிமன்றங்கள் செல்வாக்கு பெற்ற வளர்ந்துள்ளது. ''எங்களுக்கு இதில் முழுநம்பிக்கை உள்ளது. அரசு கோர்ட்டுகளைப் போல செலவோ, காலவிரயமோ இதில் இல்லை, தீர்ப்பும் தண்டனையும் உடனடியாகக் கிடைக்கிறது. இதுதவிர போலீசு, வனத்துறையினர், காண்டிராக்டர்கள், நிலப்பிரபுக்களின் அடக்குமுறையிலிருந்து எங்களைப் பாதகாப்பவர்களாக நக்சல்பாரிகள் செயல்படுகிறார்கள்'' என்று கிராமப்புற மக்கள் பெருமையுடன் குறிப்பிடுகிறார்கள்.

இப்புரட்சியாளர்கள் நடத்திவரும் ''ஜன்ஜவார்'' எனும் ஏட்டில், மக்கள் விரோத நடவடிக்கையில் ஈடுபட்ட சில அரசு அதிகாரிகளின் பெயர்களோடு அவர்களுக்குத் தண்டனை காத்திருப்பதாக அண்மையில் அந்த ஏட்டில் குற்றப்பத்திரிகை வெளிவந்தது. அதைத்தொடர்ந்து பீகார் மாநில செய்தித்தாட்கள் இந்த விவகாரத்தை பரபரப்பாக வெளியிட்டு பீதியூட்டியதும் அரண்டுபோன அரசு, விவசாய சங்கத்தைச் சேர்ந்த 17 செயல் வீரர்களை அண்மையில் கைது'செய்துள்ளது. சட்டவிரோத தீவிரவாத அமைப்புகள் செல்வாக்கு பெறுவதை ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது; காட்டு மிராண்டித்தனமான தீர்ப்பு வழங்கும் மக்கள் நீதிமன்றங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலாளித்துவப் பத்திரிகைகள் அலறுகின்றன. ஆனால், மக்களிடம் வேரூன்றிவிட்ட நக்சல்பாரி புரட்சிகர இயக்கத்தை கைது, சித்திரவதை - அடக்குமுறைகள் மூலமாக ஒருபோதும் அழித்துவிட முடியாது; கிராமப் புறங்களில் இணையான அரசு நடத்திவரும் புரட்சிகர இயக்கம் பெருங்காட்டுத் தீயாகப் பற்றிப்படர்வதைத் தடுத்திடவும் முடியாது.

## ஜப்பானிய எஜமானர்களுக்கு நாட்டை விற்கும் காங்கிரசு

புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் நாட்டை ஏகாதிபத்தியங்களுக்கும் உலக வங்கிக்கும் அடகு வைத்துவிட்ட காங்கிரசுத் துரோகிகள், இப்போது நாட்டின் ஒரு துண்டுப் பகுதியையே ஜப்பானிய ஏகாதிபத்தியத்துக்கு தாரைவார்க்கக் கிளம்பியுள்ளனர். இந்தியாவில் தொழில் நுட்பத்தை வளர்ப்பது, வேலைவாய்ப்பைப்

படிப்பகம்

www.padippakam.com



பெருக்குவது என்ற பெயரில் மாதிரி தொழில் நகர மொன்றை ஜப்பானின் முழுக்கட்டுப்பாட்டில் நிறுவ இந்திய அரசு முடிவு செய்துள்ளது. இம் மாதிரித் தொழில் நகரம் கர்நாடகாவில் சாத்னூர் - பிடாடி கிராமங்கள் அருகே 4,000 ஏக்கர் பரப்பளவில் நிறுவப்படும். இந்நிலப் பகுதியை ஜப்பானிய தொழில்நுட்ப வல்லுனர் குழு அண்மையில் பார்வையிட்டு ஒப்புதலும் அளித்துவிட்டது.

ஜப்பானின் புதிய தொழிற்பேட்டைக்கு சிறப்பு சுங்க வரிச் சலுகை அளிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. உற்பத்திக்கும் ஏற்றுமதிக்கும் கட்டுப்பாடுகள் எதுவும் விதிக்கப்படமாட்டாது. இங்கு அடிக்கட்டுமானச் சாதனங்களை ஜப்பான் தயாரிக்கும். அதைக் கொண்டு இதர ஏகாதிபத்தியங்கள் தமது மின்னணு உற்பத்திச் சாதனங்களை உற்பத்தி செய்யும் என்றும் இதனால் வேலை வாய்ப்பு பெருகும் என்றும் ஆட்சியாளர்கள் தமது துரோகத்தனத்துக்கு வக்காலத்து வாங்குகின்றனர். ஏற்கனவே ராஜீவ் ஆட்சிக் காலத்தில், சுதந்திர வர்த்தக வளையங்கள் அமைத்து ஏகாதிபத்தியங்களின் வேட்டைக்காடாக நாட்டைச் சீரழித்த காங்கிரசு துரோகிகள், இப்போது ஜப்பானின் நேரடி காலனியாதிக்கத்துக்கும் கதவை அகலத் திறந்துவிட்டுள்ளனர்.

இச்செய்தியை அறிந்ததும் இம் மாதிரி தொழில்நகரம் அமையவுள்ள பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் போராட்டங்களில் இறங்கத் தொடங்கிவிட்டனர். கடந்த ஜூலை மாத இறுதியில் ஜப்பானிய தொழில்நுட்ப வல்லுனர் குழு இப்பகுதியைப் பார்வையிட வந்தபோது விவசாயிகள் தமது மாட்டு வண்டிகளை குறுக்கே நிறுத்தி சாலை மறியல் போராட்டத்தை நடத்தினர். அதைத் தொடர்ந்து கவர்னர் மாளிகை முன்பு தமது குடும்பத்துடன் "தர்ணா" போராட்டமும் நடத்தியுள்ளனர். கர்நாடக முதல்வர் வீரப்ப மொய்லி இப்பகுதிக்கு வந்தபோது 5,000 விவசாயிகளின் கையெழுத்திட்ட மனுவைக் கொடுத்து தமது எதிர்ப்பைத் தெரிவித்த விவசாயிகள், அடுத்த கட்ட போராட்டத்திற்கு ஆயத்தமாகி வருகிறார்கள்.

## மே. வங்க வன்முறை அரசியல்

மே. வங்கத்தை ஆளும் போலிக் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக காங்கிரசார் நடத்தி வரும் போராட்டமும், அதற்கெதிராக போலிகள் கட்டவிழ்த்து விட்டுள்ள அடக்குமுறையும் அம்மாநிலத்தை வன்முறைக் களமாக மாற்றியுள்ளது. ஜூலை 21-ம் தேதியன்று போலிகளின் ஊழலாட்சியை எதிர்த்து 20,000-க்கும் மேற்பட்டோருடன் காங்கிரசார் நடத்திய பேரணியும் மறியலும் வன்முறையை நோக்கித் திரும்பியதும் போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 12 பேர் கொல்லப்பட்டனர். காங்கிரசுத் தலைவியும் எம்.பி.யுமான மம்தா பானர்ஜி உட்பட பலர் படுகாயமுற்றனர். அதைத் தொடர்ந்து ஜூலை 23-ந் தேதியன்று இப்படுகொலையைக் கண்டித்து காங்கிரசார் நடத்திய கடையடைப்புப் போராட்டமும் வன்முறையிலும் அடக்குமுறையிலும் போய் முடிந்தது. அதன் பிறகு நடந்த மே. வங்க சட்டமன்றக் கூட்டத்தில் காங்கிரசாரும் போலிகளும் கட்டிப் புரண்டு சண்டை, மேசை - நாற்காலி, ஒலி வாங்கி உடைப்பு என இதுவரை காணாத ரௌடித் தனத்தில் இறங்கினர்.

பின்னர் மே.வங்க 'இடதுசாரி' அரசைக் கலைக்கக் கோரியும், துப்பாக்கிச்சூடு பற்றி நீதி விசாரணை கோரியும் மம்தா பானர்ஜி உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினார். மத்திய உள்துறை அமைச்சர் நேரில் வந்து காயமுற்றோரைப் பார்வையிட்டு, முதல்வர் ஜோதிபாசுவிடம் துப்பாக்கிச்சூடு பற்றிய மாநில அரசின் நீதி விசாரணையைக் கோரிய போதிலும் 'இடதுசாரி' அரசு விசாரணை நடத்த மறுத்துவிட்டது.

"காங்கிரசு அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தும்போது, துப்பாக்கிச்சூடு நடத்தினால் அது நியாயம் என்றால், இதுவும் நியாயம் தான்" என்று தமது அடக்கு முறைக்கு 'இடதுசாரிகள்' புது விளக்கம் அளித்துக் கொண்டிருக்கின்றனர்.



போலிகளின் அடக்குமுறை ஆட்சி, இளைஞர் காங்கிரசினர் மீது காட்டுமிராண்டித் தாக்குதல்

காங்கிரசில் நிலவும் கோஷ்டிப் பூசலுக்கு அப்பாற்பட்ட, மக்கள் செல்வாக்கு பெற்ற தனிப் பெரும் தலைவியாக வளரும் நோக்கத்தோடு, மம்தா பானர்ஜி அடுத்தடுத்து போராட்டங்களை நடத்திவருகிறார். போலிகளின் கேடுகெட்ட ஆட்சியினால் மக்கள் அதிருப்தியும் வெறுப்பும் அடைந்துள்ள நிலையில் அவரது போராட்டங்களுக்கு ஆதரவும் பெருகிவருகிறது. இதனால் ஆத்திரமடைந்துள்ள போலிகளோ, வன்முறை வெறியாட்டத்தின் மூலம் சீரழிந்த தமது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ளத் துடிக்கின்றனர். இருதரப்பிலும் கொள்கை - சித்தாந்த பூர்வமான அரசியல் என்பதே கிடையாது. வன்முறையும் ரௌடித்தனமும் அடக்குமுறையும்தான் இருதரப்பிரைது அரசியலாகிவிட்டது. தமது குறுகிய அரசியல் ஆதாயத்துக்காக கட்சித் தொண்டர்களைப் பலிகொடுப்பதே மே.வங்கத்தின் அரசியல் கலாச்சாரமாக மாறிவிட்டது.

## அமெரிக்காவின் அடாவடித்தனம்

இந்தியாவுக்கு அடுத்தடுத்து பொருளாதார நெருக்கடிகளைக் கொடுத்துவரும் அமெரிக்கா, அண்மையில் மீண்டும் ஒரு வர்த்தக நெருக்கடியைத் திணித்துள்ளது. இதன் விளைவாக இந்தியாவின் கம்ப்யூட்டர் துணைச் சாதன (Software) ஏற்றுமதி 500 கோடி ரூபாய்க்கு மேல் பாதிக்கப்படும் என்று கருதப்படுகிறது.

இந்தியாவிலுள்ள கம்ப்யூட்டர் தொழில் நிறுவனங்கள் சிறப்பு "விசா" முறைகளின்படி தமது தொழில் நுட்ப பொறியாளர்களை குறிப்பிட்ட காலத்திற்கு அமெரிக்காவுக்கு அனுப்பும். அங்கு அவர்கள் அமெரிக்க நிறுவனங்களுக்கு துணைச் சாதனங்களை திட்டவரைவு (Programme) செய்து தருவார்கள். இதற்கு அமெரிக்க நிறுவனங்கள் கட்டணமும் ஊதியமும் கொடுத்து அந்த துணைச் சாதனத்தை தனது உரிமையாக்கிக் கொள்ளும். பின்னர் இந்த துணைச் சாதனை தொழில் நுட்பத்தை இந்திய நிறுவனம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொள்ளவும் அனுமதிக்கப்படும். இதர நாடுகளிலிருந்து தொழில் நுட்பத்தை இறக்குமதி செய்வதைவிட, இந்திய தொழில் நுட்பவாதிகளைப் பயன்படுத்திக் கொள்வது மலிவானது என்பதால் அமெரிக்கா இந்த வர்த்தக உடன்பாட்டைச் செய்து கொண்டது. அமெரிக்கர்களைவிட இந்திய தொழில் நுட்பவாதிகளுக்கு கூடுதல் சம்பளம் தருவதால் தமக்கு நட்டமாகிறது என்று கூறி, சம்பளத்தையும் பெருமளவு குறைத்துவிட்டது. மேலும் இச்சம்பளத்திற்கு அமெரிக்கச் சட்டப்படி வருமானவரி வசூலிக்கப்படும் என்று இப்போது அறிவித்துள்ளது. ●

www.padippakam.com

## போஃபர்ஸ்:

# ராஜீவ் ஊழல் நிரூபணம்

**சுவிஸ் நீதிமன்ற விசாரணையில் வெளிவந்த ஆதாரங்கள்.**

பாசிச ராஜீவ் சாவுடன் சேர்த்து போபர்ஸ் பீரங்கிபேரக் கொள்ளைக்கான ஆதாரங்களையும் எரித்துச் சாம்பலாக்கி விட்டதாக காங்கிரசுக் கயவாளிகள் கனவு காணும் நேரத்தில், மீண்டும் போபர்ஸ். பூதம் கிளம்பி அவர்களைப் பீதியூட்டுகி றது. கடந்த ஜூலை மாத இறுதியில், சுவிஸ் நாட்டு உச்ச நீதி மன்றம் அளித்த தீர்ப்பில், போபர்ஸ் பீரங்கிக் கொள்ளையில் பணம் பெற்றவர்கள் யார்யார் என்ற உண்மை வெளிவந்துவிட்டது.

ஆயுத பேரத்தரகர்களான இந்துஜா சகோதரர்கள் எனப்படும் சிறீசந்த் இந்துஜா, கோபி சந்த் இந்துஜா, பிரகாஷ் இந்துஜா, இந்துஜாக்களின் போலிக் கம்பெனியான ''ஜுபிளி பைனான்ஸ்'', மற்றொரு ஆயுத பேரத் தரகரான வின்சத்தா, வின்சத்தாவின் கம்பெனியான ''ஸ்வென்ஸ்கா'', ராஜீவின் குடும்ப நண்பரான ஒட்டாவியோ குவாட் ரோச்சி - ஆகிய ஏழு நபர்கள் - நிறுவனங் கள் தான் போபர்ஸ் பீரங்கி பேரத்தில் லஞ் சம் பெற்றவர்கள் என்று சுவிஸ்நாட்டு நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

### கொள்ளையர்களின் பெயர்கள் வெளிவந்தது எப்படி?

சுவீடன் நாட்டின் போபர்ஸ் நிறுவ னம், 1986-ம் ஆண்டில் இந்திய ராணுவத் துக்கு 1500 கோடி ரூபாய் அளவுக்கு பீரங்கி களை விற்பனை செய்தது. இதற்காக அந்த நிறுவனம் பல தரகர்களுக்கும் ஆட்சியாளர் களுக்கும் ஏறத்தாழ 300 கோடி ரூபாய் அள வுக்கு லஞ்சமாகக் கொடுத்தது. இதில் ராஜீவ் 64 கோடி ரூபாய் கையூட்டாகப் பெற்று, சுவிஸ் நாட்டு ரகசிய வங்கியில் பதுக்கியுள்ளார் என்று செய்திகள் வெளியா னதும், எதிர்க்கட்சிகளின் வாயடைக்க காங் கிரசு எம்.பி.யான சங்கரானந்த் தலைமை யில் நாடாளுமன்ற கூட்டுக்குழுவை அப் போது ராஜீவ் அமைத்து விசாரணை நடத் தச் சொன்னார். ''ஊழலே நடக்கவில்லை'' என்று விசாரணை நாடகமாடிய நாடாளு மன்றக்குழு சத்தியம் செய்தது. ஆனால் ஊழல் நடந்ததற்கான ஆதாரங்களை பத்தி ரிகைகள் அடுத்தடுத்து அம்பலப்படுத்தின.

இந்தச் சூழ்நிலையில் நடந்த பொதுத் தேர்தலில் காங்கிரசு தோல்வியடைந்து, வி.பி.சிங் பிரதமரானார். அதன் பின்னரே போபர்ஸ் ஊழல் பற்றிய புலனாய்வு நடவ டிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தி யக் கோர்ட்டில் முதன்முறையாக வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த ஊழலில் சந் தேகிக்கப்படும் குற்றவாளிகள் சுவிஸ் நாட்டு ரகசிய வங்கிகளில் பணத்தைப் பதுக்கி வைத்திருப்பதால், இந்த ரகசிய கணக்குகளை முடக்கி வைக்குமாறு சுவிஸ் அரசுக்கு இந்திய அரசு வேண்டுகோள் விடுத்தது. இவையாருடைய கணக்குகள் என்பதையும், சம்பந்தப்பட்ட அனைத்து விபரங்களையும் அளிக்குமாறும் புலனாய் வில் ஒத்துழைப்பு தருமாறும் இந்திய அரசு கோரியது. இந்தக் கோரிக்கையை ஏற்க லாம் என்று அந்நாட்டின் வழக்கு மன்றத் தலைவர் 1990-ம் ஆண்டிலேயே தீர்ப்ப ளித்துவிட்டார்.

ஆனாலும் கடந்த மூன்றாண்டுகளாக உண்மை வெளிவரவில்லையே, ஏன்?

இந்தத் தீர்ப்பை எதிர்த்து - அதாவது லஞ்சம் பெற்றவர்கள் யார் யார் என்ற விப ரத்தை வெளியிடக்கூடாது, இந்திய அர சுக்கு ஒத்துழைப்பு தரக்கூடாது என்று சுவிஸ் நாட்டின் உச்சநீதி மன்றத்தில் சிலர் வழக்கு தொடுத்தனர்.

வழக்கு தொடர்ந்தவர்கள் யார்? கடந்த மூன்றாண்டுகளாக இந்த விபரம் வெளிவரவில்லை. ஏனெனில் இந்த வழக் குக்க எதிராக நீதி மன்றம் தீர்ப்பளித்தால் தவிர, வழக்கு தொடர்த்தவர்கள் யார் என்ற விபரத்தை நீதிமன்றம் வெளியிடாது; ரகசி யமாகவே வைத்திருக்கும். இது சுவிஸ் நாட் டின் தனிச் சிறப்பான சட்டம்! இதன்படி அந்நாட்டு உச்சநீதி மன்றம் விசாரணை நடத்தி வந்தது.

> **சுவிஸ் வழக்கில் வெளி தெரிந்த முக்கிய குற்றவாளி குவாட்ரோச்சி, ராஜீவுக்கும் அவரது இத்தாலிய மனைவியான சோனியாவுக்கும் நெருங்கிய கூட்டாளி**



வி.பி. சிங் ஆட்சி கவிழ்ந்து ராஜீவின் பினாமியான சந்திரசேகர் ஆட்சிக்கு வந்த தும் இந்த விசாரணையை முடக்குவதற்காக பல தகிடுதத்தங்களை இக்கும்பல் செய்தது. போபர்ஸ் ஊழல் புகார்களை விசாரித்து வந்த புலனாய்வு அதிகாரிகளும் அரசு உயர் வக்கீலும் பொறுப்புகளிலிருந்து விரட்டப்பட்டு விசுவாசிகள் நியமிக்கப்பட் டனர். ராஜீவ் கும்பலின் எடுபிடியான டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதி சாவ்லாவும், அரசு உயர் வக்கீலான துளசியும் ''போபர்ஸ் ஊழல் பற்றிய முதல் தகவல் அறிக்கையே (FIR) பொய்யானது; சி.பி.ஐ. யின் புலன் விசாரணையும் செயல்பாடும் சந்தேகமளிக்கிறது; எனவே போபர்ஸ் தொடர்பான அனைத்து வழக்குகளையும் ரத்து செய்ய வேண்டும்'' என்று நீதித்துறை வரலாற்றில் இதுவரை காணாத கேலிக்கூத் துகளை நடத்தினர்.

இதன் மூலம் இந்தியக் கோர்ட்டி லேயே புலன் விசாரணையை நம்ப வில்லை; நீதிபதியும் அரசு உயர் வக்கீலும் சந்தேகிக்கின்றனர் என்று கூறி சுவிஸ் நாட் டில் நடக்கும் விசாரணையை ரத்து செய்து விட ராஜீவ் கும்பல் கேடாக முயற்சித்தது.

அதன்பிறகு நரசிம்மராவ் ஆட்சிக்கு வந்ததும், போபர்ஸ் கொள்ளையர்களில் ஒருவனான வின்சத்தா, சி.பி.ஐ. யின் முதல் தகவல் அறிக்கையை எதிர்த்து டெல்லி உயர்நீதி மன்றத்தில் ''ரிட்'' மனு தாக்கல் செய்ய உதவி செய்தது. பின்னர், ராவ் அர சில் வெளியுறவு அமைச்சராக இருந்த சோலங்கி, சுவிஸ் நாட்டுக்குச் சென்றபோது போபர்ஸ் விசாரணையை நிறுத்தி வழக்கு களை ரத்து செய்துவிடுமாறு சுவிஸ் அர சுக்கு ரகசிய கடிதம் கொடுத்து அம்பலப்பட் டுப்போனார். இதனாலேயே அவர் பத வியை இழக்க நேரிட்டது.

இத்தனை தில்லுமுல்லுகள், மூடிம றைக்கும் முயற்சிகளுக்குப் பிறகு, முந் தைய வி.பி.சிங். அரசின் கோரிக்கையின் படி, போபர்ஸ் ஊழல் பற்றி விசாரணையில் சுவிஸ் அரசு முழு ஒத்துழைப்பு தரவேண் டும் என்று கடந்த ஜூலை இறுதியில் சுவிஸ் உச்ச நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. அதோடு சுவிஸ் கோர்ட்டில் வழக்கு தொடுத்தவர்கள் யார் யார் என்ற விபரத் தையும் வெளியிட்டது.

சுவிஸ் நாட்டுச் சட்டப்படி ரகசிய வங் கிக் கணக்கு வைத்திருப்பவர்கள் மட்டும் தான் இத்தகைய வழக்கைத் தொடர முடி யும். நேரடியாக சம்பந்தமில்லாத மூன்றா வது நபர் இப்படியொரு வழக்குத் தொடர அந்நாட்டுச் சட்டப்படி உரிமையில்லை. எனவே போபர்ஸ் பீரங்கி பேரத்தில் லஞ் சம் பெற்று, அந்தப் பணத்தை சுவிஸ் வங்கி யில் ரகசியமாக பதுக்கி வைத்திருந்தவர்கள் இந்த 7 பேர்தான் என்பது இப்போது நிரூப ணமாகிவிட்டது.

இதில் இந்துஜா சகோதரர்கள் மூவ ரும், வின்சத்தாவும் ''போபர்ஸ் பீரங்கி பேரத்தில் நாங்கள் கமிஷன் பெற்றது உண் மைதான். இது தரகர்களுக்கு நிறுவனம் தரும் தொகைதான். மற்றபடி, சட்டவிரோத

படிப்பகம்

www.padippakam.com

மாக நாங்கள் எதையும் செய்யவில்லை'' என்றே கூறிவருகிறார்கள். ஆனால் ஐந்தாவது நபரான குவாட்ரோச்சி, போபர்ஸ் விவகாரத்தில் தனக்கு எந்தவிதமான தொடர்பும் இல்லை என்றுதான் இதுவரை சாதித்து வந்தார். பிறகு ஏன் அவர் சுவிஸ் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர வேண்டும்? இதுதான் கோடி ரூபாய் கேள்வி.

### யார் இந்த குவாட்ரோச்சி?

குவாட்ரோச்சி இத்தாலி நாட்டுக்காரர். இத்தாலிய தேசங்கடந்த தொழில் நிறுவனமான ''ஸ்நாம்ப்ரொகட்டி''யின் பிரதிநிதியாக அவர் இந்தியாவில் பணியாற்றி வருகிறார். அவர் ராஜீவுக்கும் அவரது இத்தாலிய மனைவியான சோனியாவுக்கும் நெருங்கிய நண்பர். சோனியாவின் தந்தை ஸ்நாம்ப்ரொகட்டி நிறுவனத்தில் ஓர் உயரதிகாரியாகப் பணியாற்றியவர். ராஜீவ் ஆட்சிக் காலத்தில் குவாட்ரோச்சி மூலமாக இந் நிறுவனம், இந்திய அரசுடன் கணக்கற்ற வர்த்தக - தொழில் ஒப்பந்தங்களின் மூலம் கோடி கோடியாய் ஆதாயமடைந்தது.

மேலும், போபர்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவரான மார்ட்டின் ஆர்ட்போ, தனது டைரிக் குறிப்பில் ''கியூ (Q) மூலம் ஆர் (R) ஐத் தொடர்பு கொண்டதாக'' எழுதியிருந்தார் என்று ஏற்கனவே அம்பலமாகியுள்ளது. ஆங்கில அகரவரிசைப்படி கியூ (Q) என்பது குவாட்ரோச்சியின் முதல் எழுத்து ஆர் (R) என்பது ராஜீவின் முதலெழுத்து.

### கொள்ளையர்களைக் கைதுசெய்! சொத்துக்களைப் பறிமுதல்செய்!

போபர்ஸ் கொள்ளை தொடர்பாக சுவிஸ் நீதிமன்றத் தீர்ப்பு வெளியான உடனேயே, கொள்ளையை மீண்டும் மூடிமறைக்கவும் குற்றவாளிகளைத் தப்பியோடச் செய்வதிலுமே காங்கிரசு துரோகிகள் குறியாக இருந்தார்கள். ''எங்கள் அன்புத் தலைவரும் தியாகியுமான ராஜீவ் காந்தியின்



இத்தாலிய கம்பெனியின் பிரதிநிதி குவாட்ரோச்சி

கௌரவத்தைக் குலைக்கும் எந்தச் செயலையும் ஒருபோதும் அனுமதிக்கவே மாட்டோம்'' என்று காங்கிரசு பெருச்சாளிகள் தமது செயற்குழுவில் தீர்மானமே போட்டுள்ளார்கள். ''போபர்ஸ் புலனாய்வைத் தொடர்ந்து நடத்துவது ராஜீவ் காந்தியின் நினைவுக்குச் செய்யும் அவமானச் செயலாகும்'' என்று காங்கிரசு மந்திரிகள் பேசிவருகிறார்கள்.

ராஜீவையும் சோனியாவையும் காப்பாற்றுவதற்காகவே சுவிஸ் கோர்ட்டில் குவாட்ரோச்சி வழக்கு தொடர்ந்தார் என்று இப்போது நிரூபணமான பிறகும்கூட, ராஜீவின் கூட்டாளி குவாட்ரோச்சி மீதும், சோனியா மீதும் வழக்கு பதிவு செய்யக்கூட ராவ் அரசு தயாராக இல்லை. ஏனெனில் சோனியா இன்று காங்கிரசுக் கட்சியின் 'ராஜமாதா'வாகிவிட்டார். இது ஒருபுறமிருக்க, மற்ற கொள்ளையர்களான இந்துஜா சகோதரர்கள், வின்சத்தா ஆகியோர் மீது வழக்குப் பதிவு செய்யவோ, விசாரணை நடத்தவோ ராவ் அரசு முன்வரவில்லை. குறைந்தபட்சம் அவர்களது ''பாஸ்போர்ட்''டை முடக்கிவைக்கக்கூட அது நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக, சுவிஸ் நீதிமன்றத் தீர்ப்பு வெளியான அடுத்த சில நாட்களிலேயே, கொள்ளைக்காரன் குவாட்ரோச்சி இந்தியாவிலிருந்து தப்பியோட எல்லா உதவிகளையும் ராவ் அரசு செய்து கொடுத்தது. வழக்கோ, விசாரணையோ, தண்டனையோ எதுவுமின்றி ராஜீவின் கூட்டாளிகள் நாட்டைவிட்டே தப்பியோடிவிட்டனர்.

இதுமட்டுமல்ல, போபர்ஸ் பீரங்கி பேரத்தில் ஊழலே நடக்கவில்லை என்று தீர்ப்பளித்த நாடாளுமன்றக்குழுத் தலைவராக இருந்த சங்கரானந்துக்கு எந்த தண்டனையுமில்லை. அவரது அண்டப்புளுகு - விசாரணை மோசடிகளுக்குப் பரிசாக ராவ் அரசில் மந்திரியாக்கப்பட்டுள்ளார். ராஜீவ் கும்பலுக்கு விசுவாசமாக, போபர்ஸ் தொடர்பான அனைத்து வழக்குகளையும் ரத்து செய்யக் கிளம்பிய அன்றைய டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதி சாவ்லா, அரசு உயர் வக்கீலான துளசி ஆகியோருக்கு என்ன தண்டனை அளிக்கப்பட்டுள்ளது? எதுவுமே இல்லை.

இவையனைத்தும் எதைக் காட்டுகின்றன? பாசிச ராஜீவின் போபர்ஸ் கொள்ளை மட்டுமல்ல; அதைவிட முக்கியமாக இத்தகைய லஞ்ச ஊழல் கொள்ளைக்கும் அதை மூடிமறைக்கும் தில்லுமுல்லு மோசடிகளுக்கும் இன்றைய அரசியலமைப்பு முழுவதுமே உடந்தையாகவும் அடிப்படையாகவும் இருக்கிறது. பாசிச ராஜீவ் போன்ற மக்கள் விரோத கிரிமினல் பேர்வழிகளின் நலன்களுக்காகவே அது உருவாக்கப்பட்டது. கோடிகோடியாய் ஊழல் என அன்றாடம் செய்திகள் வெளிவந்து நாறுமளவுக்கு லஞ்சமும் ஊழலும் கொள்ளையும் இன்றைய அரசியலமைப்பின் பிரிக்க முடியாத ஒரு அங்கமாக மாறிவிட்டது. ஊழல் இல்லாமல் அரசியலோ ஆட்சியோ கிடையாது என்று எல்லா ஓட்டுக் கட்சிகளும் அங்கீகரிக்கும் அளவுக்கு அது பொதுவிதியாக மாறிவிட்டது.

ராஜீவின் போபர்ஸ் கொள்ளை மட்டுமல்ல; அதையே அற்பமாக்கிவிடும் அளவுக்கு வரலாறு காணாத வங்கி - பங்குச் சந்தை மோசடிகள் அம்பலமாகி ஆண்டுகள் பலவாகியும், காங்கிரசுத் துரோகிகள் இன்னமும் ஆட்சியில் நீடிப்பதற்கும் இதுவே காரணம். நாடாளுமன்ற, சட்டபூர்வ 'ஜனநாயக' எல்லைக்குள் இம்மக்கள் விரோத அரசியலமைப்பை சீர்திருத்தி மாற்றியமைத்துவிடவும் முடியாது. இக்கேடுகெட்ட அரசியலமைப்பைத் தூக்கியெறிந்துவிட்டு உழைக்கும் மக்கள் தமக்கென ஒரு புதிய அரசை நிறுவிக் கொள்ளாதவரை இத்தகைய லஞ்சஊழல் கொள்ளையையோ, கொள்ளைக்காரர்களையோ ஒழித்துவிட முடியாது என்பதையே போபர்ஸ் விவகாரம் மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது.



சிறீசந்த் ஹிந்துஜா



பிரகாஷ் ஹிந்துஜா



கோபிசந்த் ஹிந்துஜா



வின்சத்தா

**போபர்ஸ் ஊழலில் ராஜீவும் அவரது கூட்டாளிகளும் தப்பித்துக் கொள்வதற்கு இந்திய அரசியலமைப்பு உடந்தையாகவே உள்ளது. இவர்களுக்கு யார் தண்டனை அளிப்பது?**

படிப்பகம்

www.padippakam.com

### அரசுத்துறை நிறுவன பங்கு மோசடி:

# ஊழல் சாக்கடையில் காங்., அதிகாரிகள் உல்லாசம்

## வரலாறு காணாத வகையில் 12000 கோடி ரூபாய்க்கு மேலாக ஏப்பம் விடப்பட்டுள்ளது.

போபர்ஸ் பீரங்கி பேர ஊழல், பங்கு சந்தைத் தரகர்கள் - வங்கி அதிகாரிகள், அரசியல்வாதிகள் கூட்டுச் சேர்ந்து நடத்திய மிகப் பெரிய ஊழல் ஆகியவை சிறியவை என்று ஒதுக்கிவிடக்கூடிய அளவுக்க, மற்றொரு ஊழல் - கொள்ளை பற்றிய அதிர்ச்சி தரக்கூடிய விவரங்கள் அண்மையில் வெளியாகியுள்ளது. ஒரு கோடி, இரண்டு கோடி அல்ல; 12,000 கோடி ரூபாய்க்கும் மேலாக ஊழல் நடந்திருக்கும் என்று இந்தக் கொள்ளையின் அளவு மதிப்பிடப்படுகிறது.

மத்திய அரசு நிறுவனங்களின் பங்குகளைத் தனியார் முதலாளிகளுக்கு படிப்படியாக விற்று விடலாம் என்று நரசிம்மராவ் அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையின் ஒரு அம்சமாக முடிவு செய்யப்பட்டது. பல அரசுத் துறை நிறுவனங்கள் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்ததே இதற்குக் காரணம் என்று சொல்லப்பட்டது. இருப்பினும் ஒவ்வொரு ஆண்டும் கணிசமாக லாபம் ஈட்டிக் கொண்டிருக்கும் அரசு நிறுவனங்களின் பங்குகளையும் விற்றுவிட மத்திய அரசு பின்னர் முடிவு செய்தது.

இதுவரையில் இருமுறை இந்தப் பங்குகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதில், நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு ஊழல் நடந்திருப்பதை மத்திய கணக்கு - தணிக்கை தலைமை அதிகாரி (சி.ஏ.ஜி) அண்மையில் அம்பலப்படுத்தியுள்ளார். அரசத்துறை பங்குகளை விற்பனை செய்ததில் நடந்த ஊழலின் விளைவாக மத்திய அரசுக்கு ரூ. 3300 கோடி நட்டம் ஏற்பட்டிருக்கும் என்பது அவரது ஆரம்ப மதிப்பீடு. ரூ. 12 ஆயிரம் கோடிக்கும் மேலாக நட்டம் ஏற்பட்டிருக்கும் என்பது தற்போதைய மதிப்பீடு.

கடந்த ஜூன் மாத இறுதியில், இம்மாபெரும் மோசடியைப் பற்றி மத்திய கணக்கு - தணிக்கை அதிகாரி ஓர் அறிக்கையாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள போதிலும், இன்றுவரை மத்திய அரசு அதிகாரபூர்வமாக எவ்வித பதிலோ, விளக்கமோ தரவில்லை. இந்த அறிக்கையின் படி மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏனெனில் இந்த ஊழல் கொள்ளையிலும் பிரதமர் ராவ் சம்பந்தப்பட்டுள்ளார். அவர் தொழில் மந்திரி பொறுப்பையும் ஏற்றிருந்த போதுதான் இந்த மோசடி நடந்துள்ளது. குறிப்பாக, பிரதமரின் முதன்மைச் செயலரான ஏ.என். வர்மாவின் தலைமையில், அவரது மேற்பார்வையில்தான் வரலாறு காணாத இந்த ஊழல் நடந்துள்ளது.

### தனியாருக்கு அரசு நிறுவனங்களை தாரை வார்க்கும் கொள்கை

நரசிம்மராவ் ஆட்சிக்கு வந்ததும் அரசுத் துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பதென ஜூலை 1991-ல் கொள்கை அளவில் தீர்மானிக்கப்பட்டது. உலக வங்கி - ஐ.எம்.எப்.பின் கட்டளைப்படி, நாடு திவாலாகும் நிலையில் உள்ளதெனக் கூறி தங்கத்தை ராவ் அரசு அடகு வைத்தது. பற்றாக் குறையைக் குறைப்பது, அரசு செலவுகளைக் குறைப்பது, சிக்கன சீரமைப்பு நடவடிக்கை என்ற பெயரில் அரசுத் துறை ஆலைகளிலிருந்து ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வீதியில் வீசியெறியப்பட்டனர். இதுவும் போதாதென்று, அரசுத்துறை நிறுவனங்களை தனியார் முதலாளிகளுக்கத் தாரை வார்க்கும் நோக்கத்தோடு, அவற்றின் 20% பங்குகளை விற்பதென அரசு தீர்மானித்தது. பங்குகளை விற்பனை செய்வதைக் கண்காணிக்கவும் மேற்பார்வையிடவும் அரசு நிறுவனங்களின் துறையிடம் (DPE) பொறுப்பு அளிக்கப்பட்டது.

இதன்படி 244 அரசுத்துறை நிறுவனங்களின் தன்மை, செயல்பாடுகள் சோதிக்கப்பட்டன. எதிர்காலத்தில் எந்தெந்த நிறுவனங்கள் லாபம் தரும், எந்தெந்த நிறுவனங்கள் தற்போது நட்டத்தில் இயங்குகின்றன என்று பரிசீலனை செய்யப்பட்டு, 41 நிறுவனங்கள் லாபமற்றவை என்று தீர்மானிக்கப்பட்டது. அதில் 10 நிறுவனங்கள் பின்னர் கைவிடப்பட்டு, 31 நிறுவனங்கள் லாபமற்றவை என்று அவற்றின் பங்குகளை விற்பதென அரசு நிறுவனங்களின் துறை தீர்மானித்தது.

இந்த 31 நிறுவனங்களிடமும் அவற்றின் பங்குகுள் என்ன விலைக்குப் போகும் என்று மதிப்பிட்டு அனுப்புமாறு அரசு நிறுவனங்களின் துறை கோரியது. அதே நேரத்தில், தனியார் பங்கு ஆராய்ச்சி நிறுவனமான 'ஸ்ட்ரேடஜிக் கன்சல்டன்ட்ஸ்' எனும் நிறுவனத்திடமும் இந்த வேலை ஒப்படைக்கப்பட்டது. டிசம்பர் 1991 இறுதியில் இப்பணி ஏறத்தாழ முடிவடைந்த நிலையில் இருந்தது. பங்குகளை விற்க வேண்டியது தான் பாக்கியிருந்தது.

பங்குச் சந்தையில் ஒரு நிறுவனத்தின் பங்குகளை விற்பது என்றால், ஒவ்வொரு பங்காக விற்பதாக இருக்காது. பல லட்சக்கணக்கான பங்குகளை அவ்வாறு விற்பதும் சாத்தியமில்லை. எனவே ஒரு சில லட்சம் பங்குகளைக் கொண்ட பண்டல்களாக விற்பது வழக்கம். இந்த முறையிலேயே 31 அரசுத்துறை நிறுவனங்களின் பங்களும் விற்பனை செய்யப்பட்டன. ஆனால் தனித்தனி நிறுவனங்களின் பங்குகளாக விற்கப்படாமல் 31 நிறுவனங்களின் பங்குகளும் கலக்கப்பட்டு பண்டல்களாக கட்டி விற்பனை செய்யப்பட்டன. அதாவது நல்ல நிலையிலுள்ள நிறுவனங்களின் பங்குகளும் நலிவடைந்த நிறுவனங்களின் பங்குகளும் கொண்டதாக பண்டல் கட்டப்பட்டிருக்கும். ஒவ்வொரு பண்டலிலும் 31 நிறுவனங்களில் ஏதாவது 9 நிறுவனங்களின் பங்குகள் இருக்கும். இவ்வாறு மொத்தப் பங்குகள் அனைத்தும் 120 பண்டல்களாகக் கட்டப்பட்டன.

### அடிமாட்டு விலையில் விற்க அதிகாரிகள் செய்த சூழ்ச்சி

நல்ல நிறுவனத்தின் பங்குகள் மட்டும் விற்பனையாகி, நலிவடைந்த நிறுவனத்தின் பங்குகள் விற்பனையாகாமல் தேங்கி விடுவதைத் தவிர்க்கவே இந்த முறை மேற்கொள்ளப்பட்டது என்று அதிகாரிகள் இதற்கு விளக்கமளித்தனர். மேலோட்டமாகப் பார்க்கும்போது இந்த விளக்கம் நியாயமானதாகத் தோன்றினாலும், உண்மையில் இது பங்குகளை அடிமாட்டு விலைக்கு விற்பதற்கான ஒரு ஏற்பாடுதான்.


ஏனெனில், நல்ல நிறுவனங்களின் பங்குகளோடு, நலிவடைந்த நிறுவனங்களின் பங்குகள் கலந்துள்ளது என்றாலே, அது பங்குச் சந்தையின் இயல்பாகவே நல்ல விலைக்குப் போகாது. இவ்வாறு இரண்டையும் கலக்காமல் விற்றிருந்தால் நல்ல நிறுவனங்களின் பங்கு உயர்ந்த விலைக்கு விற்றிருக்க முடியும்.

இரண்டவதாக, நலிவடைந்த ஆலைகளின் பங்குகள் விற்பனையே ஆகாது என்று வாதிடுவதும் தவறாகும். ஏனெனில் இந்த ஆலைகளில் எதிர்பார்த்த லாபம் வரவில்லையே தவிர, நல்ல நிலையில் இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றன. ஒருவேளை அவை இயங்காமல் மூடப்பட்டிருந்தாலும் அவற்றின் சொத்து மதிப்பு கோடிக் கணக்கில் ஆனதாகும். சொத்து மதிப்பின் காரணமாகவே இந்நிறுவனங்களின் பங்குகளும் விலைபோகக் கூடியவைதான். இருப்பினும் பங்குகள் கலக்கப்பட்டு, அற்ப விலைக்கே விற்கப்பட்டுள்ளன.

மேலும், இந்நிறுவனங்களின் பங்குகளை விற்றபோது பங்கு சந்தையில் தேக்க நிலை இல்லை. நலிவுற்ற ஆலைகளின் பங்குகள்கூட ஆகாய விலையில் விற்குமளவுக்கு சூதாட்டம் கொடி கட்டிப் பறந்தது. இருப்பினும் அரசுத் துறை நிறுவனங்களின் பங்குகள் மிகக்குறைந்த விலைக்கே விற்கப்பட்டன. உதாரணமாக, டாடா இரும்பு எஃகு ஆலையின் பங்கு ரூ. 300-க்கு பங்குச் சந்தையில் விற்கப்பட்டபோது, அரசுத் துறை நிறுவனமான இந்திய எஃகு ஆணையகத்தின் (SAIL) பங்கு ரூ. 10-க்கு விற்கப்பட்டது. லார்சன் - டூப்ரோ எனும் தனியார் மின்சாதன நிறுவனத்தின் பங்கு ரூ.170-க்கு

படிப்பகம்

www.padippakam.com




விற்கப்பட்டபோது. அரசு நிறுவனமான 'பெல்'லின் பங்கு ரூ. 70-க்கு விற்கப்பட்டது. இதேபோல ரிலையன்ஸ், பாம்பே டையிங் முதலான பெட்ரோ - ரசாயன நிறுவனங்களின் பங்கு ரூ. 300-க்கு மேல் விற்ற போது, அரசு நிறுவனமான ஐ.சி.பி.எல். லின் பங்கு வெறும் 60 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

### விதிமுறைகளை மீறி நட்டத்துக்கு விற்பனை

சாதாரணமாக எந்தவொரு நிறுவனத் தின் பங்குகளை விற்பதாக இருந்தாலும், அந்நிறுவனத்தின் நிகர சொத்து மதிப்பு, இலாபமீட்டும் திறன் மதிப்பு, அடுத்து ஐந் ாண்டுகளில் எவ்வளவு வருவாய் கிடைக் தும், சொத்து பெருகும் என்பதன் மதிப்பு ஆகியவற்றைக் கொண்டே அந்நிறுவனத் தின் பங்குகளின் முகமதிப்பு (Face Value) ர்மானிக்கப்படுகிறது. ஆனால் மிகச்சாதா ண இந்த விதிகூட அரசுத்துறை நிறுவனங் ளின் பங்கு விற்பனையில் கடைபிடிக்கப் டவில்லை.

31 அரசுத்துறை நிறுவனங்களின் பங் குகளை விற்பதென முடிவு செய்தபோது. அவற்றில் சில நிறுவனங்கள் இதற்கு திர்ப்பு தெரிவித்தன. இந்திய பெட்ரோ ிய ரசாயன நிறுவனம் (IPCL), கொச்சி பட்ரோலிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை (CRL), ஆண்ட்ரு யுலே நிறுவனம் Y) ஆகியவை தாங்களே சந்தையில் நிதி ரட்டிக் கொள்வதாகவும், அதன் மூலம் து பங்கு மதிப்பை உயர்த்திக் கொள்ள டியும் என்றும் கூறின. இந்த நேரத்தில் ங்குகளை விற்பனை செய்தால், பங்குகள் றைந்த விலைக்குப் போவதோடு, இந்நிறு னங்களில் அரசாங்கத்தின் பிடிப்பு றைந்து, தனியாரின் ஆதிக்கம் பெருகிவி ் என்றும் எச்சரித்தன.

இந்துஸ்தான் துத்தநாக நிறுவனம் L), அக்டோபர் '91-ல் நிறுவப்பட்ட து புதிய இரண்டாவது நிறுவனம் இன் ் ஓரிரு ஆண்டுகளில் உற்பத்தியைத் ாடங்கிவிடும் என்றும், அதன் பிறகு பங்

என்றும் கூறியது.

ஆனால், பங்குகள் விற்பனை செய்வதைக் கண்காணிக்கவும் மேற்பார்வையிடவும் பொறுப்பேற்றுள்ள அரசு நிறுவனங்களின் துறை (DPE) இவற்றை அறிந்தே அலட்சியம் செய்தது. இதிலே இன்னொரு கொடுமை என்ன வென்றால், இந்த 31 நிறுவனங்களில் ஒரு சில நிறுவனங்கள் லாபகரமாக இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனங்கள் ஆகும். இந்திய எஃகு ஆணையகம் (SAIL), இந்துஸ்தான் பெட்ரோலியம், மகாநகர் டெலிபோன், விதேஷ் சன்சார், ஐ.பி.சி. எல். முதலானவை லாபகரமான முதல்தர நிறுவனங்கள். பல்வேறு நாடுகளின் வர்த்தக பங்குச் சந்தைக் குறிப்பு பத்திரிகைகள் ஐ.பி.சி.எல். நிறுவனத்தை உலகின் மிகச் சிறந்த பெட்ரோ ரசாயன நிறுவனமாகப் பாராட்டியுள்ளன. இருப்பினும் தனியாருக்குத் தாரை வார்ப்பதற்கென்றே அந்நிறுவனங்களின் பங்குகள் விற்கப்பட்டுள்ளன.

### மோசடி நடந்தது எப்படி?

அரசு நிறுவனங்களின் பங்குகளை விற்பதென முடிவு செய்தபோதிலும், அரசே நேரடியாக பங்குச் சந்தை சூதாட்டத்தில் ஈடுபட முடியாது. எனவே அரசு வங்கிகளின் நிதிக் காப்புறுதிக் கழகங்கள் (Mutual fund), மற்றும் நிதி நிறுவனங்கள் (Financial Institutions), மூலமாக* பங்குச் சந்தையில் அவற்றை விற்பதென தீர்மானிக்கப்பட்டது. எந்தெந்த நிறுவனங்களின் பங்குகள்

> **பங்கு விற்ற 31 நிறுவனங்களில் ஒருசில லாபகரமாக இயங்குபவை. இருப்பினும் தனியாருக்கு தாரைவார்ப்பதற்கென்றே அந்நிறுவனங்களின் பங்குகள் விற்கப்பட்டுள்ளன.**

விற்கப்படுகிறதோ அவற்றைப் பங்குச் சந்தையில் பட்டியலிட்டு, அதன் மூலம் பங்குகளின் உண்மையான மதிப்பை அறிந்த பின்னரே அவற்றை விற்க வேண்டும் என்று விற்பனைக் கொள்கையின் 14-வது விதி கூறுகிறது. இரண்டாவதாக, தரகர்களின் கொள்ளைக்கு இடமளிக்கக் கூடாது என்று 15-வது விதி கூறுகிறது. ஆனாலும் இவையனைத்தும் அறிந்தே மீறப்பட்டுள்ளன.

இந்திய ஸ்டேட் வங்கி, அலகாபாத் வங்கி ஆகியன அரசு நிறுவனங்களின் பங்குகளை வாங்கி அவற்றை விற்பதற்கு முன்பாகவே, பங்குச் சந்தை தரகர்களிடமிருந்து ரகசியமாக விலை விபரங்களைப் பெற்றுள்ளன. உண்மையில் இது சட்ட விரோதச் செயலாகும். மேலும், பங்குச் சந்தையில் பட்டியலிட்டு விற்பதற்குப் பதிலாக, தரகர்கள் மூலமாகவே பங்குகள் விற்கப்பட்டுள்ளன. இருப்பினும் அரசு நிறுவனங்களின் துறையோ, நிதியமைச்சகமோ இதைக் கண்டு கொள்ளவே இல்லை.

அடுத்ததாக, பண்டல்களின் விலை ரூ. 5 கோடி என்று மதிப்பிடப்பட்டது. ஆனால் அவற்றின் உண்மையான மதிப்போ ரூ. 5 கோடிக்கும் மேலானது. முதல் சுற்று பங்கு விற்பனையின்போது 825 பண்டல்கள் இவ்வாறு விற்கப்பட்டுள்ளன. ஒரு பண்டலின் மதிப்பு ஏறத்தாழ 8 கோடியிலிருந்து 12 கோடி வரை உள்ள போதிலும், அவை 5 கோடி ரூபாய்க்கே விற்கப்பட்டன. இருந்த போதிலும் அரசு நிறுவனங்களின் துறை இதை தடுத்து நிறுத்திட முன்வரவில்லை

பங்குகளின் மதிப்பு தீர்மானிக்கப்பட்ட பிறகு, அரசு வங்கிகளின் நிதிக் காப்புறுதி நிறுவனங்களும், நிதி நிறுவனங்களும் மட்டுமே ஏலத்தில் விலை கேட்கும் உரிமை பெற்றவை. இதைச் சாதகமாக்கிக் கொண்டு வங்கி உயரதிகாரிகள் தகிடுதத்தங்களில் இறங்கினர். 825 பண்டல்களையும் வாங்குமளவுக்கு தம்மிடம் போதிய நிதியில்லை; ஏறத்தாழ ரூ 2,000 கோடியிலிருந்து ரூ 2,500 கோடி வரைதான் எம்மால் நிதி

படிப்பகம்

www.padippakam.com

உண்மையான மதிப்போ ரூ 8,000 கோடிக்கும் மேலானது. அரசு நிர்ணயித்த விலையான ரூ 5 கோடி என்று கணக்கிட்டாலும் கூட 825 பண்டல்களின் மதிப்பு ரூ 4,125 கோடியாகும். ஆனால் வங்கி அதிகாரிகளின் சதிவேலைகளால், முதல் சுற்று பங்கு விற்பனையின்போது ரூ 3,038 கோடிதான் அரசுக்குக் கிடைத்தது. ஏறத்தாழ 1,000 கோடி ரூபாய் நட்டமாகியது.

இது ஒருபுறமிருக்க, ஏலம் விடப்பட்டதிலும் மோசடி. சாதாரணமாக 4, 5 பேர் ஏலம் கேட்பதும், கூடுதல் விலை கேட்பவருக்கு விற்பதும்தான் ஏலமுறை. ஆனால் அரசு நிறுவனங்களின் பங்குகள் விற்பனையின் போது, அரசு வங்கிகள் ஏலமே கேட்கவில்லை. வங்கி அதிகாரிகள் செய்து கொண்ட எழுதப்படாத ஒப்பந்தத்தின் விளைவாக, பங்குகளின் முகமதிப்புக்குக் கீழாக, விலையைக் குறித்து ஏலம் கேட்டனர். இவ்வாறு செய்வது நட்டமாகும் என்று அறிந்திருந்த போதும், அரசு நிறுவனங்களின் துறை இதை மறுக்காததோடு, வங்கி அதிகாரிகளின் வசதிக்கேற்ப பங்குகளின் விலையை மேலும் குறைத்து விற்கவும் முன்வந்தது.

இதன்படி சில நிறுவனங்களின் பங்குகள் 22% விலை குறைத்து விற்கப்பட்டது. இன்னும் சில பங்குகள் 87% விலை குறைப்பு செய்யப்பட்டது. மொத்தத்தில் 31 அரசு நிறுவனங்களில் 24 நிறுவனங்களின் பங்குகள் பாதி விலைக்கும் கீழாக விற்கப்பட்டன. இதிலே இன்னொரு கொடுமை என்னவென்றால், மொத்தத்தில் 73% பங்குகள் ஒரேயொரு விலை கேட்டவருக்கே தாரை வார்க்கப்பட்டுள்ளது.

## அரசு அதிகாரிகள் - வங்கி அதிகாரிகள் தரகர்கள் நடத்திய கூட்டுக்கொள்ளை

இத்தனையும் எதற்காக? "அரசு நிறுவனங்களின் பங்குகளை குறைவான விலையில் விற்க நான் ஏற்பாடு செய்கிறேன். நீ அவற்றை வாங்கிக் கொண்டு, பங்குச் சந்தையில் பெரும் லாபத்துக்கு விற்று கொள்ளையடித்துக் கொள். எனக்கு ஒரு தொகையை கமிஷனாகக் கொடுத்துவிடு" என்று வங்கி அதிகாரிகள் பங்குச் சந்தை தரகர்களுடன் சேர்ந்து நடத்திய கொள்ளைக்காகத்தான்.

இதன்படி அலகாபாத் வங்கி அரசு நிறுவனங்களின் பங்குகளை 16 கோடிக்கு வாங்கி, கல்கத்தாவைச் சேர்ந்த அஜய் கயான் என்ற தரகருக்கு அதை ரூ 20 லட்சம் லாபத்துடன் விற்றது. அடுத்த இரு நாட்களில் அந்தத் தரகர், சிட்டிபேங்க் எனும் அமெரிக்க வங்கிக்கு ஒருகோடி ரூபாய் லாபத்துக்கு விற்று கொள்ளையடித்துள்ளார்.

இந்திய எஃகு ஆணையகம் என்ற அரசு நிறுவனம் ஏறத்தாழ 19 கோடி பங்குகளை விற்றது. ஒரு பங்குக்கு ரூ. 13.24 பைசாதான் அதற்கு கிடைத்தது. இந்த விலையில் பங்குகளை வாங்கிய தரகர் அதை ரூ. 200 என்ற விலைக்கு விற்று கொள்ளை லாபமடித்தார். இதன் விளைவாக இந்திய எஃகு ஆணையகத்துக்கு இந்த ஒரு விற்பனையில் மட்டும் ரூ 3,500 கோடிக்கு மேல் நட்டம் ஏற்பட்டுள்ளது.

இப்படி அரசுத் துறை நிறுவனங்களின் பங்குகள் விற்பனையில் 12,000 கோடி ரூபாய்க்கும் மேலாக ஏப்பம் விடப்பட்டுள்ளது. இதற்கு முன்பாக அரசுத் துறை நிறுவனங்களின் நிதியை எடுத்து பங்குச் சந்தை சூதாட்டத்திற்குப் பயன்படுத்தியதன் மூலம் அரசு அதிகாரிகள் - வங்கி அதிகாரிகள் - பங்குச் சந்தை தரகர்கள் ரூ. 5,000 கோடிக்கும் மேலாக கொள்ளையடித்தனர். அதோடு ஏராளமான அரசு நிறுவனங்களை மீளமுடியாத கடன் சுமையிலும்



ஏ.என்.வர்மா (மேலே), சுரேஷ் குமார்; அரசு அதிகாரிகள் - வங்கி அதிகாரிகள், தரகர்கள் ரூ.5000 கோடிக்கு மேல் சுருட்டியுள்ளனர்.



நட்டத்திலும் தள்ளியுள்ளனர். கடந்த ஆண்டில் வங்கி - பங்குச் சந்தை மோசடி அம்பலமானபோது, இந்தப் பகற்கொள்ளையும் வெளியே வந்து சந்தி சரித்தது.

திட்டக் கமிசன் உறுப்பினரான கிருஷ்ண மூர்த்தி எனும் தமிழ்நாட்டுப் பார்ப்பனர்தான் இந்த மோசடிகளின் மூளையாக இருந்து செயல்பட்டார். அவரது கூட்டாளியான ஏ.என்.வர்மா, பிரதமரின் முதன்மைச் செயலாளர் ஆவார். பிரதமர் ராவ் தொழிற்துறை மந்திரியின் பொறுப்பையும் ஏற்றுள்ள நிலையில், அவர் சார்பாக வர்மாதான் பங்குகள் விற்கப்படுவதை மேற்பார்வையிட்டு வந்துள்ளார். இவர் பதவிப் பொறுப்பேற்ற பிறகு, தனது மைத்துனரான சுரேஷ்குமார் என்பவரை தொழிற்துறை செயலாளராக்கிக் கொண்டார். அரசுத் துறை நிறுவனங்களின் பங்குகள் விற்பனையை மேற்பார்வையிடும் 14 பேர் கொண்ட கமிட்டியில் வர்மாவும், சுரேஷ்குமாரும் உறுப்பினர்கள். உலகவங்கியின் ஏஜெண்டு என பெயர் பெற்ற பொருளாதாரத் துறை செயலாளர் மான்டேக்சிங் அலுவாலியா இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் (IDBI) தலைவர் நட்கர்னி ஆகியோரும், வர்மாவும் சுரேஷ்குமாரும் கொண்ட நால்வர் கும்பல்தான் இக்கமிட்டியில் ஆதிக்கம் செலுத்தியது. எஞ்சிய 10 உறுப்பினர்களிடம் முறையான ஒப்புதல் பெறாமலும், அவர்களைச் சரிகட்டியும் இந்த நால்வர் கும்பல் அவசர அவசரமாகவும், ரகசியமாகவும் சட்ட விரோதமான வழிகளிலும் பங்குகளை விற்று கோடி கோடியாய் கொள்ளையடித்துள்ளது. இதிலே பிரதமர் ராவுக்கும் அவரது கட்சிக்கும் எவ்வளவு கமிஷன் கிடைத்தது என்ற ரகசியம் இன்னும் வெளிவரவில்லை.

இவ்வாறு ரகசியமாகவும், அற்ப விலையிலும் சட்ட விரோதமாகவும் அரசு நிறுவனங்களின் பங்குகளை விற்பதன் மூலம் தமது பினாமிகளைக் கொண்டு அவற்றைத் தாமே கைப்பற்றிக் கொள்ளவும், அந்நிய வங்கிகள் மூலம் பன்னாட்டு ஏகபோக தொழிற் கழகங்களுக்கும் முகந்தெரியாத ரகசிய உலகப் பேர்வழிகள், நிறுவனங்களுக்கும் போய்ச் சேரவும் இக்கும்பல் ஏற்பாடு செய்துள்ளது. ஊழல் பெருச்சாளி கிருஷ்ணமூர்த்தியின் மகன்கள் ஜெயகரும், சந்திராவும் "சீமன்ஸ்", "ஆசியா பிரௌன் பேவரி" ஆகிய அன்னிய ஏகபோக நிறுவனங்களின் அதிகாரபூர்வ ஏஜெண்டுகள். இந்நிறுவனங்களின் துணைக் கம்பெனியாக பாரத மிகுமின் நிறுவனத்தை (BHEL) மாற்றிவிடும் வகையில் இத்தரகர் கும்பல் வேலை செய்துள்ளது.

இவ்வாறு வரலாறு காணாத வகையில் 12,000 கோடி ரூபாக்கும் மேலாக ஏப்பம் விடப்பட்ட பிறகும்கூட, எதுவுமே நடக்காதது போல காட்டிக் கொண்டு ஊழலை மூடி மறைப்பதிலேயே ராவ் அரசு குறியாய் இருக்கிறது. எதிர்க் கட்சிகளோ ராவ் அரசை எதிர்க்க இன்னுமொரு ஊழல் விவகாரம் கிடைத்துள்ளதாகக் கருதுகின்றனவே தவிர, ஊழல் புதை சேற்றில் மூழ்கிக் கிடக்கும் காங்கிரசு அரசை வீழ்த்த மக்களிடம் பிரச்சாரம் செய்யக்கூட அவை முன்வரவில்லை. எதிர்க் கட்சிகளின் கையாலாகாத்தனத்தை சாதகமாக்கிக் கொண்டு மயிரிழைப் பெரும்பான்மையில் கொட்டமடிக்கும் ராவ் அரசு, ஊழல் - கொள்ளை - மோசடியையே நாட்டின் தேசியத் தொழிலாக்கிவிட்டது. அடுத்தடுத்து அரசுத் துறை நிறுவனங்கள் தனியாருக்கு தாரைவார்க்கப்பட்டு, வீதியில் வீசியெறியப்படும் லட்சக்கணக்கான தொழிலாளர்களோ குடும்பம் குடும்பமாக பட்டினிச் சாவுக்குத் தள்ளப்பட்டு வருகிறார்கள்.

○ மனோகரல

படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

★ கர்நாடக மாநில விவசாய சங்கத்தினர் மீண்டும் ஒரு முறை அமெரிக்காவைச் சேர்ந்த பன்னாட்டு ஏகபோக விதை நிறுவனம் கார்கிலுக்குத் தக்க பாடம் புகட்டியுள்ளனர். இம்முறை கர்நாடக மாநிலம் பெல்லாரியில் இயங்கும் இந்நிறுவனத்தின் விதை பதனிடும் தொழிற்சாலையைத் தாக்கி சேதப்படுத்தியுள்ளனர். அமெரிக்கத் தூதரகம் நேரிடையாகவே இது குறித்து மாநில அரசை மிரட்டியுள்ளது. ஏகாதிபத்திய அடிவருடிகளோ மூலதன இறக்குமதி பாதிக்கப்படும் என்ற அச்சத்தில் விவசாயிகளின் இந்நடவடிக்கையை 'வன்முறை' எனக் கூச்சலிட ஆரம்பித்துள்ளனர். இதே கார்கில் நிறுவனத்திற்குத் தான் குஜராத் மாநிலம் காண்ட்லா துறைமுகப் பகுதியில் ஏற்றுமதிக்காக உப்பு தயாரிப்பதற்கு 15,000 ஹெக்டேர் நிலத்தை விற்க ராவ் அரசு இரகசியமாக நடவடிக்கைகள் எடுத்துவருகிறது.

★ மே. வங்க 'மார்ச்சிஸ்டு'களின் கட்சி நாளிதழான 'ஜன சக்தி' பூர்ஷ்வா திசையை நோக்கி நகர்வதில் அடுத்த அடியை எடுத்து வைத்துள்ளது. தற்பொழுது பாலுணர்வைத் தூண்டக்கூடிய ''நீலக்கடலில் காதலர்கள்'' என்ற இத்தாலிய ஆபாசத் திரைப்படம் ஒன்றை தொலைக் காட்சியின் இரண்டாவது அலை வரிசையில் காண அழைப்பு விடுத்துள்ளது. இது பற்றிய சர்ச்சைகள் எழவே அதன் ஆசிரியர் 'உங்களை யார் பார்க்கச் சொன்னது' என எதிர் கேள்வி கேட்டு திமிராகப் பதில் அளித்துள்ளார். அதனுடன் இது போன்ற விளம்பரங்கள் தொடர்ச்சியாக வெளிவரும் என்ற வாக்குறுதி வேறு! இதேபோல் தேர்தலில் வெற்றிபெற கவர்ச்சிவாத அரசியலைத் தக்க ஆயுதமாகப் பயன்படுத்தத் தொடங்கி விட்டனர். மேற்கு வங்காளத்திலுள்ள சௌரங்கி தொகுதியை இடைத் தேர்தலில் காங்கிரசிடமிருந்து கைப்பற்ற அனில் சட்டர்ஜி என்ற செல்வாக்குமிக்க நடிகரை தங்கள் கட்சி வேட்பாளராக நிறுத்த முடிவு செய்துள்ளனர்.

★ ஜம்மு - காஷ்மீரில் போராளிகளை எதிர்த்துப் போராடுவதற்காக பா.ஜ.க. தனது சொந்த குண்டர் படையை 'கட்சியின் தனி இராணுவம்' என்ற பெயரில் வெளிப்படையாகக் கட்டத் துவங்கியுள்ளது. ஜம்முவில் நடந்த இதன் தொடக்கவிழாவில் 500 முன்னாள் இராணுவ வீரர்கள் இப்படையில் சேர்க்கப்பட்டுள்ளனர். கிட்டத்தட்ட இரண்டரை லட்சம் முன்னாள் இராணுவ வீரர்களை இதில் சேர்க்கப் போவதாக அறிவித்துள்ளதுடன், அரசிடம் இதற்காக ஆயுதக் கட்டுப்பாடு சட்டத்தைத் தளர்த்தவும் கோரியுள்ளது.

★ டங்கல் திட்டம் இன்னம் விவாதத்தில்தான் இருக்கிறது எனக் கூறினாலும் ராவ் அரசு அதை வேறுவழிகளில் நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. தற்பொழுது கர்நாடக மாநிலம் தும்கூரில் வேப்ப விதைகளை உற்பத்தி செய்ய பன்னாட்டு அமெரிக்க ஏகபோக நிறுவனத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்நிறுவனம் இவ்விதைகளைத் தான்தான் கண்டு பிடித்துள்ளதாக அமெரிக்காவில் காப்புரிமை பெற்றுள்ள ஒன்று. இதனை விமர்சித்து பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்கள் தங்களின் எதிர்ப்பை அரசிடம் தெரிவித்துள்ளதுடன் கூட்டு நடவடிக்கைகளில் இறங்கவும் திட்டமிட்டுள்ளன.

★ ஜப்பான் ஏகாதிபத்தியம் இரண்டாம் உலகப் போரின் சமயத்தில் கிட்டத்தட்ட 2 லட்சம் பெண்களை நிரந்தர விலைமாதர்களாக தனது இராணுவத்தினருக்காக வைத்திருந்ததை முதன் முறையாக ஒப்புக் கொண்டுள்ளது. இப் பெண்களில் மிகப் பெரும்பாலானோர் அச்சமயத்தில் ஜப்பானின் காலனி நாடாக இருந்த கொரியப் பெண்களாவர். பலரையும் கட்டாயப்படுத்தியும், அடக்குமுறையின் மூலமுமே இதில் ஈடுபடுத்தியுள்ளது. 'ஜப்பான் முழுப்பொறுப்பையும் இன்னும் தானே ஏற்றுக் கொள்ளவில்லை; அதனுடன் பாதி உண்மைகளை மறைக்கப் பார்க்கின்றது' என்று பல கொரிய பெண்கள் அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

★ கடந்த 1988-ம் வருடம் பள்ளி ஆசிரியை கல்பனா சுமதி என்பவரைக் கற்பழித்த வழக்கில் குற்றவாளிகளான நான்கு காவல் துறையினர் விசாரணைக்காக கடந்த மாதம் கிருஷ்ணகிரி நீதிமன்றத்திற்கு வந்திருந்தனர். அப்பொழுது தமிழ்நாடு பெண்ணுரிமைக் கழகத்தைச் சேர்ந்த 15 உறுப்பினர்கள் நீதிமன்ற வளாகத்திலேயே எதிர்த்து கோஷமிட்டனர். அதனுடன் இரண்டு போலீஸ்காரர்களை கீழே தள்ளி முகங்களில் மிளகாய்தூளையும், மணலையும் பூசியுள்ளனர், மேலும் சரமாரியாக செருப்படி கொடுத்தும் செருப்பு மாலை அணிவித்தும் தக்க மரியாதை செய்துள்ளனர். ஜெயா அரசு இவர்களைக் கைது செய்திருப்பதுடன் தனது ஏவல் நாய்களைத் திருப்திபடுத்த கொலை முயற்சி வழக்கும் தொடுத்துள்ளது.

★ விவேகானந்தர் சிகாகோவில் ஆற்றிய உரையின் நூற்றாண்டு கொண்டாட்டங்கள் என்ற பெயரில் விசுவ இந்து பரிஷத் அமெரிக்காவில் ஒரு மாநாடு நடத்தி முடித்துள்ளது. மத்தியில் ஆட்சியைப் பிடித்துவிடலாம் என் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு அலைவதால், அமெரிக்கப் பண முதலைகளை வளைக்கும் நோக்கத்துடன் 1,400 கோடி ரூபாய் செலவில் இம்மாநாட்டை நடத்தியுள்ளது. மாநாட்டு அரங்கின் வாசலிலேயே இக்கும்பலை அம்பலப்படுத்தியுள்ளனர் அங்கு வசிக்கும் இந்தியர்கள். ஆயின் மத்திய அரசோ தடை செய்யப்பட்ட அமைப்பு நடத்தும் மாநாடு என்ற செய்தியைக்கூட அமெரிக்க அரசுக்கு அனுப்பவில்லை.

★ ஐந்து மாதங்களுக்கு முன் வீட்டை விட்டு வெளியேறி நீதிமன்றம் மூலம் திருமணம் புரிந்து கொண்ட உ.பி.யைச் சேர்ந்த இளம் தம்பதிகள் சதீஷும் சரிதாவும். திருமணம் ஆனவுடனேயே பெண் வீட்டாரின் தூண்டுதலின் பேரில் கைது செய்யப்பட்டனர். இருவரும் பின் தங்களின் திருமண ஆவணங்களைக் காண்பித்த பின்புதான் விடுதலை செய்யப்பட்டனர். தற்பொழுது சமாதானம் பேச சொந்த கிராமத்திற்கு அழைத்துச் சென்று, அக்கிராம பஞ்சாயத்தின் தீர்ப்பின்படியே பெண் வீட்டாரால் கழுத்து அறுக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர். நெருங்கிய ரத்த உறவுக்காரர்களாக இருந்தும் சமூக வழக்கத்தை மீறிவிட்டனர் என்பதற்காகத்தான் இருவரும் கொடூரமான முறையில் மண்ணில் சாய்க்கப்பட்டுள்ளனர். இந்திய சமூகம் எவ்வளவு தூரம் பழமையிலும், பிற்போக்கிலும் ஊறிப்போய் பின்தங்கியுள்ளது என்பதற்கு இச்சம்பவம் ஒரு சாட்சி.

விசுவ இந்து பரிசத் 'அமெரிக்க கிளை'யினர் உலக மாநாடு ஊர்வலத்திற்காக எடுக்கும் பயிற்சி.



படிப்பகம்

Published and owned by R.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015

www.padippakam.com






மலருமுன்பே கருகிப் போன இச்சிறுவனின் பெயர் சிவமுருகன். வறுமையில் வாடிய பெற்றோர்களுக்கு 500 ரூபாய் கொடுத்து ஏய்த்து, மதுரையிலிருந்து பம்பாய்க்கு ஓட்டிச் செல்லப்பட்டான்; மிட்டாய் கடையொன்றில் கொளுந்துவிட்டு எரியும் அடுப்புகளினருகில் வேலையில் தள்ளப்பட்டான். ஓயாத வேலை - காலை 3 மணி முதல் இரவு 11 மணி வரை. கால் அசந்து நின்றாலோ முதலாளி என்ற மிருகத்தின் கொழுத்த கரங்கள் முதுகைப் புண்ணாக்கிவிடும்; கொதிக்கும் வெந்நீரை பிஞ்சுப் பாதங்களில் ஊற்றும். உழைப்பை உறிஞ்சிய கூட்டம் இவனுக்குக் கொடுத்ததோ அரை வயிற்றுக்குக்கூடப் பத்தாத கஞ்சியும், மாற்றி உடுத்திக் கொள்ள ஒரே ஒரு துணியும் மட்டும்தான். பெற்றோரை விட்டுப் பிரிந்த ஏக்கம் ஒருபுறம்; அந்த வயதுக்கே உரிய ஆசைக் கனவுகள் சிதைந்த சோகம் மறுபுறம். இந்த நரகத்தை விட்டுத் தப்பி ஓடினால்தான் வாழ்வு மலரும் என நினைத்துத் தப்பி ஓடினான். அறியாத ஊர்; புரியாத மொழி - எளிதாக மாட்டிக் கொண்டான். இரக்கமற்ற அந்தக்கூட்டம் அச்சிறுவனைப் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியால் சூடு போட்டும் இரும்புக் குழாய், டியூப் எனக் கையில் கிடைத்ததையெல்லாம் கொண்டு அடித்தும் கொன்று போட்டது. பக்கத்திலுள்ள இச்சிறுவர்களும் சிவாவுடன் கூட்டிச் செல்லப்பட்டு அந்நரகத்தில் சித்திரவதை செய்யப்பட்டவர்கள். அரசு கண்டுகொள்ளாத நிலையில் பகுதி பொதுமக்களே அக்கடை முதலாளியை போலீசில் பிடித்துக் கொடுத்தனர். தற்பொழுது இச்சிறுவர்கள் தன்னார்வக் குழு ஒன்றினால் மீட்கப்பட்டுள்ளனர்.

இது மாநிலத் தொழிலாளர் நல அமைச்சர்களின் மாநாட்டில் கலந்து கொண்ட மந்திரிப் பிரதானிகள் கூட்டம். இரண்டு நாட்கள் நடந்த இக்கூட்டத்தில் குழந்தை உழைப்பை ஒழிப்பது பற்றித்தான் காரசாரமாக விவாதித்ததாகச் சொல்கிறார்கள். ஆனால், எடுத்த முடிவோ அதே பழைய 'கள்ளு'தான். 'குழந்தை உழைப்பைப் படிப்படியாக ஒழிப்பது; தீவிரமான கண்காணிப்புக்கு நிர்வாக அமைப்புகளை ஏற்படுத்துவது' என்பவைதான். குழந்தை உழைப்பு சுரண்டப்படுவது வெளிப்படையாகத் தெரிந்தே சிவகாசி பட்டாசுத் தொழில் என்றில்லாது ஹோட்டல்கள், கார் மெக்கானிக் ஷெட்டுகள், சால்வை தரைவிரிப்புகள் நெய்தல் எனப் பலவகைப்பட்ட தொழில்களில் உள்ளது. அரசின் புள்ளிவிவரப்படியே 1 கோடியே 7 லட்சம் குழந்தை உழைப்பாளிகள் உள்ளனர். கமிட்டிகள் அதிகாரக் கும்பல்களுக்கு லஞ்சத்தை வாரிக் கொடுக்கும்; ஊர் சுற்றிவரப் பயன்படும்; வெட்டி அரட்டைக் கூடமாகும். மறுபுறம் இவை 'சிவா'வைப் பேன்ற இளந்தளிர்கள் நாளும் கருகி மடிவதை ஒருபோதும் தடுத்துவிடாது. இந்த ஏமாற்றுவித்தைக்கு நாம் முற்றுப்புள்ளி வைப்பது எப்போது?




படிப்பகம்